பக்கங்கள் : இருபத்து நான்கு
Viber : 076 636 3378

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

சங்கு 21 வள்ளுவர் ஆண்டு 2051 மாசி 08 வியாழக்கிழமை (20.02.2020) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 63

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக்கட்டணம்
1000/= + 300/= மட்டுமே

## மதிலுடன் மோதி மோ.சைக்கிள் விபத்து
### முதியவர் உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)
கட்டுப்பாட்டை இழந்த மோட்டார் சைக்கிள் மதிலுடன் மோதி விபத்துக்குள்ளானதில் முதியவர் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை 23

## ஐ.நா சபையின் தீர்மானத்திலிருந்து விலகுவதாக இலங்கை தெரிவிப்பு
### உத்தியோகபூர்வமாக பிரதமர் மகிந்த அறிவிப்பு

(கொழும்பு)
ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமை பேரவையில் நிறைவேற்றப்பட்ட 30/1 தீர்மானத்திலிருந்து விலகுவதற்கு இலங்கை அரசாங்கம் தீர்மானித்துள்ளது.
இலங்கை அரசாங்கம் இதற்கான முடிவை 23

### இலங்கை தண்டனையிலிருந்து விடுபடுவது
## மனித உரிமை மீறல்கள் இடம்பெறுவதற்கு வழிவகுக்கும்
### ஐ.நா மனித உரிமை ஆணையாளர் குற்றச்சாட்டு

(கொழும்பு)
**இலங்கையில் தண்டிக்கப்பட வேண்டியவர்கள் தண்டனையிலிருந்து விடுபடும் நிலைமை மனித உரிமை சார்ந்த வன்முறைகள் மீள இடம்பெறுவதற்கு வழி வகுத்திருப்பதாக ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் மிச்சேல் பெச்லெட் குற்றம் சுமத்தியுள்ளார்.**



எதிர்வரும் 24ஆம் திகதி முதல் ஆரம்பமாகின்ற ஐக்கிய நாடுகளின் மனித உரிமை பேரவை மாநாட்டில் அவரால் முன்வைக்கவுள்ள இலங்கை தொடர்பான 30/1 பிரேரணையின் அமுலாக்கம் குறித்த வாய்மூல அறிக்கையில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.
இந்த அறிக்கை நேற்றைய தினம் மனித உரிமைகள் பேரவையின் 23

## வவுனியாவில் கஞ்சாவுடன்
### இராணுவ வீரர் கைது

(வவுனியா)
வவுனியா கனகராயன்குளம் பகுதியில் கேரள கஞ்சாவுடன் இராணுவ வீரர் ஒருவரை கைது செய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.
இச் சம்பவம் தொடர் 23

### மரக்கறிச் சந்தைக்குள் திடீரென நுழைந்த
## கோட்டாபய

(கொழும்பு)
ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மரக்கறிச் சந்தை ஒன்றுக்கு திடீர் விஜயம் மேற்கொண்டு அங்குள்ள நிலைமைகளை ஆராய்ந்தார்.
நேற்று கலஹா பிரதேசத்தில் மரக்கறி 04

## பேருந்து மோதியதில் வர்த்தகர் உயிரிழப்பு
### கிளிநொச்சி ஏ9 வீதியில் சம்பவம்

(கிளிநொச்சி)
கிளிநொச்சி ஏ9 வீதியில் நேற்று முற்பகல் இடம்பெற்ற வீதி விபத்தில் படுகாயமடைந்த வர்த்தகர் ஒருவர் சிகிச்சை பலனின்றி மதியமே உயிரிழந்துள்ளார்.
குறித்த வர்த்தகர் கிளிநொச்சி ஏ9 வீதியில் 23

## 19ஆவது திருத்தம் மாற்றப்பட்டு பலமான அரசு உருவாக்கப்படும்
### ஜனாதிபதி கோட்டாபய தெரிவிப்பு

(கொழும்பு)
19ஆவது திருத்தத்தினை முழுமையாக மாற்றியமைத்து பலமான அரசாங்கத்தை உருவாக்கி நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியுடனான நிர்வாக கட்டமைப்பினை நிச்சயம் தோற்றுவிப்பேன் என ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.
காலகாவில் நேற்று புதன்கிழமை இடம் பெற்ற நிகழ்வின் பின்னர் அங்கு 23



## திருக்கேதீச்சரத்தில் மீண்டும் அலங்கார வளைவு



(மன்னார்)
பாடல் பெற்ற திருத்தலமான மன்னார் திருக்கேதீச்சர திருத்தலத்தின் மஹா சிவராத்திரி தினத்தை முன்னிட்டு மாந்தை திருக்கேதீச்சர வீதியில் தற்காலிக அலங்கார வளைவானது கேதீச்சரம் சிவத் தொண்டர்களால் நேற்று புதன்கிழமை காலை அமைக்கப்பட்டுள்ளது. 04

## ஜெனிவா தீர்மானத்தை முழுமையாக அமுல்படுத்துக
### ஐ.நா ஆணையாளர் மிச்சேல் பெச்லெட் இலங்கை அரசிடம் வலியுறுத்து

(ஜெனிவா)
ஜெனிவாவில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை இலங்கை அரசாங்கம் முழுமையாக அமுல்படுத்த வேண்டும் என ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர் மிச்சேல் பெச்லெட் வலியுறுத்தியுள்ளார். 23

### பட்டப்பகலில் வீடு உடைத்து
## 19 இலட்சம் ரூபாய் பெறுமதியான தங்க நகைகள் திருட்டு
### கரவெட்டி அரசடியில் சம்பவம்

(கரணவாய்)
பட்டப்பகலில் வீட்டினை உடைத்து உள்நுழைந்த திருடர்கள் அங்கிருந்த 19 இலட்சம் ரூபாய் பெறுமதியான தங்க நகைகள் மற்றும் 400 23

## ஜேர்மன் குழு இலங்கை விஜயம்

(கொழும்பு)
பொருளாதார வளர்ச்சி மற்றும் இருதரப்பு உறவுகளை மையமாகக் கொண்டு நான்கு பேரைக் கொண்ட ஜேர்மனிய பாராளுமன்றக் குழு இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளது.
இலங்கைக்கு இன்று 04

## திருகோணமலைக்கு சுற்றுலா சென்ற நான்கு மாணவர்கள்
### நீரில் மூழ்கி பரிதாபகரமாக பலி

(திருகோணமலை)
திருகோணமலை - கோமரங்கடவல பொலிஸ் பிரிவிற்குட்பட்ட மதவாச்சி குளத்தில் நீராடச் சென்ற நான்கு மாணவர்கள் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.
குறித்த மாணவர்கள் பதுளை, ஆளிஎல பகுதியில் அமைந்துள்ள பிரபல 04

# கண்ணீர் அஞ்சலி



எமது நிறுவன முன்னாள் ஊழியர்

## செல்வரட்ணம் பரமேஸ்வரன்

அவர்கள் 19.02.2020 புதன்கிழமை அன்று காலமான செய்தி அறிந்து துயர் அடைவதுடன் அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது நிறுவனம் சார்பாக ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்வதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

(2327)


உரிமையாளரும், ஊழியர்களும்
**- லிங்கன் கிறீம்கவுஸ்**

# நினைவில் நீங்காத நினைவு அலைகளில் நான்காண்டுகள்

அமரர்

## பகீசன் தெய்வேந்திரன்

(முகாமைத்துவ உதவியாளர் - பிரதேச அபிவிருத்தி வங்கி, கிளிநொச்சி கிளை (RDB))



தோற்றம் 06 . 05 . 1989

மறைவு 20 . 02 . 2016

20.02.2016ல் விபத்தில் அகால மரணமடைந்த அமரர் பகீசன் தெய்வேந்திரனின் 4ம் ஆண்டு நினைவு நாள் இன்றாகும். இன்றையதினம் அவரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்தித்து நெல்லியடி பரமானந்தா ஆச்சிரமத்துப் பிள்ளைகளுக்கு மதிய போசனமும் கற்றல் உபகரணமும் வழங்கப்படும். வல்லை இந்து மயானத்தில் சிரமதானப்பணி இடம்பெறும்.

அத்துடன் 29.02.2020 இல் உயிரைக் காக்கும் உன்னத பணியான இரத்த தானம் பிரதேச அபிவிருத்தி வங்கி யாழ் கிளை, வவுனியா உத்தியோகத்தர்கள், வாடிக்கையாளர்களால் வழங்கப்படும். இதில் கலந்து கொள்ள விரும்புபவர்கள் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

"தாரணி"
இமையாணன் கிழக்கு,
உடுப்பிட்டி.

(2318)

**- குடும்பத்தினர்**

# பேருந்தில் பயணித்த இளைஞன் வவுனியாவில் கஞ்சாவுடன் கைது

(வவுனியா)

வவுனியாவில் இருந்து கொழும்பு நோக்கி பயணித்த பேருந்தை துரத்திசென்று வழிமறித்த பொலிஸார் இளைஞர் ஒருவரை கைது செய்துள்ளனர்.

வவுனியா சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகரின் கீழ் செயற்படும் போக்குவரத்து பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவல் ஒன்றில் வவுனியாவில் இருந்து கொழும்பு நோக்கி சென்றுகொண்டிருந்த தனியார் பேருந்து ஈரட்டை பகுதியில் சென்று கொண்டிருந்த போது துரத்தி சென்று ஈரட்டை பகுதியில் வழிமறித்து இளைஞன் ஒருவரிடம் மேற்கொண்ட சோதனை நடவடிக்கையின் போது அவரது உடமையிலிருந்து 3கிலோ 720 கிராம் கேரள கஞ்சாவினை மீட்டுள்ளனர்.

மேலதிக விசாரணைகளின் பின்னர் குறித்த இளைஞனை நீதிமன்றத்தில் முற்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர். (ம-299)


## விற்பனைக்கு

வவுனியா பூந்தோட்டம் அண்ணா நகர் பிரதேசத்தில் அமைந்துள்ள சகல வசதிகளுடன் கூடிய வீடு மற்றும் காணி விற்பனைக்கு உண்டு.

(மூன்று அறைகளைக்கொண்ட வீடு, கிணறு, மலசலகூடம் அனைத்து வசதிகளையும் கொண்டது.)

தொடர்புகளுக்கு : 077 541 9370 (C-9284)


500 கோடி ரூபாய்

# தேர்தலுக்கு செலவாகும்

(கொழும்பு)

எதிர்வரும் பொதுத் தேர்தலுக்காக 500 கோடி ரூபாய்க்கும் அதிகமான தொகை செலவாகக் கூடும் என தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. பொதுத் தேர்தல் அறிவிக்கப்பட்ட பின்னர், இது தொடர்பாக அரசாங்கத்திற்கு தெளிவுபடுத்தப்படும் என தேசிய தேர்தல்கள் ஆணைக்குழுவின் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீ ரத் நாயக்க தெரிவித்துள்ளார்.

இதேவேளை, எதிர்வரும் பொதுத் தேர்தலுக்கான ஆரம்பக் கட்டப் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். 2019ஆம் ஆண்டு வாக்காளர் இடாப்பின் அடிப்படையில் எதிர்வரும் பொதுத் தேர்தலில் வாக்களிப்பதற்கான சந்தர்ப்பம் வழங்கப்படவுள்ளது. (ம)

# A/L தமிழ்ப் பெறுபேறு 2019 பாராட்டி வாழ்த்துகின்றேன்

என்னிடம் தமிழ்ப் பாடம் கற்று 'A' தரச்சித்திகளையும் 'B' தரச்சித்திகளையும் பெற்றுப் பல்கலைக்கழகம் செல்லவுள்ள என் மாணவச் செல்வங்களைப் பெருமிதத்துடன் வாழ்த்துகின்றேன்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 01. | S. சபீனா | – A | 40. | P. கஜேந்தினி | – B |
| 02. | S. சாருஜா | – A | 41. | B. பானு | – B |
| 03. | P. ஜெறின் | – A | 42. | J. இன்வன்ரா | – B |
| 04. | R. ஜீவிதா | – A | 43. | S. டிலக்சி | – B |
| 05. | J. கேதினி | – A | 44. | I. மிதுர்சலா | – B |
| 06. | S. டிலக்ஷன் | – A | 45. | B. கீர்த்தனா | – B |
| 07. | R. டிலக்சி | – A | 46. | U. துஷ்யந்தி | – B |
| 08. | T. பிரவீணா | – A | 47. | A. தர்சிகா | – B |
| 09. | R. வைஷ்ணவி | – A | 48. | P. லக்ஷனா | – B |
| 10. | L. நிதர்சன் | – A | 49. | M. மேரி றொசாரிகா | – B |
| 11. | N. அர்ச்சனா | – A | 50. | R. மேளின் பேழினி | – B |
| 12. | M. தர்சிகா | – A | 51. | T. மதீசன் | – B |
| 13. | J. மேரி றொஷானி | – A | 52. | L. யசோதரன் | – B |
| 14. | V. ஜஸ்மின் | – A | 53. | T. லியாண்டோ பயஸ் | – B |
| 15. | R. பானுஜா | – A | 54. | S. மயூரினா | – B |
| 16. | T. தீபிகா | – A | 55. | S. சிவமதுரா | – B |
| 17. | V. ஜசி | – A | 56. | T. காவினா | – B |
| 18. | J. ஜெயன்சிகா | – A | 57. | V. கோபிகா | – B |
| 19. | J. மேரி டொறீனாகுரூஸ் | – A | 58. | N. சஜீவினி | – B |
| 20. | Y. டயானா மெற்றில்டா | – A | 59. | Y. செல்விகா செல்ரன் | – B |
| 21. | K. யசோதினி | – A | 60. | R. வினுஜா | – B |
| 22. | L. காருண்யா | – A | 61. | L. கோபிதாசன் | – B |
| 23. | K. வாசவி | – A | 62. | M. ஜனனி | – B |
| 24. | A. திரியம்பகி | – A | 63. | R. வர்த்தனி | – B |
| 25. | P. சிவகரி | – A | 64. | K. செல்வாம்பிகை | – B |
| 26. | R. துலக்ஷன் | – A | 65. | T. காயத்ரி | – B |
| 27. | K. நிகஷனா | – A | 66. | N. தாரகன் | – B |
| 28. | K. துவாரகி | – A | 67. | P. சபீனா | – B |
| 29. | M. பானுஜா | – A | 68. | T. கீர்த்திகா | – B |
| 30. | A. அல்வீனாசோசை | – A | 69. | N. கீர்த்திகா | – B |
| 31. | R. விதுரன் | – A | 70. | K. கோமகள் | – B |
| 32. | L. மெல்வின் | – A | 71. | V. நிசாந்தினி | – B |
| 33. | V. லக்ஷனா | – A | 72. | R. சயந்தி | – B |
| 34. | R. விதூஷனன் | – A | 73. | T. சாத்வீகன் | – B |
| 35. | R. அபர்ணா | – A | 74. | T. வர்ணுஜா | – B |
| 36. | R. டிலக்ஷன் | – B | 75. | A. செந்தூரன் | – B |
| 37. | N. ராஜ்குகன் | – B | 76. | P. மானஷா | – B |
| 38. | N. கோபிராம் | – B | 77. | V. கிறிஸ்ரினா | – B |
| 39. | J. அர்ச்சனா | – B | 78. | R. திபிஷா | – B |

(C-9286)

## N.சத்தியவேந்தன்

B.A. (HONS), M.Phil in Tamil

| பொருளியற் கல்லூரி யாழ்ப்பாணம் | பொருளியற் கல்லூரி சுன்னாகம் | BARATHY சித்தன்கேணி |
|---|---|---|

## முதலைக் கண்ணீர் வடித்து

# சவேந்திர சில்வா விடயத்தில் அரசியல் லாபம் தேட முயற்சி

## சரத் பொன்சேகா குற்றச்சாட்டு

(கொழும்பு)

**அமெரிக்காவுக்குள் நுழைவதற்கு தடை விதிக்கப் பட்டமையால் முதலாவதாக நானே பாதிக்கப்பட்டேன். அப்போது பேசாதவர்கள் தற்போது சவேந்திர சில்வா விடயத்தில் முதலைக் கண்ணீர் வடித்துக்கொண்டு அரசியல் இலாபம் தேடுவதாக பீல்ட் மார்சல் சரத் பொன்சேகா குற்றம் சாட்டினார்.**



நாடாளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற பிணைமுறி தொடர்பான மத்திய வங்கி தடயவியல் கணக்காய்வு அறிக்கை மீதான சபை ஒத்தி வைப்பு வேளை விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இராணுவ தளபதிக்கு விதிக் கப்பட்ட தடை ஏற்றுக்கொள்ளப் படக் கூடியது அல்ல. அவருக்கு ஏற்பட்டுள்ள நிலையை நானும் எதிர்க்கின்றேன் என்றும் பொன் சேகா தெரிவித்தார்.

இலங்கை இராணுவத் தள பதி சவேந்திர சில்வா மற்றும் அவரது குடும்பத்தினர் அமெரிக் காவுக்குள் நுழைவதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத் தக்கது. (இ-7)

# இணைந்தா? தனித்தா? மார்ச் 19ம் திகதி வரை பொறுத்திருங்கள்!

## பங்காளிகளிடம் பசில் கோரிக்கை



(கொழும்பு)

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் ஆளும் ஸ்ரீலங்கா சுதந்திர பொதுஜன முன்னணி என்ற கூட்டணியில் போட்டியிடும் போது பங்காளிக் கட்சிகளை இணைத்துக் கொண்டா? அல் லது தனியாகப் போட்டியிடுவதா? என்பதைத் தீர்மானிக்க மார்ச் 19 ஆம் திகதி வரை பொறுத்திருக் குமாறு பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் பசில் ராஜ பக்ஷ கேட்டுக் கொண்டார்.

ஆளுங்கட்சி தலைவர்கள் கூட்டம் நேற்று முன்தினம் இரவு அலரிமாளிகையில் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தலைமையில் இடம்பெற்றது. முன்னாள் ஜனா திபதி மைத்திரிபால சிறிசேன வும் சுதந்திரக் கட்சியின் சார்பில் இதில் கலந்து கொண்டார்.

மேலும் ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் ஸ்தாபகரான முன்னாள் அமைச்சர் பசில் ராஜ பக்ஷ, இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலைவரான அமை ச்சர் ஆறுமுகன் தொண்டமான், முன்னாள் அமைச்சர் பேராசிரி யர் ஜி.எல்.பீரிஸ், முன்னாள் நாடா ளுமன்ற உறுப்பினர் ஏ.எல்.எம். அதாவுல்லா, ஊவா மாகாண ஆளுநர் ராஜா கொல்லுரே, நாடா ளுமன்ற உறுப்பினர் அத்துரலிய ரத்ன தேரர் உள்ளிட்ட பலரும் இதில் கலந்து கொண்டனர்.

இந்தச் சந்திப்பின் போது கூட்டணி அமைக்கப்பட்டு அத னூடாகப் போட்டியிடுகின்ற உபா யங்கள், மாவட்டந்தோறும் அமைக் கப்படவுள்ள தொகுதி அமைப் பாளர்கள், இட ஒதுக்கீடுகள் எனப் பல விடயங்கள் ஆராயப்பட்டன.

இந்நிலையில் ஸ்ரீலங்கா சுத ந்திர பொதுஜன முன்னணி என்ற கூட்டணியில் போட்டியிடும் போது பங்காளிக் கட்சிகளை இணை த்தா? அல்லது தனித்தா? போட்டி யிடுவது என்பதைத் தீர்மானிக்க மார்ச் 19 ஆம் திகதிவரை பொறுத் திருக்குமாறு முன்னாள் அமை ச்சர் பசில் ராஜபக்ஷ இந்தச் சந் திப்பில் கேட்டுக்கொண்டார்.

பொதுஜன முன்னணியிலு ள்ள பங்காளிக் கட்சிகளுடன் பேச்சு நடத்தி இறுதி முடிவு எடுக்கப்படு மென்றும் அவர் தெரிவித்தார்.

இந்தக் கூட்டத்தில் கருத்து வெளியிட்ட அமைச்சர் தொண்ட மான் சில இடங்களில் கூட்டாக வும் சில இடங்களில் தனித்தும் போட்டியிடுவது குறித்து வலியு றுத்தினார். அதேவேளை ஆளுங் கட்சியின் ஒத்துழைப்பு இருந்தால் சில இடங்களில் தனித்துப் போட் டியிட்டு வெற்றிபெறலாமென தேசிய காங்கிரஸ் தலைவர் அதாவு ல்லா தெரிவித்தார்.

மூன்றில் இரண்டு பெரும்பா ன்மை ஆதரவு தேர்தலில் சில சமயம் கிடைக்காத பட்சத்தில் தனியே கேட்கும் ப்ங்காளிக் கட் சிகளை இணைத்து தேசிய அர சாங்கமொன்றை அமைக்கலா மெனவும் அப்படியான ஒரு சந்தர் ப்பத்தில் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி மற்றும் சில கட்சிகளை இணைத்து தேசிய அரசமைக்க லாமெனவும் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

தேர்தல் விவகாரங்கள் தவிர, தொழிலற்ற ஒரு இலட்சம் பேரு க்கு தொழில்வாய்ப்பை வழங் குவது குறித்து இங்கு கலந்துரை யாடப்பட்டது. இந்த விவகாரத்தில் கூட்டத்தில் கலந்து கொண்டிரு ந்த கட்சி பிரதானிகளால் முரண் பாடான கருத்துக்கள் முன்வைக் கப்பட்டதாக தெரிவிக்கப்படுகின் றது.

குறிப்பாக தேர்தலுக்கு முன் னர் இந்த தொழில் வாய்ப்புக் களை வழங்கும்படி ஒரு தரப்பி னரும் தேர்தலுக்குப் பின் வழங் கலாம் என இன்னொரு தரப்பி னரும் பிரதமர் மகிந்த ராஜபக் ஷவிடம் கேட்டுக்கொண்டதாக பொதுஜன முன்னணியின் தக வல்கள் தெரிவிக்கின்றன. (இ-7)

# கோட்டா அரசின் வரிக் குறைப்பால் எந்த நன்மையும் கிடைக்கவில்லை

## ஆளும் தரப்பு எம்.பி.அமுனுகம கவலை

(கண்டி)

தற்போதைய அரசாங்கம் ஆட்சிக்கு வந்த பின்னர் அமுல் படுத்தப்பட்ட வரிக் குறைப்புக்கள் எதிர்பார்த்த முடிவுகளை வழங்க வில்லை என ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் நாடா ளுமன்ற உறுப்பினர் சரத் அமு னுகம தெரிவித்தார்.

கண்டியில் நேற்றுப் புதன் கிழமை இடம்பெற்ற ஊடக சந்திப்பில் உரையாற்றிய அவர், இந்த முடிவுகள் தொடர்பாக அர சாங்கம் பொருளாதார நிபுணர்க ளின் உதவியுடன் மீள் பரிசீலனை செய்ய வேண்டும் என்றும் தெரி வித்தார்.

வழங்கப்பட்ட வரிச் சலுகை களின் அடிப்படையில் அதாவது வரிகளைக் குறைத்து, வட்டி விகி தங்களைக் கைவிட்டு, கடன்க ளைத் திருப்பிச் செலுத்துவதற் கான கால அவகாசம் வழங்கப் பட்டபோது உற்பத்தி அதிகரிக்கப் பட்டிருக்க வேண்டும்.

அவ்வாறு உற்பத்திகளை அதிகரிக்க நிதி ஒதுக்கப்பட வேண் டும் என்பதுடன் தனியார் துறை யில் வேலைவாய்ப்புக்களை உரு வாக்க வேண்டும் என்றும் சரத் அமுனுகம சுட்டிக்காட்டினார்.

எனவே தனது புரிதலின் படி



மற்றும் விமர்சகர்களின் கூற்றுப் படி எதிர்பார்க்கப்பட்ட முதலீடு தற் போது பூர்த்தி செய்யப்படவில்லை என்றும் சரத் அமுனுகம தெரி வித்தார். (இ-7)

# சர்வதேச கப்பலில் கொக்கெய்ன்; இலங்கைப் படையினர் விசாரணை

(கொழும்பு)

பிரேசில் நாட்டிலிருந்து இலங் கைக் கடல் மார்க்கமாக பங்களா தேஷ் நோக்கி சந்தேகத்திற்கிட மான முறையில் பயணித்த கப்ப லொன்றை சோதனை செய்வத ற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாக கடற்படையினர் தெரிவித்தனர்.

கடற்படை மற்றும் பொலிஸா ரின் போதைப்பொருள் கடத்தல் தடுப்புப் பிரிவினர் இணைந்து இந்த சோதனை நடவடிக்கையை முன்னெடுத்ததாக மதுவரித் திணைக்களத்தின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

குறித்த கப்பலானது கொழும்பு துறைமுகத்திலிருந்து சுமார் 13 கிலோமீற்றர் தொலைவில் உள்ளதாக தெரிவிக்கப்படுகி றது.

கப்பலில் கொக்கெய்ன் அல் லது வேறு போதைப் பொருட்கள் இருக்கலாம் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் இவ்வாறு விசா ரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக அவர் மேலும் தெரி வித்தார். (இ-7)



# மேற்கிந்தியதீவுகளுக்கு எதிரான தொடர் மாற்றம் கலந்த இலங்கை அணி அறிவிப்பு



மேற்கிந்திய தீவுகள் கிரிக்கெட் அணிக் கெதிரான ஒருநாள் தொடரில் விளையாடும், மாற்றம் கலந்த இலங்கை கிரிக்கெட் அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

திமுத் கருணாரத்ன தலைமையிலான 15பேர் கொண்ட அணியில், நீண்ட இடைவெளிக்கு பிறகு சகலதுறை வீரரான திசர பெரேரா மீண்டும் அணிக்குள் உள் வாங்கப் பட்டுள்ளார்.

துடுப்பாட்ட வீரரான தனுஷ்க குணதிலக உபாதை காரணமாக பாதிக்கப்பட்டுள்ளதால், அவருக்கு பதிலாக செஹான் ஜயசூரிய அணியில் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளார்.

டெங்கு நோயால் பாதிக்கப்பட்டுள்ள விக்கெட் காப்பு துடுப்பாட்ட வீரரான நிரோஷன் டிக்வெல்ல, அணியில் இடம்பிடித்துள்ளார். எனினும், அவர் முதலாவது ஒருநாள் போட்டியில் விளையாடமாட்டார் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவர் கடைசியாக கடந்த வருடம் மே மாதம் ஒருநாள் போட்டிகளில் விளையாடியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

ஆண்டு ஆரம்பத்தில் இந்தியா அணிக் கெதிரான ரி-20 தொடரில் இடம்பெறாத ஆரம்ப அதிரடி துடுப்பாட்ட வீரரான குசல் ஜனித் பெரேரா, மீண்டும் அணிக்கு திரும்பியுள்ளார்.

சரி தற்போது அணியின் விபரத்தை பார்க்கலாம்,

திமுத் கருணாரத்ன தலைமையிலான அணியில், அவிஷ்க பெனார்டோ, குசல் ஜனித் பெரேரா, செஹான் ஜயசூரிய, நிரோஷன் டிக்வெல்ல, குசல் மெண்டிஸ், அஞ்சலோ மத்தியூஸ், தனஞ்சய டி சில்வா, திசர பெரேரா, தசுன் சானக, வனிந்து ஹசரங்க, லக்ஷன் சந்தகன், இசுரு உதான, நுவான் பிரதீப், லஹிரு குமார ஆகியோர் இடம் பெற்றுள்ளனர்.

ரி-20 தொடருக்கான இலங்கை கிரிக்கெட் அணி, இரண்டாவது ஒருநாள் போட்டிக்கு பின்னர் அறிவிக்கப்படுமென தெரிவிக்கப்பட்டுள்ளது.

இருதரப்பு தொடரில் விளையாடுவதற்காக இலங்கைக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள மேற்கிந்திய தீவுகள் கிரிக்கெட் அணி, 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் மற்றும் 2 போட்டிகள் கொண்ட ரி-20 சர்வதேச ஆகிய இரு தொடர்களில் இலங்கை கிரிக்கெட் அணி விளையாடவுள்ளது.

இரு அணிகளுக்கிடையிலான முதலாவது ஒருநாள் போட்டி, நாளை மறுதினம் கொழும்பு- எஸ்.எஸ்.சி மைதா னத்தில் நடைபெறவுள்ளது.

# அந்த மூன்று வீரர்களால்தான் கிரிக்கெட்டில் மாற்றம் ஏற்பட்டது -இன்சமாம் உல்ஹக்

கிரிக்கெட்டின் வெவ்வேறு கால கட்டங்களில் அந்த 3 வீரர்கள் தான் மாற்றத்தை ஏற்படுத்தினார்கள் என்று பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் முன்னாள் கேப்டன் இன்சமாம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் கூறியதாவது:-

3 வீரர்கள் கிரிக்கெட்டில் அதிரடியான மாற்றத்தை ஏற்படுத்தியவர்கள். அவர்கள் இந்த விளையாட்டில் புதிய நடைமுறையை கொண்டு வந்தவர்கள் ஆகும். அவர்களால் ஆக்ரோஷம், கற்பனைக்கு எட்டாத பேட்டிங், புதுமையான அணுகுமுறையை கொண்டு வர முடிந்தது.

கிரிக்கெட்டில் மாற்றத்தை ஏற்படுத்திய முதல் வீரர் விவியன் ரிச்சர்ட்ஸ். வெஸ்ட் இண்டீசை சேர்ந்த அவர் பல ஆண்டுகளுக்கு முன்பு இந்த விளையாட்டில் மாற்றத்தை ஏற்படுத்தினார். அவர் ஆடிய காலகட்டத்தில் வேகப்பந்து வீரர்களை பேட்ஸ்மென்கள் பின்னால் வந்து (பேக்புட்) ஆடுவார்கள்.

அப்போது வேகப்பந்து வீச்சை முன்னால் வந்து (பிரன்ட் புட்) ஆட முடியும் என்பதை அனைவருக்கும் உணர்த்தினார். வேகப்பந்து வீச்சை அடித்து ஆட முடியும் என்று ஒவ்வொருவருக்கும் கற்றுக் கொடுத்தவர் ரிச்சர்ட்ஸ். அவர் எப்போதுமே ஒரு சிறந்த வீரர் ஆவார்.

2-வது மாற்றத்தை கொண்டு வந்தவர் ஜெயசூர்யா. இலங்கையை சேர்ந்த அவர் முதல் 15 ஓவர்களில் வேகப்பந்தில் அதிரடியாக விளையாட முடியும் என்று நிரூபித்தவர். அவரது வருகைக்கு முன்பு பந்தை தூக்கி வானத்துக்கு அடித்தால் முறையான பேட்ஸ்மென் இல்லை என்பார்கள்.

ஆனால் அவர் முதல் 15 ஓவர்களில் வேகப்பந்தை அதிரடியாக ஆடி புதிய அத்தியாயத்தை உருவாக்கினார்.

டிவில்லியர்ஸ் மாற்றத்தை ஏற்படுத்திய 3-வது வீரர் ஆவார். தென் ஆபிரிக்காவை சேர்ந்த அவர் கிரிக்கெட்டில் 3-வது மாற்றத்தை ஏற்படுத்தியவர். இன்றைய கால கட்டத்தில் ஒருநாள் போட்டி மற்றும் 20 ஓவரில் வீரர்கள் அதிரடியாக ஆடுவதற்கு அவர்தான் காரணம்.

பொதுவாக பேட்ஸ்மென்கள் நேராக தூக்கி அடித்து ஆடுவார்கள். ஆனால் இதில் டிவில்லியர்ஸ் தான் புதுமையை புகுத்தினார். சுவிப் மற்றும் ரிவர்ஸ் சுவிப் மூலம் பந்தை தூக்கி அடித்து மாற்றத்தை ஏற்படுத்தினார்.

ரிச்சர்ட்ஸ், ஜெயசூர்யா, டிவில்லியர்ஸ் ஆகிய 3 வீரர்களுமே தொழில் நுட்பத்தை அறிந்த முறையான பேட்ஸ் மென்கள்தான். மன வலிமையும், திறமையும் மூலம் அவர்களால் மாற் றத்தை கொண்டுவர முடிந்தது.

## இங்கிலீஸ் பிரிமியர் லீக்கில் செல்சியை பந்தாடிய மன்செஸ்டர்

இங்லீஷ் பிரீமியர் லீக் கால்பந்து தொடரின் செல்சி அணிக்கெதிரான லீக் போட்டியொன்றில், மன்செஸ்டர் யுனைடெட் அணி 2-0 என்ற கோல்கள் கணக்கில் வெற்றி பெற்றுள்ளது.

இரு அணிகளும் சமபலத்துடன் போராடிய போதிலும் போட்டியின் இறுதியில் 2-0 என்ற கோல்கள் கணக்கில் மன்செஸ்டர் யுனைடெட் அணி, வெற்றிபெற்றது.

## ஜேர்மன்குழு...

வரும் இந்தக் குழு எதிர்வரும் 24ம் திகதி வரை இலங்கையில் தங்கியிருக்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

ஜேர்மனியின் அனைத்துக்கட்சிகளின் உறுப்பினர்களை உள்ளடக்கியதாக இந்த குழு அமைந்துள்ளது.

இந்தக்குழு இலங்கையில் அரசாங்கம் மற்றும் எதிர்க்கட்சி மற்றும் சிவில் சமூகத்தினரையும் சந்திக்கவுள்ளது.

குறித்த குழுவினர் சபாநாயகர் கரு ஜெயசூரியவையும் பெப்ரவரி 20ம் திகதியன்று சந்திக்கவுள்ளது.

இந்த குழுவினர் ஊவா மாகாணம் மற்றும் காலி மாவட்டத்துக்கும் விஜயம் செய்யவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.(ம)

## திருக்கேதீஸ்வரத்தில்..

கடந்த வருடம் சிவராத்திரி தினத்தன்று உடைக்கப்பட்ட குறித்த அலங்கார வளைவு தொடர்பாக மன்னார் நீதிமன்றத்தில் வழக்கு விசாரணை இடம் பெற்று வந்தது.

இதேவேளை திருக்கேதீச்சர நிர்வாகம் கடந்த 6ஆம் திகதி இந்த வருடம் சிவராத்திரி விழாவை சிறப்பாக அனுஸ்டிப்பதற்காக ஏற்கனவே வளைவு இருந்த இடத்தில் தற்காலிக வளைவு அமைப்பதற்கு நீதி மன்றில் சட்டத்தரணி ஊடாக அனுமதி கோரி இருந்தனர்.

அதற்கமைவாக மன்னார் மேல் நீதி மன்றத்தால் நேற்று புதன் கிழமையிலிருந்து எதிர்வரும் ஞாயிற்றுக் கிழமை வரையான 5 நாட்களுக்கு வளைவு அமைப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டிருந்தது. அதற்கமைவாக நேற்றைய தினம் புதன் கிழமை காலை குறித்த தற்காலிக அலங்கார வளைவு அமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.(ம -285)

## திடீரென நுழைந்த..

விற்பனை நிலையங்களுக்கு சென்று மரக்கறி விலை அதிகரித்தமைக்கு காரணம் குறித்து ஆராய்ந்தார்.

இதன் போது தங்கள் பிரதேசத்தின் மரக்கறிகள் தம்புள்ளை நகரத்திற்கு அனுப்பப்படுவதே விலை அதிகரிப்புக்கு காரணம் என வர்த்தகர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இது தொடர்பில் உரிய பிரிவினருடன் கலந்துரையாடல் மேற்கொண்டு விரைவில் தீர்வு வழங்குவதாக ஜனாதிபதி உறுதியளித்துள்ளார்.


அண்மைக்காலமாக மரக்கறிகளின் விலைகள் உயர்வடைந்துள்ள நிலையில், அவற்றை உடனடியாக குறைக்க நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதி உத்தரவிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.(ம)

## திருகோணமலைக்கு..

பாடசாலையொன்றிலிருந்து திருகோணமலை பகுதிக்கு சுற்றுலா வந்துள்ள நிலையிலேயே குறித்த அனர்த்தம் நேற்று இடம் பெற்றுள்ளது.

இதன்போது குறித்த குளத்தில் நீராடிய ஒன்பது மாணவர்களில் நான்கு பேரே இவ்வாறு நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (ம)

# மரண அறிவித்தல்



## செல்லையா செல்லம்மா

### (சீராங்கனி)

அச்சுவேலி பத்தமேனி வயிரவ கோவிலடியை பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட செல்லையா செல்லம்மர (சீராங்கனி) நேற்று (2020.02.19) புதன்கிழமை காலமானார்.

அன்னார் வயிரவி-மாணிக்கம் தம்பதிகளின் அன்பு மகளும் வேலுப்பிள்ளை - நாச்சிப்பிள்ளை தம்பதிகளின் மருமகளும் செல்லையாவின் பாசமிகு மனைவியும் சீவரத்தினம், நவரத்தினம், ஜெயரத்தினம், ஈஸ்வரி ஆகியோரின் அன்புத்தாயாரும் சோதிமுத்து, கமலாதேவி, புவனேஸ்வரி, ஜெயசீலன் ஆகியோரின் மாமியாரும் கஜெந்தன், நிசந்தஸ்ரீ, நிலாஜினி, வினோஜினி, டிலாஜினி, தனுஸ், துஷாந்தினி, சாளினி, லாவண்யா, ஆர்த்திகன், கௌஜிகாமதி, பிரசன்னா, தர்சிகா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (2020.02.21) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் மு.ப 11.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக உள்ளிவிராய் தீர்த்தக்குல மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:-

அச்சுவேலி,
பத்தமேனி

(c-9287)

குடும்பத்தினர்
0778002049

# சிவராத்திரியன்று தனியார் கல்வி நிறுவனங்கள் வகுப்புக்களை நடத்துவது பொருத்தமல்ல

## மணிவாசகர் சபை சுட்டிக்காட்டு

(யாழ்ப்பாணம்)

மகா சிவராத்திரி விரத தினத்தில் தனியார் கல்வி நிலையங்கள் வகுப்புக்களை நடத்துவது பொருத்தமான செயற்பாடல்ல எனக் காரைநகர் மணிவாசகர் சபை சுட்டிக்காட்டியுள்ளது.

சிவனுக்கு உகந்த விரதம் சிவராத்திரி. சைவ மக்கள் அனைவரும் அனுஷ்டிக்க வேண்டிய விரதம். எல்லா விரதங்களிலும் முதன்மையானதும் பன்மடங்கு சிறந்த பலன்தரும் விரதமாகும். பன்னெடுங்காலமாக நம் நாட்டில் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற விரதமாகும்.

அன்று இரவு மாத்திரமன்றி பகல் முழுவதும் விரதத்திற்குரிய நாளாகும். விரத நாளின் முதல் நாளே ஒரு பொழுது உணவுண்டு விரதத்தன்று அதிகாலையில் நீராடி சிவாலயம் சென்று சிவனை வழிபடுதல் வேண்டும்.

அன்று பகல்-இரவு முழுவதும் சிவ சிந்தனையுடன் செயற்பட வேண்டும். அன்று பகல் முழுவதும் உணவை விடுத்து இரவு நான்கு சாமப்பூசைகள் ஊடாக சிவனைத் தரிசித்து பயன் பெற வேண்டிய நாளாகும்.

மாணவப் பராயத்தினர், முழுமையாக விரதம் அனுஷ்டிக்க இயலாதவர்கள். இயன்றளவு உணவைச் சுருக்கியும் இரவு இலிங்கோற்பவ பூசை (12.30 மணி வரை) கண்விழித்தும் விரதத்தை மேற்கொள்ள வேண்டும்.

இத்தகைய சிவராத்திரி தினத்தை இறை வழிபாடு ஆற்ற அரசாங்கம் விடுமுறை நாளாக்கியுள்ளது. இந்நாளில் தனியார் கல்வி நிலையங்கள் கல்வி போதிக்க ஏற்ற நாளாகக் கருதிக் கற்பித்து வருகின்றார்கள். இது தவறான செயலாகும்.

மேன்மைகொள் சைவநீதியையுடைய சைவ சமயத்தை அவமதிக்கும் செயலாகவே இதைக் கருத வேண்டியுள்ளது. மாணவர்களும் பெற்றோர்களும் இப்புண்ணிய நாள் பற்றிச் சிந்திக்க, செயற்பட தடுக்கும் செயலாகவே கருத வேண்டியுள்ளது.

புண்ணிய விரத நாளில் இறைவனது பாதங்களைத் தொழாது கற்பதனால் யாது பயன்பெறப் போகின்றார்கள். இதனை

''கற்றதனால் ஆய பயன் என்கொல் வாலறிவன்
நற்றாள் தொழாஅர் எனின்''

என்பது வள்ளுவர் கூற்றாகும். வழிகாட்டிகளாக விளங்கும் நிர்வாகிகள், ஆசிரியர்கள் மாணவர்களைத்திசை திருப்பக்கூடாது. கற்பிப்பதோடு மாத்திரம் நில்லாது ஆன்மீக வழியில் செல்லவும் வழி காட்ட வேண்டும்.

ஆன்மீக வழியூடாக அகத் தூய்மை, புறத்தூய்மை பெறலாம். இதனூடாக மன ஒடுக்கம் பெறவும் வழிவகுக்கும். மன ஒடுக்கம் கல்வியில் உயர வழிவகுக்கும்.

எனவே சிவராத்திரி தினத்தில் கல்வி நிலையங்களில் வகுப்பு நடத்தாது சமயம் வளர ஒத்துழைக்குமாறு வேண்டிக்கொள்கின்றோம் என காரைநகர் மாணிக்கவாசகர் சபையினர் கேட்டுக்கொண்டுள்ளனர். (இ




# விமான நிலைய வரியை 50 வீதம் குறையுங்கள்

## பிரதமரிடம் ஜெயசேகரன் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையம் கடந்த 11.11.2019 ஆம் திகதி தனது முதலாவது விமான சேவையை ஆரம்பித்ததிலிருந்து விமானப் பயணச் சீட்டுக்கள் அதிகமான விலைக்கு விற்கப்படுகிறது. இது கட்டுநாயக்க விமான நிலையம் ஊடாக மேற்கொள்ளப்படும் சில இந்திய விமான நிறுவனங்களின் கட்டணத்தை விட அதிகமாகக் காணப்படுகிறது.

இது வடமாகாண சர்வதேச விமான நிலையத்தினூடாக பயணிக்கும் பயணிகளுக்கு அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது என வடமாகாண சபை முன்னாள் உறுப்பினரும் யாழ்.வணிகர் கழக உப தலைவருமான இ.ஜெயசேகரன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் விமான நிலையத்தின் ஊடாக பயணிக்கும் பயணிகளுக்கு கட்டுநாயக்க விமான நிலையம் போன்ற வசதிகள் இங்கே இல்லை. அத்துடன் பயணி ஒருவர் தனது விமானப் பயணத்தின் போது பயணப் பொதியாக சுமார் 15 கிலோவும் கையில் எடுத்துச் செல்லக் கூடியதாக 5 கிலோவுமாக 20 கிலோ மட்டுமே கொண்டுவர அல்லது எடுத்துச் செல்ல முடியும்.

இதேவேளை கட்டுநாயக்க விமான நிலையம் ஊடாக பயணிக்கும் பயணி ஒருவர் தனது விமானப் பயணத்தின் போது பயணப் பொதியாக சுமார் 30 கிலோவும் கையில் எடுத்துச் செல்லக் கூடியதாக 7 கிலோவுமாக 37 தொட க்கம் 40 கிலோ வரையான பயணப் பொதிகளைக் கொண்டு வர அல்லது எடுத்துச் செல்ல அனுமதிக்கப்படுகின்றார்கள்.

ஆகவே இப்படியான பல வசதி குறைப்பாடுகளுடன் யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையத்தினூடாக பயணிக்கும் பயணி ஒருவருக்கு அதிகளவான கட்டணத்தை அறவிடுவது ஏற்றுக் கொள்ளக் கூடியதல்ல.

இது ஒரு பிராந்திய வசதி குறைந்த விமான நிலையம், ஆகையால் விமானப் பயணச் சீட்டுடன் சேர்த்து அறவிடப்படும் விமான நிலைய வரியை (Airport Tax) 50 வீத குறைப்பு மேற்கொள்ளுமிடத்தில் பயணிகள் குறைந்த தொகைக்கு விமானப் பயணச்சீட்டினை பெறக் கூடியதாக இருக்கும்.

இதன்மூலம் வடக்கு, கிழக்கு, வடமத்திய மாகாணங்களைச் சேர்ந்த அதிகளவான பயணிகள் பயன்பெறக்கூடியதாகவும் இருக்கும். எனவே பயணிகளின் விமானச் சீட்டுக்களின் விலையை குறைத்து அவர்கள் பயன்பெற ஆவன செய்ய வேண்டும்.

இதேவேளை இலங்கையில் 14 நாட்டு நாணயங்களை இலங்கையிலுள்ள வங்கிகளில் மாற்றுவதற்கு அல்லது வங்கிகளில் பெற முடியுமென மத்திய வங்கியின் சுற்றுநிருபம் கூறுகிறது.ஆனால் நாள்தோறும் இலங்கையிலிருந்து பெருந்தொகையான பயணிகள் இந்தியாவிற்கும் இந்தியாவிலிருந்து இலங்கைக்கும் விமானம் மூலம் பயணிக்கின்றார்கள்.

ஆனால் இந்திய ரூபாவை எடுத்துச் செல்லவோ அல்லது அங்கிருந்து எடுத்து வரவோ சட்ட ரீதியான அனுமதி இல்லை. இதன் மூலம் பயணிகள் பல சிரமங்களை எதிர்நோக்குகின்றார்கள். ஆகையால் பிரதமர் மற்றும் நிதியமைச்சராகிய தாங்கள் இதனை கருத்திற்கொண்டு ஒரு குறிப்பிட்ட தொகை இந்திய ரூபாவை இலங்கையிலுள்ள வங்கியில் பெறுவதற்கும் மாற்றுவதற்கும் மற்றும் எடுத்துச் செல்வதற்கும் ஆவன செய்ய வேண்டுமென எதிர்பார்கின்றோம்.

இதன்மூலம் இந்தியாவிற்கு செல்லும் பயணிகள் விமானத்திலிருந்து இறங்கி வெளியேறும் போது தங்கள் அத்தியாவசிய தேவைக்காக இந்தியப் பணத்தைப் பயன்படுத்திக் கொள்ள முடியும்.

ஆகையால் இதை தாங்கள் சட்ட ரீதியாக அமுல்படுத்த ஆவன செய்வீர்கள் என எதிர்பார்க்கின்றேன் என வடமாகாண ஆளுநர் ஊடாக பிரதமருக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் ஜெயசேகரன் மேலும் கோரிக்கை விடுத்துள்ளார். (இ

# நலம் தரும் ஜோதிட குறியீடுகள்

## இராசிக் குறியீடுகளை பயன்படுத்தும் விதம்

மீனம்



மீன இராசியின் உருவம் இரட்டை மீன்களாகும். மீன்கள் எப்பொழுதும் தன்னையும், தன் சுற்றுப்புறத்தையும் சுத்தம் செய்து கொண்டே இருக்கும். இதனால் மீன இராசிக்காரர்கள் தன்னையும் தன் சுற்றுப் புறத்தையும் எப்பொழுதும் தூய்மையாக வைத்துக் கொள்வார்கள் எனக் கூறப்படுகின்றது.

மீன்கள் எப்பொழுதும் நீருக்குள் ஓடியாடி, துள்ளிக்குதித்து விளையாடிக் கொண்டிருப்பவை. இதனால் மீன இராசிக்காரர்கள் எப்பொழுதும் மகிழ்ச்சியாக இருப்பவர்கள் எனக் கூறப்படுகிறது. மீன்கள் எப்பொழுதும் கூட்டமாகவே வசிக்கும். இதனால் மீன இராசிக்காரர்கள் கூட்டுக் குடும்பமாக வசிப்பதை பெரிதும் விரும்புவார்கள் எனக் கூறப்படுகிறது.

எனக்குத் தெரிந்தவரை ஒரு சில குணாதிசயங்களை மட்டும் இக் கட்டுரையில் விளக்கியிருக்கின்றேன்.

# சிவ வாரத்தில் இரத்ததானம்

(யாழ்ப்பாணம்)

சிவராத்திரி விரதத்தை முன்னிட்டு சைவ மகாசபை அறிவித்துள்ள சிவ வாரத்தின் ஓர் அங்கமாக இரத்ததான முகாம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

சைவ மகா சபையின் தலைமையகமான கீரிமலை சித்தர் பீடத்தில் இன்று வியாழக் கிழமை காலை 9 மணிமுதல் இந்த இரத்ததான முகாம் இடம்பெறும். (இ-9)

# விண்ணப்பப் படிவங்களை நிரப்ப உத்தியோகத்தர்கள் நியமனம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பிரதேச செயலகத்திற்கு பிறப்பு, இறப்பு, விவாகச் சான்றிதழ் பெற்றுக்கொள்ள வரும் பொதுமக்கள் தரகர்களிடம் பணம் கொடுத்து ஏமாறாது நேரடியாகப் பிரதேச செயலகத்திற்கு வருகை தந்து அதற்கான விண்ணப்பப்படிவத்தை உரிய கிளையில் இலவசமாகப் பெற்று சேவையைப் பெற்றுக் கொள்ள முடியும்.

அத்துடன் விண்ணப்பப் படிவம் நிரப்ப முடியாதவர்களுக்கு எமது செயலக உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டு அதற்கான கருமபீடம் திறக்கப்பட்டு விண்ணப்பப்படிவங்களை நிரப்பிக் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்யப் பட்டுள்ளது என பிரதேச செயலாளர் எஸ்.சுதர்சன் அறிவித்துள்ளார். (இ

# உலகத்தாய்மொழி நாள் விழாவும் பண்டிதமணி நினைவரங்கமும் இன்று

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்கமும் சாவகச்சேரி இந்துக் கல்லூரித் தமிழ்ச்சங்கமும் இணைந்து நடத்தும் உலகத் தாய்மொழி நாள் விழாவும் பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை நினைவரங்கமும் இன்று காலை 8.30 மணியளவில் சாவகச்சேரி இந்துக் கல்லூரி பிரதான மண்டபத்தில் இடம்பெறும்.

கல்லூரி அதிபர் ந.சர்வேஸ்வரன் தலைமையில் இடம் பெறும் இந்நிகழ்வில் உலகத் தாய்மொழிநாள் பற்றிய சிறப்புரையை யாழ்ப்பாணத் தமிழ்ச்சங்கப் பெருந்தலைவர் பேராசிரியர் அ.சண்முகதாஸ்ூம் உயர்தர மாணவர்களுக்கான திருக்குறள் அறிவை மேம்படுத்தும் வகையில் நுண்பொருள் காண்பது அறிவு என்ற பொருளிலான சிறப்புரையை முனைவர் மனோன்மணி சண்முகதாஸ்ூம் பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை பற்றிய சிறப்புரையை தமிழ்ச்சங்கத் தலைவர் செந்தமிழ்ச்சொல்லருவி ச.லலீசனும் ஆற்றுவர்.

சாவகச்சேரி இந்துக் கல்லூரி மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெறும். (இ-7)

# இராசி பலன்

**மீனம்:** முத்தான வாய்ப்புக்கள் இல்லம் வந்து சேரலாம், புதிய பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், போசன சுகமுண்டு, தொழில் மேன்மையுண்டு.

**மேடம்:** நல்லவர்களை சந்தித்து நலம் காணும் நாள், ஆரோக்கியத்தில் ஏற்பட்ட அச்சுறுத்தல்கள் அகலும், தித்திக்கும் பயணங்கள் இடம் பெறலாம், அதிகாரிகள் அனுகூலமாக நடப்பர்.

**இடபம்:** குடும்பப் பொறுப்புக்கள் கூடும் நாள், உறவினர்களிடம் பேசும் போது நிதானம் தேவை, வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், கௌரவக் குறைவான நாள்.

**மிதுனம்:** புதிய பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், நண்பர்கள் நம்பிக்கைக்குரியவர்களாக நடந்து கொள்வர், பழைய சடங்கு சம்பிரதாயங்களில் நம்பிக்கை கூடும்.

**கும்பம்:** நண்பர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும், செவிகுளிரும் செய்திகள் வந்து சேரலாம், அந்நியதேச தொடர்புகள் அனுகூலம் தரும், தனவரவுகள் கிடைக்கும் வாய்ப்புண்டு.

**கடகம்:** வியாபார விருத்திக்கு வித்திடுவீர்கள், மருத்துவச் செலவுகள் குறையும், உறவினர்களின் வருக்கையால் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், கௌரவமான சம்பவங்கள் இடம்பெறலாம்.

**மகரம்:** மனதில் இனம்புரியாத குழப்பங்கள் தோன்றி மறையும், இறை வழிபாட்டு சிந்தனை மேலோங்கும் நாள், சயன சுகக் குறைவுகள் ஏற்படலாம், முயற்சிகளில் திருப்பங்கள் ஏற்படலாம்.

**சிம்மம்:** பூர்வ புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், தாழ்ந்த சுபாவமுண்டு, பிள்ளைகளின் முன்னேற்றத்தில் அக்கறை காட்டுவீர்கள் பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம் பெறலாம்.

**தனுசு:** செய்தொழிலில் கூட்டாளிகளின் ஒத்துழைப்பு ஆச்சரியப்பட வைக்கும், சவால்களை சாமர்த்தியமாக சமாளிப்பீர்கள், வழிபாட்டால் இன்பம் காண வேண்டிய நாள்.

**விருச்சிகம்:** நல்ல காரியத்திற்கு பிள்ளையார்சுழி போடும் நாள், வருமானம் திருப்திதரும் வகையில் அமையும், பக்கபலமாக இருப்பவர்களின் எண்ணிக்கை கூடும்.

**துலாம்:** உறவினர்களின் வழியில் உள்ளம் மகிழும் வகையில் சம்பவங்கள் இடம்பெறலாம், எடுத்த காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், வருமானம் திருப்தி தரும்.

**கன்னி:** நண்பர்கள் வழியில் சுப தகவல்கள் வந்து சேரலாம், சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, வாகன சுகமுண்டு, செய் தொழிலில் ஆர்வத்துடன் ஈடுபடுவீர்கள்.

**கிரகநிலை:** சுக் (மீனம்); ராகு (மிதுனம்); சூரி, புத (கும்பம்); சனி, கேது, சந், குரு,செவ் (தனுசு)

சந்திராஷ்டமம்: மிருகசீரிடம்

**20.02.2020**

மாசி 08, வியாழக்கிழமை

சூரிய உதயம் காலை 6.32 மணிக்கு

துவாதசி மாலை 6.11 மணிவரை

பூராடம் முற்பகல் 9.46 மணிவரை

சுபநேரம் 8.02-9.32 மணிவரை

இராகுகாலம் 2.02-3.32 மணிவரை

சுபமுகூர்த்த தினம்

மரியாதை கொடுத்து மரியாதை வாங்கு

வளவன்

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் உடுத்துறை மருதங்கேணி வத்திராயன் கிராம அலுவலகத்திற்கு அருகாமையில் 10 ஏக்கர் காணி விற்பனைக்கு உண்டு.

**தொடர்பு:–0755935814**

(C-819)




# ஆணைக்குழுவில் வசந்த வாக்குமூலம்

(கொழும்பு)

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் தொடர்பில் விசாரணை மேற்கொள்ளும் ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு முன்னிலையில் நாளை 21 ஆம் திகதி ஆஜராகி, முன்னாள் இராஜாங்க அமைச்சர் வசந்த சேனநாயக்க வாக்குமூலம் அளிக்கவுள்ளார்.

அத்துடன் வெளிவிவகார அமைச்சின் மூன்று அதிகாரிகளும் அதே நாளில் வாக்கு மூலம் வழங்க ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவுக்கு அழைக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை நேற்று முன்தினம் குறித்த ஆணைக்குழுவில் தேசிய ஐக்கிய முன்னணியின் தலைவர் அசாத்சாலி ஆஜராகியிருந்தார்.

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோரின் வாக்கு மூலங்களும் பெற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன், அதற்கான திகதி இன்னும் தீர்மானிக்கப்படவில்லை.

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதலில் 250 இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்ததையடுத்து அது தொடர்பில் விசாரணை மேற்கொண்டு அறிக்கை சமர்ப்பிக்க முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கடந்த செப்டெம்பர் மாதம் 21 ஆம் திகதி ஐவர் அடங்கிய ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவை நியமித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)


## சிவபூமி திருவாசக அரண்மனை சிவதெட்சணாமூர்த்தி திருக்கோவில் நாவற்குழி

# சிவராத்திரி விழா

21.02.2020 வெள்ளிக்கிழமை

- சிவராத்திரியை முன்னிட்டு விசேட பூசை வழிபாடுகள் நடைபெறும்.
- காலை 6.00 மணி முதல் இங்குள்ள 108 சிவலிங்கங்களுக்கும் அடியார்கள் தங்கள் கரங்களினால் அபிஷேகம் செய்யலாம்.
- இரவு 7.30மணி முதல் 11.30 மணிவரை இந்திய துணை தூதரகத்தின் ஏற்பாட்டில் நாட்டிய கலாகேந்திரா ஆடற்கலையக அனுசரணையில் "தெய்வீக ஆடல் அர்ப்பணம்" நிகழ்ச்சி இடம்பெறும்.

சிவபூமி அறக்கட்டளை,
திருவாசக அரண்மனை,
நாவற்குழி.

(2325)

021 221 7603, 021 567 1532
வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு



# விற்பனையாகின்றது

**தரம் 4, தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைக்கு தயாராகும் மாணவர்களுக்கான**

# நுண்ணறிவு

(வினாக்களும் விடைகளும்)

விலை 700/-

தனிப்பிரதி தேவையானோர் தொடர்பு கொள்ளவும். அனுப்பி வைக்கப்படும்.

எல்லா புத்தகசாலைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.

ஆக்கம் : ஆசிரியர் M. சுகந்தன் *(B.A, Dip. in. Teaching, PGDE)*
(மானிப்பாய் மகளிர் கல்லூரி)

எமது வெளியீடு :
மாணவர்களுக்கான அத்தியாவசிய கற்றல் தேர்ச்சிகள் முதன்மை நிலை 01 (தரம் 1, 2) முதன்மை நிலை 02 (தரம் 3, 4), முதன்மை நிலை 03 (தரம் 5)

வெளியீடு : **யுனிலங்காஸ் பப்ளிக்கேஷன்,**
இல. 10 – 1/5, *(No. 342, Trust Complex, Sea Street)* முதலாம் மாடி,
ஜிந்துப்பிட்டி வீதி, கொழும்பு – 13. தொலைபேசி : 077 – 6258778

# எல்லோரும் 100 வயது வரை "நல் ஒழுக்கம்"

எல்லோருக்கும் ஏற்ற முதலுதவி, சுகாதார மருத்துவ சீர்முறைகள் (FIRST - AID FOR MIRAVLE EMERGEGCIES) நிறையவே எங்களுக்கு தெரியாது.

அறியாய உயிர்ச்சேதம், அங்கவீனம், புலன்கள் பாதிப்பு, சொத்துக்கள், பொருட்கள் பாதிப்பு, தேவைதானா? விபத்துக்களா? **WELL IN TIME**

மனித இயற்கை அனர்த்தங்களுக்கு திட்டமிடுதல், தயார் நிலை க்கு வருதல், முகம் கொடுத்தல் (வரவேற்பு முகாமில் தங்குதல் மீள் வருதல் / அறியாமை பிழையில்லை. என்னிடம் **Awareness Programme** இரண்டு மணித்தியாலம் பயிற்சி பெறுங்கள்.)

"FIRST COME FIRST"
மணியோசை கந்தையா அருந்தவராஜன்
S.B.ST.JOHN.UK BY QUEEN
077 321 2512

(2320)

# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1992 இந்து
நட்சத்திரம்: மிருகசீரிடம் 1
கி.பா: செவ் 7 இல்
உயரம்: 154cm
தகைமை/தொழில்: B.Sc Management Field executive (private)
எதிர்பார்ப்பு: வெளிநாடு
தொ.இ: B/10516

பிறப்பு: 1983 இந்து
நட்சத்திரம்: அனுசம் 4
கி.பா: 35 1/4 செவ் 4 இல்
உயரம்: 5″
தகைமை/தொழில்: மருந்துக் கலவையாளர்
எதிர்பார்ப்பு: அரச உத்தியோகம்
தொ.இ: B/10517

பிறப்பு: 1986 இந்து
நட்சத்திரம்: பூராடம் 3
கி.பா: 35 ½ செவ் 2 இல்
உயரம்: 5′6″
தகைமை/தொழில்: B.Sc, Quantity Surveyor
எதிர்பார்ப்பு: அழகிய படித்த பெண்
தொ.இ: B/10518

பிறப்பு: 1982 கிறிஸ்தவம்
உயரம்: 5′10″
தகைமை/தொழில்: MBA (UK), முகாமையாளர்
எதிர்பார்ப்பு: படித்த பெண்
தொ.இ: B/10519

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1994 இந்து
நட்சத்திரம்: பூரட்டாதி 2
கி.பா: செவ் 5 இல்
தகைமை/தொழில்: B.A External
எதிர்பார்ப்பு: பட்டதாரி நிரந்தர வேலை
தொ.இ: G/10531

பிறப்பு: 1985 இந்து
நட்சத்திரம்: ரேவதி 4
கி.பா: 16 செவ் 6 இல்
உயரம்: 5′1″
தகைமை/தொழில்: க.பொ.த.சாதாரணதரம்
எதிர்பார்ப்பு: வெளிநாடு
தொ.இ: G/ 10533

பிறப்பு: 1983 இந்து
நட்சத்திரம்: உத்திரட்டாதி 2
கி.பா: 27 ¼ செவ் 4 இல்
உயரம்: 5″
தகைமை/தொழில்: கலைமாணி பட்டதாரி, அபிவிருத்தி உத்தியோகத்தர்
எதிர்பார்ப்பு: சாதாரண அரச தொழில் புரியும் மணமகன்
தொ.இ: G/ 10535

பிறப்பு: 1989 இந்து
நட்சத்திரம்: பரணி 3
கி.பா: 18 செவ் 2 இல்
உயரம்: 5′3″
தகைமை/தொழில்:BBA, வங்கி உத்தியோகத்தர்
எதிர்பார்ப்பு: பட்டதாரி, அரச உத்தியோகம்
தொ.இ: G/ 10538

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.



# ஈழத்து சீரடியில்

## மஹா சிவராத்திரி விழா

**21.02.2020**

*அன்பான அடியார்களே!*

**மாலை 6.30 மணிக்கு:-** விசேட அபிஷேகம் வசந்தமண்டப பூசை

**இரவு 7.30 மணிக்கு:-** சாயி நாதரின் வீதி உலா

**நள்ளிரவு 12 மணிக்கு:-** பக்தர்கள் தமது கரங்களால் சிவலிங்க பெருமானுக்கும், பாபாவுக்கும் அபிஷேகம் செய்யலாம்.

**அதிகாலை 1 மணிக்கு:-** விசேட 108 சங்காபிஷேகம்

**அதிகாலை 5 மணிக்கு:-** திருமஞ்சன தீர்த்தம்.

(2310)


ஈழத்து சீரடி சாயி மந்திர்"
214, நாவலர் வீதி, நல்லூர்,
யாழ்ப்பாணம்.

தொ.பே.இல:
077 722 2568,
077 481 5336.

# பொய்யாயின வெல்லாம் போயகலும் படியாக “மெஞ்ஞான மா(க்)கியது ஸ்ரீ மகா ருத்ரயாகம்”

சிவபூமி எனப்படும் இலங்கையின் வடபால் அமைந்த புண்ணிய பூமி நல்லூராகும். ஒரு காலத்தில் நல்லூரானது யாழ்ப்பாணத்தின் தலைநகராகவும் இராசதானியாகவும் விளங்கிற்று. அதுபோல ஒரு காலம் இனியும் வரலாம். எப்படியென்றால் நல்லூர் முருகனின் அருளாட்சி உலகெங்கணும் அதிர்வலைகளைப் பிரவாகித்த வண்ணம் உள்ளது.

அதேபோல மிகவும் புராதன ஆலயமாக நல்லூரின் கண்ணே விளங்குவது நல்லூர் சிவன் ஆலயமாகும். மூர்த்தி, தல, தீர்த்த விஷேடமும், அற்புதம், அதிசயம், அழகொழுகு சிலைமலிந்த ஆலயமும் இதுவாகும்.



ஆகம விதிப்படி அமைக்கப்பட்ட இவ்வாலயத்தில் திருவண்ணாமலையானையும், தில்லைச்சிதம்பரப் பெருமானையும், மதுரை மீனாட்சியையும் திருச்செந்தூர் முருகனையும் உளமாரக் கண்டு வணங்கும் பாக்கியத்தை அனுபவிக்கலாம். சிவமயமானதவப் பேறு இங்குண்டு.

சிலைபொலிந்த ஆலயமாகவும் கலை மலிந்த கோபுரக் கோயிலாகவும், கோமுகி பாலிக்கும் தீர்த்தத் திருப்பதியாகவும், சிவமயப் பேறுடைய தவம் பெறு அருட்பதியாகவும் நல்லூர் சிவன் கோவில் விளங்குகின்றது.

நாவலர் பெருமானும் யோகர் சுவாமிகளும் உளம் பெருக்கிய தலையாயபதியாக இந்த ஆலயம் விளங்குகிறது. மேலும் அந்தணச் சிவாச்சாரியார்களின் பய பக்தியான மந்திரங்களும், பூஜைகளும், ஒழுக்கமும், ஈடுபாடும், எம்பெருமானையும் எம்பெருமாட்டியையும் கவருவனவாகவும் மகிழ்விப்பனவாகவும் மகி மைப்படுத்துவனவாகவும் அமைந்துள்ளன.

இந் நிலையில் இந்த உலகத்தின் கண் வாழ்கின்ற அனைத்து ஜீவராசிகளின் சேமகத்திற்காகவும், உலக நன்மைக்காகவும், நமது இலங்கைத் திருநாட்டின் சுபீட்சத்திற்காகவும், வருங்காலத்தில் ஏற்படவுள்ள இயற்கைச் சீற்றங்களின் கொடூரங்களில் இருந்து மனிதர்களையும் ஏனைய உயிரினங்களையும் மரவணங்களையும் பாதுகாப்பதற்காகவும் மற்றும் நோய் நொடி, துன்ப துயர், வன்மம் வன்கொடுமை, பயமுறுத்தல் பலாத்காரம், கொலை கொள்ளை, வறுமை பஞ்சம், பசி பட்டினி, அகாலங்கள் விபத்துக்கள், அநீதி அடக்குமுறை, பகிடிவதை பாலியல் வதை, பழிக்குப் பழி, இலஞ் சம் போதை, மது மாது இவையாவற்றிலிருந்து விடுபட்டு மக்கள் நிம்மதியாகவும் ஆரோக்கியமாகவும் நீடித்த ஆயுளோடும் நீடுவாழ தவமிருந்து இயற்றப்படுவதே இந்த உன்னதமான ருத்ரயாகமாகும்.

இலங்கையில் முதல் முறையாக நடை பெறும் இந்த ஸ்ரீ மஹா ருத்ரயாகம் நல்லூரிலிருந்து உலகெங்கும் பேறாகும் படியாக தைத் திங்கள் 24 ஆம் நாள் 07.02.2020 ஆம் திகதி தொடக்கம் 10.02.2020 ஆம் திகதி வரை தொடர்ந்து நான்கு நாட்கள் ஆறு காலங்களாக வேத சிவாகமங்களில் சொல்லியதன் பிரகாரம் எம்பெருமாட்டி சகித எம்பெருமானை மகிழ்விக்கும் படியாக அந்தண சிவாச்சாரியார்களால் நியமகிரம ஒழுங்கின்படி நடாத்தப்பெற்றது.

பிரம்ம ஞான வான்களாகிய அந்தண சிவாச்சாரியார்கள், அந்தண சமூகத்தவர்கள், சைவக்குருமார்கள், ஆன்மீகப் பெரியோர்கள், ஆதீன முதல்வர்கள், பக்த அடியவர்கள், அரச, அரச சார்பற்ற தலைவர்கள், சிவத்தமிழ் வித்தகர்கள், ஆசிரியர்கள், பேராசிரியர்கள், மாணவர்கள், சிறுவர்கள், பெற்றோர்கள், நொந்தவர்கள், நோன்பிருந்தவர்கள், மாற்றுத்திறனாளிகள், பிரம்மச்சாரிகள், தனித்து விடப்பட்டோர், மணமாகாத கன்னிப் பெண்கள், அவமானத்திற்கு ஆட்பட்டவர்கள், அரசியல்வாதிகள், ஊடகவியலாளர்கள், வர்த்தகப் பிரமுகர்கள், உழைப்பாளிகள் எனப்பல அடியவ மேதாவிகள் யாகத்தில் வரமாகினர்.

“மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம் வைகலும்
எண்ணில் நல்ல கதிக்கு யாதுமோர் குறைவில்லை
கண்ணில் லஃதுறும் கழுமல வளநகர்ப்
பெண்ணில் நல்லாளொடும் பெருந் தகை இருந்ததே”

மேற்படி ஆலயத்தில் அருளொழுகும் அழகு பெருமாட்டியாக உமாதேவியாரும், வேதமந்திரங்களின் சாரமாகவும் வாரமாகவும் வரமாகவும் பிரவாகிக்கும் பெருமானாக சிவபெருமானாரும் பளிச்சிடும் தங்க நிறத்தில் எழுந்தருள வைத்து பெரிய யாக குண்டம் சமைத்து வகைவகையான விதம் விதமான சமித்தும், இதம் பதமான தானிய மூலிகைகளும், சந்தனம் முதலான வாசனைத் திரவியங்களும் ஐஸ்வரியங்களும், நவதானியங்கள், நவமணிகள், பலசரக்குகள், பழ வகைகள், காய்கறிகள், பூக்கள், பஞ்ச கௌவியங்கள், ஐம்பொன், வஸ்திரம் கற்பூர தூப தீப நெய் பொலியுமாறு அக்கினி வளர்க்கப்பட்டு அதிலே யாவற்றையும் ஆகுதியாக்கி ருத்ரயாகம் வேத மந்திர உச்சாட்டனப் பாவனையால் அதிக அதீத புண்ணியங்களை இம்மண்ணுக்கு ஈகை புரிந்தது.

இராமாயண காலத்திலும், மகாபாரத காலத்திலும் மன்னர்களால் தத்தம் நாட்டினது ஷேமம் கருதி இந்த யாகம் மிகவும் பிரமாண்டமாக செய்யப்பட்டு வேண்டிய பலனை தமதாக்கிக் கொண்டனர்.

கலியுகத்திலும் இலங்கையிலும் இந்தியாவிலும் பல்வேறு யாகங்கள் சர்வலோகச் சுபீட்சத்திற்காக வளர்க்கப்படுகின்றன. உருத்திர தாண்டவம் செய்து மகிழும் சிவபெருமானை, யாகம் வேள்வி, பஜனை, ஆராதனை, மந்திர செபம், தொண்டு, பணி, சேவை, கடமை, காருண்யம் மூலமாக மகிழ்விக்க மகிழ்விக்க நாடும் வீடும் அயலும் உறவும் மிகமிகப் பேறளிப்பதாக விருத் தியடையும்.

நடராஜ சதகம் என்ற நூலில் ‘நமசிவாய’ என்ற ஐந்தெழுத்தின் சாரமாகவே ஸ்ரீ ருத்திரம் கருவூலமாகிறது என மொழியப்படுகிறது. இந்த மந்திரத்தினைக் கேட்குந்தோறும், பல கோடியாண்டுகள் கொள்கின்ற புண்ணிய பலாபலன்களைத் தரவல்லது என்பது ருத்ர யாகம் கற்றுத்தருகிறது.

வேண்டத்தக்கது அனைத்தையும் ருத்ர யாகம் வேண்டித் தருவதாகும். இதில் கலந்து அனுபவித்த அனைவருக்கும் மறு பிறவியிலிருந்து விடுதலை கிடைப்பதோடு சிவகதியும் கிடைக்கும் என நம்ப முடிகிறது.

1331 ஸ்ரீருத்ர மந்திர ஆவர்த்திய ஜெபமும், தசாம்சமாக 121 ஆவர்த்திய ஹோமங்களையும் உள்ளடக்கிய ஸ்ரீ மகா ருத்ர யாகம் இலங்கையிலே விண்ணவரும் மண்ணவரும் முக்கண்ணுடைய மூர்த்தியும் மகிழும்படியாக முதன் முதலாக நல்லூர் ஸ்ரீ கமலாம்பிகை சமேத ஸ்ரீ கைலாய நாதப் பெருமான் கோவிலில் (நல்லூர் சிவன் கோவிலில்) நடைபெற்றிருப்பது நம் நாட்டுக்கு ஒரு நல்ல சகுணமாகும்.

இனிமேல் நல்லது நடக்கட்டும் என்று நாமும் இறைஞ்சுவோமாக. தற்போது எம்மை அச்சுறுத்தும் பஞ்சமாபாதகச் செயல்களான கொலை, களவு, மது, மாது, மாச்சரியம் ஆகியனவும் பொய், போதை, பேராசை, தற்புகழ்ச்சி, இலஞ்சம், ஊழல், மோசடி கதிரைக்கும் பதவிக்கும் பணத்திற்குமாக மானம் மரியாதையை அடகு வைத்தல், கூலிக்கு மாரடித்தல், மத முரண்பாடுகளை வளர்த்தல், நீதியில் தலையிடுதல், ஆயுள் முழுவதுமாக அதிகாரம் பதவியிலிருத்தல், ஆன்மீகத்தையும், அரசிய லையும் துஷ்பிரயோகம் செய்தல் ஆகிய அநியாயங்களைத் தோற்கடிக்கவானளாவ எழுந்த ஓமகுண்டல தீச்சுவாலையானது வகைபுரியும். அவற்றை வலிதாக்கும் ருத்ர யாகம் எங்கும் பரவும் வகையில் இந்த ஆலயத்தின் பொக்கிஷங்களாக, சிற்பங்களும் சிலைகளும் கோபுரங்களாக, விமானங்களாக உபரிகையாக தூண்களாக, கர்ப்பக்கிரகங்களாக, சுற்றுப்பிரகாரப் பரிவாரத் தெய்வங்களாக, கோமாதா பீடங்களும் திருவிளையாடற் காட்சிகளும் மிளிர்கின்றன. மேலும் பிரம்மா, விஷ்ணு, சூரிய சந்திரர், மார்க்கண்டேயர் சிவன் காலசம்காரர், சரபேஸ்வரர், வீணாநாத தட்சணா மூர்த்தி, தங்க நிறமுகூர்த்த ஆறுமுக சுவாமி, பிட்சாடணர், கஜயுக்தர், சங்கரநாராயணர், சலந்தரர், கங்காளர், கிராதர், கல்யாண சுந்தரர், லிங்கோத் பவர், 132 திருக்கதவு எண்கோல வட்ட வடிவங்கள், அர்த்தநாரீஸ்வரர், நவக்கிரக ஸ்தானம், எழுந்தருளி, அபிஷேக நாகலிங்கம், இருபது செப்புப் பித்தளைத் தூண்கள் யாவுமே யாக சாட்சிகளாக அருள்பாலிக்கின்றன.

மற்றும் சிவபக்தனான பத்துத் தலை இராவணன் பணிந்தேத்தும் திருநெல்வேலி விநாயகர் சிற்பாலயம் 1999 இல் உருவாக்கிய அற்புதமான கையிலாய வாகனம் தென்கிழக்குச் சுற்றுப் பிரகாரத்தில் எமது ஆணவ மலங்களுக்குப் பரிகார உப காரம் அளித்தது. அக்கினிச் சுவாலையும் அதிலெழுந்த ருத்ரயாக நறும் புகையும், ஓங்கி ஒலித்த மந்திர உச்சாடனமும், வேதியர்களின் உடைநடை பாவனையும், பக்த கோடிகளின் பக்திப் பரவசமும், கைலாய கோமுகித் தீர்த்தமும் ஒருங்கே சேர்ந்து “நாளை நல்லன நடக்கும்” என்ற செய் தியை நல்லூரில் நம்பிக்கையோடு உருவாக்கியது.

கே.எஸ்.சிவஞானராஜா

## திண்மக் கழிவுகளால் மக்களுக்குப் பாதிப்பு


(சாவகச்சேரி)

திண்மக் கழிவுகளால் உதய சூரியன்மற்றும்மகிழங்கேணிகிராம மக்களுக்குப் பாதிப்பு ஏற்படுவதாக சாவகச்சேரி நகரசபை உறுப்பினர் க.தர்சன் குற்றம் சாட்டினார். அண்மையில் சாவகச்சேரி நகரசபையில் இடம்பெற்ற மாதாந்த அமர்வின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

அண்மையில் மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர் அங்கஜன் இராமநாதன் சாவகச்சேரி -உதயசூரியன் கிராமத்திற்கு விஜயம் ஒன்றை மேற்கொண்டிருந்தார். இதன் போது அப்பகுதி மக்கள் சாவகச்சேரி நகரசபையால் வெளியேற்றப்படும் கழிவுகள் காற்றுடன் கலந்து தமது பகுதிக்கு வருவதாக முறையிட்டிருந்தனர். மக்களின் முறைப்பாட்டையடுத்து அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர் இதற்கு ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை என நகரசபை உறுப்பினர்களை நோக்கி கேள்வி எழுப்பியிருந்தார்.

எதிர்வரும் காலத்தில் உதய சூரியன் கிராமத்திற்கு அருகாமையில் நகரசபையினர் கழிவுகளை அகற்றுவதில் பிரச்சினை உள்ளது. இது தொடர்பில் நகரசபை மாற்றுவழி ஒன்றினைக் கண்டுபிடிக்க வேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-30)







யாழ்.சுண்டிக்குளம் பூனைத்தொடுவாய் கடற்பரப்பில் கடந்த 1994 ஆம் ஆண்டு 2 ஆம் மாதம் 18 ஆம் திகதி இலங்கைக் கடற்படையினரால் படுகொலை செய்யப்பட்ட பத்து மீனவர்களின் 26 ஆவது நினைவேந்தல் நிகழ்வு கட்டைக்காடு தூய மரியாள் கல்வி நிலைய மண்டபத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்றது. (படங்கள்:-மகாலிங்கம்)

# மேன்முறையீட்டு நீதிமன்றில் நீதிபதி கிஹான் ரிட் மனு!

(கொழும்பு)

பணி இடைநீக்கம் செய்யப்பட்ட நீதிபதி கிஹான் பிலப்பிட்டிய தான் கைது செய்யப்படுவதைத் தடுக்கும் வகையில் இடைக்கால தடையுத்தரவு ஒன்றை பிறப்பிக்குமாறு கோரி மேன்முறையீட்டு நீதிமன்றில் ரிட் மனுவொன்றைத் தாக்கல் செய்தார்.

இந்த மனுவின் பிரதிவாதிகளாக பதில் பொலிஸ்மா அதிபர், கொழும்பு குற்றவியல் பிரிவின் பணிப்பாளர் உள்ளிட்டவர்கள் பெயரிடப்பட்டுள்ளனர்.

இந்த மனு பரிசீலனைக்காக நேற்று முற்பகல் மேன்முறையீட்டு நீதிமன்ற தலைமை நீதிபதி ஏ.எச்.எம்.நவாஸ் மற்றும் அர்ஜுன ஒபேசேகர ஆகிய நீதிபதிகள் முன்னிலையில் அழைக்கப்பட்டது. இதன்போது, சட்டமா அதிபர் சார்பில் முன்னிலையான அரச பிரதி மன்றாடியார் நாயகம் மிலிந்த குணதிலக இந்த கோரிக்கையை நிராகரிக்குமாறு தான் அடிப்படை ஆட்சேபனை எழுப்புவதாகத் தெரிவித்தார்.

தன்னைக் கைது செய்யுமாறு சட்டமா அதிபரால் பதில் பொலிஸ்மா அதிபருக்கு உத்தரவிட்டுள்ளதாக மனுதாரர் தனது மனுவில் குறிப்பிட்ட விடயம் பொய்யானதும் மற்றும் திரிபுபடுத்தப்பட்டுள்ளதாகவும் குற்றம் சுமத்திய பிரதி மன்றாடியார் நாயகம் அவ்வாறான உத்தரவொன்றை சட்டமா அதிபர், பதில் பொலிஸ்மா அதிபருக்குப் பெற்றுக் கொடுக்கவில்லை எனத் தெரிவித்தார்.

உரிய நீதிமன்றத்திற்கு விடங்களை அறிவித்து பிடியாணை ஒன்றை பெற்றுக் கொள்ளுமாறு மாத்திரமே சட்டமா அதிபரால் இதன்போது பதில் பொலிஸ்மா அதிபருக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளதாக அரச பிரதி மன்றாடியார் நாயகம் தெரிவித்தார்.

குறித்த கோரிக்கைக்கு கடுமையான எதிர்ப்பை தெரிவித்த கிஹான் பிலப்பிட்டிய சார்பில் முன்னிலையான சட்டத்தரணி ரொமேஷ் டி சில்வா, மனுதாரரை கைது செய்யுமாறு பதில் பொலிஸ்மா அதிபருக்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாக ஊடகங்களின் வாயிலாக வெளியிடப்பட்டிருந்ததாக தெரிவித்தார்.

விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்கவுடன் நீதிமன்ற செயற்பாடுகள் தொடர்பில் தொலைபேசி மூலம் உரையாடல்களில் ஈடுபட்ட சம்பவம் தொடர்பில் சட்டமா அதிபரால் வழங்கப்பட்டுள்ள உத்தரவை வலுவிழக்கச் செய்யுமாறு கோரி நீதிபதி கிஹான் பிலப்பிட்டியவால் குறித்த ரிட் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# யாழ்ப்பாணத்தில் முதலாவது சர்வதேச தொழில்நுட்ப மாநாடு



(யாழ்ப்பாணம்)

யாழ். இந்தியத்துணைத் தூதரகத்தின் பகுதி நிதிப்பங்களிப்புடன் யாழ்.றோட்டறிக் கழகம் மற்றும் வடக்கு தகவல் தொழில்நுட்ப அமையத்துடன் இணைந்து ஏற்பாடு செய்த யாழ்ப்பாணத்தின் முதலாவது சர்வதேச தொழில்நுட்ப உச்சி மாநாடு NE(X)TWORK-2020 யாழ்.றில்கோ விருந்தினர் விடுதியில் கடந்த 14 ஆம் திகதி தொடக்கம் 16 ஆம் திகதி வரை இடம்பெற்றது.

இந்த தொழில்நுட்ப கண்காட்சிக்கூடத்தை யாழ். இந்தியத் துணைத் தூதுவர் எஸ்.பாலச்சந்திரன், பாராளுமன்ற உறுப்பினர்களான ஈ.சரவணபவன், அங்கஜன் இராமநாதன் மற்றும் யாழ்.மாநகர முதல்வர் இ.ஆனல்ட் ஆகியோர் இணைந்து திறந்து வைத்தனர்.

இந்த ஆரம்ப நிகழ்வில் 500 இற்கும் மேற்பட்ட தொழில்நுட்ப ஆர்வலர்கள் கலந்து கொண்டனர். (இ-7)

# உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் விசாரணைகளில் திருப்தியில்லை!

(கொழும்பு)

"உயிர்த்த ஞாயிறு தினத்தன்று இலங்கையில் இடம்பெற்ற குண்டுத் தாக்குதல்கள் தொடர்பான விசாரணைகள் திருப்திப்படும் வகையில் இல்லை" என கொழும்பு பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை இவ்வாறு தெரிவித்தார். நேற்று முன்தினம் மாலை கொழும்பில் நடைபெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதலின் பின்னரான ஒவ்வொரு விடயங்களையும் அறிந்து கொள்வதற்கான உரிமை நாட்டு மக்களுக்கு உண்டு எனச் சுட்டிக்காட்டிய பேராயர், அந்த உரிமையை அரசியல் தலைவர்கள் நிலைநாட்டுவார்கள் என எதிர்பார்த்திருந்ததாகவும் தெரிவித்தார்.

தாக்குதல் தொடர்பான ஆணைக்குழுக்களின் அறிக்கைகளில் பதிவாகியுள்ள விடயங்கள் மறைக்கப்பட்டுள்ளன என்று தமக்குச் சந்தேகம் ஏற்பட்டுள்ளது எனவும் அவர் தெரிவித்தார்.

ஆணைக்குழு தொடர்பில் தாம் மகிழ்ச்சியடைந்தாலும் பாதுகாப்புத் தரப்பினர் இது தொடர்பில் உரிய முறையில் செயற்படுகின்றனரா? என்பதை அறிய முடியவில்லை என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# சாரதிகள், அலுவலக உதவியாளர்களுக்கு நிரந்தர நியமனம்- அரசாங்கம் அறிவிப்பு

(கொழும்பு)

அரச நிறுவனங்களில் தற்காலிக, ஒப்பந்தத்தின் அடிப்படையில் இணைத்துக்கொள்ளப்பட்டோருக்கு நிரந்தர நியமனம் வழங்கப் போவதாக பொதுநிர்வாக அமைச்சு அறிவித்துள்ளது. இதற்கமைய அரசாங்க நிறுவனங்களில் 180 நாட்களைப் பூர்த்தி செய்த தற்காலிக மற்றும் ஒப்பந்த அடிப்படையில் பணியாற்றும் சாரதிகள், அலுவலக உதவியாளர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கப்படவிருப்பதாக அரசாங்கம் தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# செய்தித்துளிகள்

## சிவராத்திரியன்று திருமந்திர அர்ச்சனை

(யாழ்ப்பாணம்)

நல்லூர் ஆறுமுகநாவலர் திருமுறை மண்டபத்தில் மகா சிவராத்திரி விழா நாளை 21 ஆம் திகதி வெள்ளிக்கிழமை நடைபெறும்.

இதில் காலை 6 மணி முதல் சிவராத்திரி புராணம் பாட்டும் பயனும், மாலை 6 மணி முதல் பத்தாம் திருமுறையாகிய திருமந்திர மாலையால் இரவு முழுவதும் அர்ச்சனையும் நடைபெறும். (இ-5)

## தொண்டராசிரியர்களுக்கான ஆலோசனைக் கூட்டம் யாழில்

(யாழ்ப்பாணம்)

இந்து பௌத்த கலாசார பேரவையிடம் 3.2.2020 அன்று கிளிநொச்சி கூட்டுறவு மண்டபத்தில் நடைபெற்ற தொண்டர் ஆசிரியர்களின் ஒன்றுகூடலின் போது சமர்ப்பிக்கப்பட்ட வேண்டுகோள் சம்பந்தமாக இதுவரை வடமாகாண தொண்டர் ஆசிரியர்களின் நிலைப்பாடுகளை இந்து பௌத்த கலாசார பேரவை மத்திய கல்வி அமைச்சுடன் நடத்தப்பட்ட பேச்சுவார்த்தையில் பெறப்பட்ட முடிவுகள் தொடர்பாக 5.3.2020 அன்று கலந்துரையாடல் ஒன்று நடத்தவுள்ளது.

எனவே சங்கானை வீதி அச்சுவேலியிலுள்ள இந்து பௌத்த கலாசாரபேரவையின் வடமாகாண தலைமைக் காரியாலயத்தில் ஒவ்வொருவரும் தங்களின் தகைமைச் சான்றிதழ்கள் மற்றும் அனுபவ சான்றிதழ்களு டன் முற் பகல் 10 மணியளவில் சமுகமளிக்குமாறு வேண்டப்படு கிறீர்கள்.

இதில் பங்குபெற விரும்புவோர் தங்கள் பெயர் விபரங்களை முன்பதிவு செய்து கொள்ளவும். மேலதிக தகவல்களுக்கு 077 271 1181 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும். (இ

## சிவராத்திரியன்று கலை நிகழ்வுகள்

(யாழ்ப்பாணம்)

இணுவில் தெற்கு ஞானாம்பிகை உடனாய ஞானலிங்கேச்சுரர் திருக்கோவில் பெருஞ் சிவனிரவு மகா சிவராத்திரி வழிபாடுகள் நாளை 21 ஆம் திகதி வெள்ளிக்கிழமை நடைபெறும். இதில் கலை நிகழ்வுகளும் இடம்பெறும். (இ-5)

## ஓவியக் கண்காட்சியும் புகைப்படக் கண்காட்சியும்


(யாழ்பாணம்)

ரி.பி.ஹன்ற் ஞாபகார்த்த ஓவியக் கூடத்தின் ஓவியக் கண்காட்சியும் டாக்டர் தர்மா அழகரெட்ணத்தால் பல்வேறு நாடுகளில் எடுக்கப்பட்ட பறவைகளின் புகைப்படக் கண்காட்சியும் மற்றும் பரிசளிப்பு நிகழ்வும் நாளை மறுதினம் 22 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணியளவில் ரி.பி.ஹன்ற் ஞாபகார்த்த ஓவியக்கூடத்தின் பணிப்பாளர் திருமதி யோகமணி அழகரெட்ணம் தலைமையில் நடைபெறும். (இ-7)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கொடிகாமம் | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 120 | 120 | 100 | 140 | 120 |
| உருளைக்கிழங்கு | 140 | 120 | 100 | 110 | 120 |
| பச்சைமிளகாய் | 150 | 200 | 130 | 140 | 200 |
| தக்காளி | 120 | 240 | 160 | 130 | 200 |
| மரவள்ளிக்கிழங்கு | 100 | 120 | 120 | 90 | 100 |
| கோவா | 120 | 180 | 150 | 120 | 160 |
| கரட் | 200 | 200 | 200 | 200 | 240 |
| பூசணி | 100 | 100 | 40 | 140 | 160 |
| புடோல் | 100 | 140 | 140 | 110 | 160 |
| வாழைக்காய் | 80 | 100 | 80 | 80 | 120 |
| சின்ன வெங்காயம் | 300 | 300 | 200-350 | 370 | 300 |
| பெரிய வெங்காயம் | 140 | 140 | 220 | 260 | 200 |
| பாகற்காய் | 120 | 160 | 120 | 150 | 200 |
| வெண்டிக்காய் | 150 | 120 | 140 | 70 | 200 |
| கருணைக் கிழங்கு | 80 | 80 | 80 | 70 | 120 |
| பயற்றங்காய் | 100 | 140 | 140 | 120 | 160 |
| லீக்ஸ் | 200 | 200 | 220 | 350 | 240 |
| பீற்றூட் | 100 | 180 | 140 | 200 | 140 |
| கறிமிளகாய் | 150 | 160 | 200 | 180 | 140 |
| முருங்கைக்காய் | 400 | 500 | 400 | 400 | 400 |
| போஞ்சி | 100 | 220 | 200 | 180 | 160 |
| கத்தரிதம்புள்ள | 100 | 100 | — | 120 | 100 |
| கீரை - 1 பிடி | 30 | 40 | 30 | 30 | 30 |
| தேசிக்காய் | 40 | 40 | 50 | 50 | 50 |
| தேங்காய் (ஒன்று) | 70 | 60 | 30-60 | 55 | 40-70 |
| இராசவள்ளி | 200 | 180 | 160 | 160 | 200 |
| வெங்காயப்பூ | 100 | 200 | 140 | 180 | 240 |
| முள்ளங்கி | 40 | 80 | 80 | 40 | 60 |
| பொன்னாங்காணி | 40 | 40 | 40 | 30 | 40 |
| வல்லாரை | 15 | 70 | 30 | 30 | 30 |
| ஈரப்பலா | 80 | — | — | 120 | 100 |

## வவு.விபத்தில்-இருவர்-படுகாயம்



(நெளுக்குளம்)

வவுனியா சின்னசிப்பிக்குளம் பகுதியில் நேற்று இரவு இராணுவ வாகனத்துடன் மோட்டார் சைக்கிள் மோதி விபத்துக்குள்ளாகியதில் இருவர் படுகாயமடைந்த நிலையில் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

வவுனியா செட்டிகுளம் சின்னச்சிப்பிகுளம் பகுதியில் இருந்து செட்டிகுளம் ஹயசிங்கபுர இராணுவ முகாம் நோக்கி சென்றுகொண்டிருந்த ஹன்டர் வாகனத்தின் பின்பாகச் சென்றுகொண்டிருந்த மோட்டார் சைக்கிள் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது. இதன்போது மோட்டார் சைக்கிளில் பயணித்த சின்னசிப்பிகுளத்தைச் சேர்ந்த நௌபர் மிர்ஷட் (வயது-24), அப்துல் ஜக்பர் ஜீவான் (வயது-22) ஆகிய இருவரும் படுகாயமடைந்த நிலையில் வவுனியா வைத்தியசாலைக்கு கொண்டு வரப்பட்டு நௌபர் மிர்ஷட் என்ற இளைஞன் மேலதிக சிகிச்சைகளுக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார். இவ்விபத்து தொடர்பான மேலதிக விசாரணையினை செட்டிகுளம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (9-250-299)

# கிளி.மாவட்ட சட்டத்தரணிகள் நேற்று பணிப்புறக்கணிப்பு



(கண்டாவளை)

கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்றிற்கு அபகீர்த்தியை ஏற்படுத்தும் வகையில் இணையத்தளம் ஒன்றில் செய்தி வெளியாகியமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து கிளிநொச்சி மாவட்ட சட்டத்தரணிகள் சங்கத்தால் நேற்று பணிப்புறக்கணிப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்றத்திற்கு அபகீர்த்தியை ஏற்படுத்தும் வகையில் இணையத்தளம் ஒன்று செய்தி ஒன்றை வெளியிட்டுள்ளது.

இதற்கு எதிர்ப்புத் தெரிவித்தே நேற்றுக் காலை முதல் இந்த பணிப்புறக்கணிப்பு முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இதனால் நீதிமன்ற நடவடிக்கைகள் ஸ்தம்பிதம் அடைந்திருந்தன.

அதாவது கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்றில் சான்றுப் பொருளாக பாரப்படுத்தப்பட்டிருந்த பொருட்களை முறையற்ற விதத்தில் சட்டத்திற்குப் புறம்பாக விற்பனை செய்ததாக குறித்த இணையத் தளத்தில் வெளியான செய்தி தொடர்பிலே இந்தப்புறக்கணிப்பு முன்னெடுக்கப்பட்டுள்ளது. (9-315)

# 35 வருடங்களுக்கு மேலாக நிரந்தர கட்டடமின்றி இயங்கும் புதுக்குடியிருப்பு பிரதான தபாலகம்

(கண்டாவளை)

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு பிரதான தபாலகத்திற்கான நிரந்தரக்கட்டடம் அமைக்க நிதியொதுக்கீடுகள் எதுவும் இதுவரை கிடைக்கப்பெறவில்லை என தபாலக தகவல்களில் தெரிவிக்கப்பட்டுள்ளது. முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு பிரதான தபாலகத்திற்கான நிரந்தரக்கட்டடம் எதுவும் இதுவரை அமைக்கப்படாத நிலையில் கடந்த 35 வருடங்களுக்கு மேலாக குறித்த தபாலகம் தனியார் கட்டடங்களிலேயே தொடர்ந்தும் இயங்கி வருகின்றது.

அதாவது புதுக்குடியிருப்பு விசுவமடு உப தபாலகம், உடையார் கட்டு உபதபாலகம் என்பவற்றை உள்ளடக்கிய வகையில் சுமார் பதின்மூவாயிரத்து 425 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள், பாடசாலைகள், அரச, தனியார் திணைக்களங்கள் என்பவற்றுக்கான தபால் சேவைகளை வழங்கும் பிரதான தபாலகமாக அமைந்துள்ள இத் தபாலகத்திற்கான நிரந்தரக்கட்டடம் அமைப்பதற்கான காணி புதுக்குடியிருப்பு நகருக்கு அண்மித்த பகுதியின் பிரதான வீதியில் உள்ள போதும் நிரந்தரக்கட்டடம் அமைக்கப்படாத நிலையில் காணப்படுகின்றது.

அதாவது கடந்த 2008 ஆம் ஆண்டுக்கு முன்னைய காலப்பகுதியில் தனியார் கட்டடங்களில் மாறிமாறி தொடர்ந்து இயங்கி வந்துள்ளது.

இதன் பின்னர் யுத்தம் காரணமாக இடம்பெயர்ந்து கடந்த 2010 ஆம் ஆண்டு மீள்குடியமர்வைத் தொடர்ந்து கோம்பாவில் பகுதியில் தனியார் கட்டடம் ஒன்றில் இயங்கிய புதுக்குடியிருப்பு பிரதான தபாலகம் குறிப்பிட்ட சில காலங்களின் பின்னர் தனியார் வீடொன்றுக்கு மாற்றப்பட்டு கடந்த 10 வருடங்களாக குறித்த தனியார் வீட்டில் பெரும் நெருக்கடிகளுக்கு மத்தியில் இயங்கி வருகின்றது.

இவ்வாறு ஏறத்தாழ 35 வருடங்களுக்கு மேலாக தனியார் கட்டடங்களில் மாறி மாறி இயங்கி வரும் தபாலகத்திற்கான நிரந்தரக்கட்டடம் அமைக்கப்படுவது தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினர்கள், அமைச்சர்கள், அதிகாரிகள் மட்டத்தில் தொடர்ச்சியான கோரிக்கைகளை தொடர்ந்து முன்வைத்து வருகின்ற போதும் அதற்கான நிதியொதுக்கீடுகள் எதுவும் இதுவரை கிடைக்கப் பெறவில்லை என தபாலக தகவல்களில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (9-315)

# பொலிஸாரால் 14 இலட்சம் நட்டம்; மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு

(கண்டாவளை)

முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்கங்களின் சமாசத்திற்கு பொலிஸாரின் செயற்பாட்டால் பதின்னான்கு இலட்சம் ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளதாக தெரிவித்து இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் வவுனியா அலுவலகத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாக சமாசத்தின் தலைவர் ரீ.அன்ரனி தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவு சமாசத்திற்குச் சொந்தமான கூலர் வாகனத்தில் மீன் ஏற்றிச்சென்ற சமயம் அதில் கஞ்சா கடத்தப்படுவதாக தெரிவித்து மதவாச்சிப் பொலிஸாரால் தடுத்து வைக்கப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளது.

இதனால் குறித்த வாகனத்தில் 3500 கிலோ எடையுடைய மீனை கடந்த ஞாயிற்றுக்கிழமை கொழும்பிற்கு கொண்டு செல்லப்பட்ட போதே இவ்வாறு மறிக்கப்பட்டு சோதனை செய்யப்பட்டுள்ளது.

இதனால் குறித்த நேரத்திற்குள் மீனைக்கொண்டு செல்ல முடியாததால் தமக்கு நட்டம் ஏற்பட்டுள்ளதாக மேற்படி சமாசத்தால் தெரிவிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் நேற்று இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் வவுனியா பிராந்திய அலுவலகத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

அதாவது பொலிஸாரின் செயற்பாட்டால் சமாசத்திற்கு சுமார் 14 இலட்சம் ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவித்து நேற்று சமாசத்தின் தலைவர், பொது முகாமையாளர், குறித்த வாகனத்தின் சாரதி ஆகியோர் இணைந்து இம்முறைப்பாட்டை செய்திருப்பதாக சமாசத்தின் தலைவர் தெரிவித்தார். (9-315)




# புதுக்குடியிருப்பு சிகை அலங்கார நிலையங்களுக்கு அறிவித்தல்

(முல்லைத்தீவு)

கல்வி அமைச்சினுடைய சுற்றுநிருபத்திற்கமையவே மாணவர்களுக்கு சிகை அலங்காரம் மேற்கொள்ளப்பட வேண்டுமென புதுக்குடியிருப்பு பிரதேசசபைத் தவிசாளர் செல்லையா பிரேம்காந் தெரிவித்துள்ளார்.

அவ்வாறு சுற்றுநிருபத்திற்கமைய மாணவர்களுக்கு சிகை அலங்காரம் மேற்கொள்ளத் தவறும் சிகை அலங்கார நிலையங்களுக்கு உரிய நடவடிக்கையினை பிரதேசசபை எடுக்கும் எனவும் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில், பாடசாலை மாணவர்களுக்கான சிகை அலங்காரம் தொடர்பில் இம்மாத சபை அமர்வில் பேசப்பட்டது. குறிப்பாக சில மாணவர்கள் பொருத்தமற்ற முறையில் சிகை அலங்காரம் செய்து பாடசாலைக்கு செல்கின்றனர் என்னும் முறைப்பாடு சபையில் கிடைக்கப்பெற்றது.

அந்த வகையில் கல்வி அமைச்சினுடைய சுற்றுநிருபத்திற்கமைய பாடசாலை மாணவர்களுக்கான சிகை அலங்காரங்களை மேற்கொள்ளுமாறும் அதை வலியுறுத்தியும் சபையில் தீர்மானம் ஒன்றும் நிறைவேற்றப்பட்டது.

எனவே இது விடயம் தொடர்பில், அனைத்து சிகை அலங்கார நிலையங்களும் கவனத்துடன் செயற்படுவதோடு, கல்வி அமைச்சின் சுற்றுநிருபத்திற்கு அமையவே மாணவர்களுக்கான சிகை அலங்காரங்கள் மேற்கொள்ளப்படவேண்டும்.

அவ்வாறு கல்வி அமைச்சினுடைய சுற்றுநிருபத்திற்கமைய மாணவர்களுக்கு சிகை அலங்காரம் மேற்கொள்ளத் தவறும் சிகை அலங்கார நிலையங்களுக்கு, அனுமதிப்பத்திரங்கள் வழங்கும் போது அந்த விடயங்களைக் கருத்திலெடுத்து உரிய நடவடிக்கையினை பிரதேசசபை மேற்கொள்ளும் எனவும் தெரிவித்தார். (9)

## பிரதேச சபை உறுப்பினர் மீது கொள்ளையர்கள் தாக்குதல்

(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு கரைதுறைப்பற்று பிரதேச சபை உறுப்பினர் அ.செவியர் (சயந்தன்) மீது உப்புமாவெளி கிராமத்தில் வைத்து மணல் கொள்ளையர்கள் தாக்குதல் நடத்தியுள்ளனர்.

இது தொடர்பில் தெரியவருகையில், கடந்த 14 ஆம் திகதி இரவு உப்புமாவெளி பகுதியில் உள்ள குறித்த உறுப்பினரின் காணியில் மணல் அகழ்வதாக கிடைத்த தொலைபேசி தகவலையடுத்து அந்த இடத்திற்கு உறுப்பினர் சென்றபோது தூள் கலந்து மணலினை முகத்தில் வீசிவிட்டு தாக்குதல் நடத்தியுள்ளனர்.

தாக்குதல் நடத்திய உப்புமாவெளியினை சேர்ந்த ஆறுபேரில் மூவர் அடையாளம் காணப்பட்டு பொலிஸாருக்குத் தெரிவிக்கப்பட்ட நிலையில் தாக்குதல் மேற்கொண்டவர்களில் மூவர் நேற்று முன்தினம் முல்லைத்தீவு பொலிஸ் நிலையத்தில் சரணடைந்துள்ளனர். (9-281)

# சக்கர நாற்காலி பயணத்தை நிறைவு செய்தவர்களுக்கு கௌரவிப்பு



(நெளுக்குளம்)

பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து கடந்த இரண்டாம் திகதி யாழ்ப்பாணம் பேருந்து நிலையத்தில் ஆரம்பித்த சக்கர நாற்காலி பயணமானது இலங்கையின் பல பகுதிகளுக்குச் சென்று நேற்று முன்தினம் முடிவடைந்துள்ளது.

முள்ளந்தண்டுவடம் பாதிக்கப்பட்ட ம.மொகமட் அலி மற்றும் ஜெகதீஸ்வரன், சகோதர மொழி பேசும் பிறேமசந்திர (தவிர்க்க முடியாத காரணத்தால் இடைவழியில் பயணத்தை முடித்துக்கொண்டவர்) ஆகியோர் மாற்றுத்திறனாளிகளுக்கான உரிமைகளை வலியுறுத்தி இலங்கை முழுவதுமான சுற்றுப்பயணத்தை சக்கர நாற்காலி மூலம் மேற்கொண்டிருந்தனர்.

தமது பயணத்தை முடித்துக்கொண்ட அவர்களை கௌரவிக்கும் நிகழ்வு வவுனியாவில் வாடிவீட்டில் சமூக சேவைகள் உத்தியோகத்தர் எஸ்.சிறினிவாசன் தலைமையில் இடம்பெற்றது. பயணத்தை மேற்கொண்ட இருவரும் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டனர். (9-299)

# கிளி. பொலிஸ் பிரிவில் ஆளணி பற்றாக்குறையால் பொதுமக்களுக்கான சேவைகள் வழங்குவதில் தாமதம்

(கண்டாவளை)

கிளிநொச்சி பொலிஸ் நிலையத்திற்கு போதிய பொலிஸார் நியமிக்கப்படாமையினால் பொதுமக்கள் சேவைகளை உடனடியாக வழங்குவதில் தாமதங்கள் காணப்படுவதாக பொலிஸ் நிலையத்தகவல்கள் தெரிவிக்கின்றன.

கிளிநொச்சி பிரதான பொலிஸ் நிலையத்தில் போதிய தமிழ் பொலிஸார் இன்மை மற்றும் ஏனைய பதவி நிலைகளுக்கான பொலிஸார் பற்றாக்குறை என்பவற்றால் பல்வேறு தேவைகள் கருதி பொலிஸ் சேவைகளைப் பெற்றுக்கொள்ளச் செல்லும் பலரும் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

குறிப்பாக, பொலிஸ் முறைப்பாட்டுப் பிரதிகளைப் பெற்றுக்கொள்ளுதல், சிறு குற்றம் தொடர்பான விசாரணைகள் மற்றும் முறைப்பாடுகள் பதிவு செய்தல் குறிப்பாக இரவு நேரங்களில் தமிழ் மொழி தெரிந்த பொலிஸார் தொடர்பாடல் பகுதிகளில் இன்மை என்பற்றால் காலதாமதங்களையும் சிரமங்களையும் எதிர்கொள்வதாக பொதுமக்கள் பலரும் விசனம் தெரிவித்துள்ளனர்.

கிளிநொச்சி பிரதான பொலிஸ் நிலையத்தில் 301 வரையான பொலிஸார் கடமையாற்ற வேண்டிய நிலையில் 146 பொலிஸார் மாத்திரமே கடமையில் ஈடுபட்டு வருகின்றனர்.

இதிலும் பொலிஸ் அத்தியட்சகர் காரியாலயம் கிளிநொச்சி,முல்லைத்தீவு மாவட்டங்களுக்கான பிரதி பொலிஸ் மா அதிபர் அலுவலகம் ஆகியவற்றின் தேவைகள் கருதியும் விசேட தேவைகள் கருதியும் கடமையிலுள்ள பொலிஸார் செல்கின்றபோது தாமதங்கள் காணப்படுகின்றன.

குற்றச்செயல்கள் தொடர்பில் கூடிய கவனமெடுத்து தொடர்ந்தும் பொலிஸார் ஈடுபடுத்தப்படுதல், சுற்றுக்காவல் நடவடிக்கை என்பவற்றால் கடந்த காலங்களை விட குற்றச்செயல்கள் குறைவாகக் காணப்படுவதாக பொலிஸ் நிலையத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (9-315)




# மகா சிவராத்திரி விழா

(சிவநகர்)

கிளிநொச்சி மாவட்டத்தில் தொன்மை மிக்க ஆலயமாகத் திகழும் உருத்திரபுரம் உருத்திரபுரீஸ்வரர் ஆலயத்தில் நாளை வெள்ளிக்கிழமை மகா சிவராத்திரி நிகழ்வு நடைபெறவுள்ளது. நான்கு சாமப்பூசைகள் தமிழில் நடைபெறவுள்ளது. நான்காவது சாமத்தின் பின்னராக அறநெறிப் பாடசாலை மற்றும் மகாதேவ சிறுவர்களிடையே நடத்தப்பட்ட சமயப் போட்டிகளுக்கான பரிசில் வழங்கும் நிகழ்வும் நடைபெறவுள்ளது. அனைத்து அடியார்களையும் பங்குகொள்ளுமாறும் இதற்கான அனைத்து ஒழுங்குகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் ஆலய நிர்வாக சபையால் அறிவிக்கப்பட்டுள்ளது. (9-254)

# கற்றல் உபகரணங்கள் வழங்கல்



(நெளுக்குளம்)

தமிழீழ விடுதலைக் கழகத்தின் செயலதிபர் உமாமகேஸ்வரனது 72 ஆவது பிறந்த தினத்தை முன்னிட்டு உமா மகேஸ்வரன் பவுண்டேசன் அமைப்பினால் 74 மாற்றுத் திறனாளி மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள் நேற்று முன்தினம் செட்டிகுளம் பிரதேச செயலக மண்டபத்தில் வைத்து வழங்கி வைக்கப்பட்டன.

உமாமகேஸ்வரன் பவுண்டேசன் அமைப்பின் தலைவரும் முன்னாள் வடமாகாணசபை உறுப்பினருமான ஜி.ரி. லிங்கநாதன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், சமூக சேவைகள் திணைக்கள உத்தியோகத்தர் எஸ்.எஸ். வாசன், செட்டிகுளம் பிரதேசசபை உறுப்பினர் சுஜீவன், செட்டிகுளம் பிரதேச மாற்றுத்திறனாளி சங்கத் தலைவர் லோகராஜா, வரோட் அமைப்பின் பிரதிநிதி, பெற்றோர்கள், மாணவர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். இதே வேளை வவுனியா கோவில் குளத்தில் அமைந்துள்ள உமா மகேஸ்வரன் சமாதிக்கு முன்பாக அவரின் நினைவால் தாக சாந்தி நிலையம் ஒன்றும் அமைக்கப்பட்டிருந்தது. (9-299)

# கட்டடப் பணிகளில் குறைபாடு; ஆலயத்தை உடைத்த உரிமையாளர்

(அக்கராயன்)

கிளிநொச்சி அக்கராயனில் அமைக்கப்பட்ட ஆலயம் ஒன்றின் கட்டட வேலைகள் உரிய முறையில் இடம் பெறாததன் காரணமாக ஆலயத்தின் உரிமையாளரினால் குறித்த ஆலயம் உடைக்கப்பட்டுள்ளது.

கடந்த நான்கு ஆண்டுகளுக்கு மேலாக குறித்த ஆலயம் அமைக்கும் பணிகள் இடம்பெற்று வந்தன. ஆலயத்தின் உரிமையாளர் கனடாவில் வாழ்ந்து வந்த நிலையில் யாழ்ப்பாணத்தில் உள்ள நபரிடம் 57 இலட்சம் ரூபா நிதி வழங்கி ஆலயத்தினை அமைத்துள்ளார்.



குறித்த நபர் கனடாவில் இருந்து அக்கராயனுக்கு வந்து ஆலயத்தின் கட்டுமானங்கள் பார்வையிட்ட போது வழங்கப்பட்ட பணத்திற்கு ஏற்ப ஆலயக் கட்டடம் அமைக்கப்படவில்லை.

ஆலயத்தின் கட்டுமானத்தில் பல்வேறு குறைபாடுகள் காணப்பட்டதன் காரணமாக எதிர்காலத்தில் ஆலயம் முழுமை பெற்றாலும் பொதுமக்களுக்கு ஆபத்து ஏற்படக் கூடிய வகையில் ஆலயம் அமைந்திருப்பதன் காரணமாக ஆலயத்தினை உடைத்துள்ளார்.

தான் பணத்தினை கொடுத்து ஏமாந்து விட்டதாகவும் பக்தர்களுக்கு பாதிப்பு ஏற்படும் என்ற காரணத்தால் ஆலயத்தை இடித்துள்ளதாகவும் உரிமையாளர் வேதனையுடன் தெரிவித்தார். (9-350)

# புதுமுறிப்பு பாலம் மக்கள் பாவனைக்கு



(கண்டாவளை)

கிளிநொச்சி கோணாவில் அக்கராயன் வீதியின் புதுமுறிப்பு பாலம் புதிதாக நிர்மாணிக்கப்பட்டு மக்கள் பாவனைக்காக விடப்பட்டுள்ளது. கிளிநொச்சி நகரில் இருந்து கனகபுரம் ஊடாக அக்கராயன் கோணாவில் ஆகிய பிரதேசங்களுக்குச் செல்லும் பிரதான வீதியாகவும் நாளாந்தம் பல்லாயிரக்கணக்கான மக்கள் போக்குவரத்திற்கு பயன்படும் மேற்படி வீதியினைக் குறுக்கறுத்துச்செல்லும் புதுமுறிப்பு ஆற்றுக்கான பாலம் அமைக்கப்படாத நிலையில் தற்காலிகமாக காணப்பட்ட ஆபத்தான பாலம் ஊடாகவே பொதுமக்களும் வாகனங்களும் பயணம் செய்து வந்துள்ளன.

ஏற்கனவே குறித்த பகுதியில் காணப்பட்ட பாலம் 1997 ஆம் ஆண்டு ஏற்பட்ட யுத்தம் காரணமாக சேதமடைந்த நிலையில் கடந்த 2003 ஆம் ஆண்டு அமைக்கப்பட்ட பாலமும் சேதமடைந்த நிலையில் அதனூடாகவே போக்குவரத்துக்கள் மேற்கொள்ளப்பட்டு வந்தன.

இதேவேளை இப்பாலத்தில் அடிக்கடி விபத்துக்கள் ஏற்பட்டுள்ளதுடன், கடந்த வருட முற்பகுதியில் இப்பாலத்தடியில் ஏற்பட்ட விபத்து காரணமாக ஒருவர் உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. மேற்படி ஆற்றுக்கான பாலத்தினை அமைத்துத் தருமாறு பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.சிறீதரன் மற்றும் முன்னாள் கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் ஆகியோரிடம் பிரதேச மக்கள், கிராமமட்ட பொது அமைப்புக்கள் விடுத்த கோரிக்கைகளை அடுத்து இதற்கான புதிய பாலம் அமைக்கப்பட்டு அதன் பணிகள் நிறைவு பெற்றுள்ள நிலையில் மக்கள் பாவனைக்கு கையளிக்கப்பட்டுள்ளது. இதனால் கோணாவில், ஊற்றுப்புலம், யூனியன்குளம், அக்கராயன், ஸ்கந்தபுரம் உள்ளிட்ட கிராமங்களைச்சேர்ந்த பல்லாயிரக்கணக்கான மக்கள் பெரிதும் நன்மையடைந்துள்ளனர். (9-315)

# கட்டாக்காலி கால்நடைகளைக் கட்டுப்படுத்த நடவடிக்கை

## உரிமையாளர்கள் பதிவுகளை மேற்கொள்ளுமாறு புதுக்குடியிருப்பு தவிசாளர் கோரிக்கை

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு-புதுக்குடியிருப்பு, பிரதேச சபையின் எல்லைக்குட்பட்ட பகுதிகளில் கட்டாக்காலி கால்நடைகளைக் கட்டுப்படுத்த நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளதாக பிரதேச சபையின் தவிசாளர் செல்லையா பிரேம்காந் தெரிவித்துள்ளார்.

அந்த வகையில் புதுக்குடியிருப்பு பிரதேசசபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள கால்நடை உரிமையாளர்கள் ஒவ்வொருவரும் தமது கால்நடைகள் தொடர்பான விடயங்களை, தமது பகுதியிலுள்ள பிரதேச சபையின் உப அலுவலகங்களில் பதிவு செய்யுமாறும் கோரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

இவ் விடயம் தொடர்பாக இம்மாத சபை அமர்வில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. குறிப்பாக நெற்செய்கைக் காலங்களில், கால்நடைகள் நெற்செய்கை பகுதிகளுக்குள் புகுந்து பயிர்களுக்கு சேதம் விளைவிக்கின்றன.

எனவே அந்த நேரத்தில், அவ்வாறு பயிர் நிலங்களுக்குள் புகுந்து சேதம் விளைவிக்கும் கால்நடைகளின் உரிமையாளர்கள் யார் என்பதைக் கண்டுபிடிப்பதில் பாரிய இடர்பாடுகள் நிலவுகின்றன. இதனைவிட வீதி விபத்துக்குள்ளாகி கட்டாக்காலி கால்நடைகள் இறந்திருப்பின், அந்தக் கால்நடைகளின் உரிமையாளர்களை இனங்காணுவதில் பாரிய சிக்கல் நிலவி வந்துள்ளது.

இவ்வாறு பதிவொன்று இருக்குமாயின், இப்பதிவி னூடாக் கட்டாக்காலி கால்நடைகளைக் கட்டுப்படுத்துவதும் இலகுவாக இருக்கும்.

எனவே இதனைக்கருத்தில்கொண்டு, புதுக்குடியிருப்புப் பிரதேச சபையின் எல்லைக்குட்பட்ட பகுதிகளில் கால்நடைகளை வைத்திருக்கும் உரிமையாளர்கள், அவர்களது பகுதிக்குரிய பிரதேசசபை உப அலுவலகங்களில் பதிவுகளை மேற்கொள்ளுமாறு மேலும் தெரிவித்தார். (9)

# சிறுதொழில் முயற்சியாளர்களுக்கு வழிகாட்டல் கருத்தரங்கு

(முரசுமோட்டை)

"நஞ்சு அற்ற விவசாய உற்பத்தியை மேற்கொண்டு அதனை நுகர்வோர்களுக்கு சிறந்த முறையில் வழங்குவது" என்னும் தொனிப்பொருளில் சிறுதொழில் முயற்சியாளர்களுக்கான விசேட வழிகாட்டல் கருத்தரங்கு கோரக்கன்கட்டு கிராம உத்தியோகத்தர் அலுவலக கேட்போர்கூடத்தில் கடந்த வாரம் இடம்பெற்றுள்ளது.

கிளிநொச்சி மாவட்ட சிறுதொழில் முயற்சிப் பிரிவின் அனுசரணையுடன் கண்டாவளை பிரதேச செயலகத்தின் சிறுதொழில் முயற்சிப் பிரிவினரின் ஏற்பாட்டில் கண்டாவளை பிரதேச செயலகத்திற்குட்பட்ட தெரிவு செய்யப்பட்ட 20 இற்கு மேற்பட்ட தோட்டச் செய்கையாளர்களுக்கு சேதனப் பயிர்ச்செய்கை மூலம் உணவு உற்பத்தியை மேற்கொண்டு அதனை சந்தைப்படுத்தி நுகர்வோர் ஆரோக்கியமாக வாழ்ந்திட வழிகாட்டுவது தொடர்பாக விளக்கமளிக்கப்பட்டது. விவசாய போதனாசிரியர் சோ.விஜயன் விசேட வளவாளராக கலந்து கொண்டு தோட்டச் செய்கையாளர்களுக்கு கருத்துரைகளை வழங்கியிருந்தார். (9-318)

# உலக தாய்மொழி தினம்

(கிளிநொச்சி)

உலகத் தாய்மொழி தினம் கிளிநொச்சி மாவட்டத் தமிழ் சங்கத்தின் ஏற்பாட்டில் நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு கிளிநொச்சி ஜெயந்தி நகரிலுள்ள மகாதேவா சிறுவர் இல்லத்தில் நடைபெறவுள்ளது. தமிழ் சங்கத் தலைவர் மருத்துவர் மா.ஜெயராசா தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கிளி நொச்சி மாவட்ட அரச அதிபர் திருமதி.ரூபவதி கேதீஸ்வரன் கலந்து கொள்ளவுள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாக கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் கி.கமலராஜன், மாவட்டச் சிறுவர் நன்னடத்தை அலுவலர் மு.முத்துக்குமாரன், ஐக்கிய நாடுகள் அகதிகளுக்கான உயர்ஸ்தானிகராலயத்தின் அலுவலர் எம்.மாதவன், புனித திரேசா பெண்கள் கல்லூரி அதிபர் எம். அன்ரனி சாந்தா, சிறுவர் இல்லத்தின் தலைவர் பொன்.நித்தியானந்தம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (9)

# பாரதம்

## குடியுரிமை திருத்தச் சட்ட விவகாரம்; சட்டசபையை நோக்கி முற்றுகைப் போராட்டம்




(சென்னை)

சென்னையில் சட்ட சபையை நோக்கி முற்றுகைப் போராட்டம் நடத்துவதற்காக இஸ்லாமிய அமைப்பினர் திரண்டதால் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

மத்திய அரசு கொண்டு வந்துள்ள குடியுரிமை திருத்தச் சட்டத்துக்கு எதிராக சட்டமன்றத்தில் நடப்புக் கூட்டத் தொடரில் தீர்மானம் நிறைவேற்ற வேண்டும் என்ற கோரிக்கையை வலியுறுத்தி முஸ்லிம் அமைப்புகள் சார்பில் நேற்று புதன்கிழமை தமிழக சட்டமன்றத்தை முற்றுகையிடும் போராட்டம் நடைபெறும் என அறிவிக்கப்பட்டிருந்தது. ஆனால் சட்டமன்றத்தை முற்றுகையிட்டுப் போராட்டம் நடத்த மார்ச் 11 ஆம் திகதி வரை தடை விதித்து உயர் நீதிமன்றம் உத்தரவிட்டது.

இந்த உத்தரவு தங்களுக்கு பொருந்தாது என்று கூறிய இஸ்லாமிய அமைப்புகள் திட்டமிட்டபடி போராட்டம் நடைபெறும் என அறிவித்து அதற்கான பணிகளைத் தொடங்கினர். இதனால் தலைமைச் செயலகம் செல்லும் சாலைகளில் பொலிஸார் குவிக்கப்பட்டு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டது.

இந்நிலையில், இஸ்லாமிய அமைப்புகள் சார்பில் இன்று காலை சேப்பாக்கம் கலைவாணர் அரங்கில் இருந்து சட்ட சபை நோக்கி பேரணி நடத்தினர். இதில் இஸ்லாமிய அமைப்பைச் சேர்ந்தவர்கள், அவர்களுக்கு ஆதரவு அளிக்கும் அரசியல் கட்சிகளைச் சேர்ந்தவர்கள் என ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

இதேவேளை, நெல்லை, மதுரை, கடலூர் உள்ளிட்ட தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலும் இஸ்லாமிய அமைப்புகள் நேற்று தீவிர போராட்டத்தில் ஈடுபட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ-2)

## இந்தியா-பாகிஸ்தான் இடையே மத்தியஸ்தம் வகிக்கத் தயார்

### ஐ.நா.சபை அறிவிப்பு



(இஸ்லாமாபாத்)

நீண்ட காலமாக நிலுவையில் உள்ள காஷ்மீர் பிரச்சினையில் தீர்வு காண்பதற்கு ஐ.நா. சபை மத்தியஸ்தரின் பங்கை வகிக்க முடியும் என ஐ.நா. பொதுச்செயலாளர் அன்டனியோ குட்டேரஸ் தெரிவித்தார்.

ஐ.நா.சபை பொதுச்செயலாளர் அன்டனியோ குட்டேரஸ், பாகிஸ்தானில் 4 நாட்கள் சுற்றுப் பயணம் மேற்கொண்டார். அவர், அந்த நாட்டின் எம்.பி.க்களை கடந்த செவ்வாய்க்கிழமை சந்தித்து பேசினார். அப்போது அவர், ஐ.நா.பாதுகாப்பு சபையில் தீர்மானங்களின்படி, இந்தியாவுடனான காஷ்மீர் பிரச்சினைக்கு தீர்வு காண ஆதரவு அளித்ததற்கு நன்றி தெரிவித்தார்.

அவரிடம் பாகிஸ்தான் எம்.பி.க்கள், தற்போது போர்ப்பதற்றம் நிலவுகிற சூழ்நிலையில், இந்தியா-பாகிஸ்தான் இரு தரப்பு பேச்சுவார்த்தையை மறுபடியும் தொடங்க முடியாது. இந்த பதற்றமான சூழ்நிலையில் ஐ.நா. சபை தலைமையின் பங்களிப்பு மிக முக்கியமானது என வலியுறுத்தினர்.

அதைத் தொடர்ந்து அவர்களிடம், "நீண்டகாலமாக நிலுவையில் உள்ள காஷ்மீர் பிரச்சினையில் தீர்வு காண்பதற்கு ஐ.நா. சபை மத்தியஸ்தரின் பங்கை வகிக்க முடியும்" என ஐ.நா. பொதுச்செயலாளர் அன்டனியோ குட்டேரஸ் தெரிவித்தார்.

ஆனால் காஷ்மீர் பிரச்சினையில், மூன்றாவது தரப்பினரின் தலையீட்டுக்கு இடமே இல்லை. இது பாகிஸ்தானுடன் இருதரப்பு பேச்சுவார்த்தையின் மூலம்தான் தீர்வுகாண வேண்டிய ஒன்று என்பது இந்தியாவின் அசைக்க முடியாத நிலைப்பாடு என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ-2)

## 'ரொட்-2' ரக ஏவுகணையை பரிசோதித்தது பாகிஸ்தான்

(இஸ்லாமாபாத்)

விமானத்திலிருந்து செலுத்தக் கூடிய 'ரொட்-2' ரக ஏவுகணையை பாகிஸ்தான் வெற்றிகரமாக பரிசோதித்துள்ளது.

நேற்றைய தினம் இந்த ஏவுகணை வெற்றிகரமாக பரிசோதிக்கப்பட்டுள்ளதாக பாகிஸ்தான் இராணுவத்தின் செய்தித் தொடர்புப் பிரிவு தெரிவித்துள்ளது.

இது குறித்து வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில், 'ரொட்-2' ஏவுணையின் விமானத்திலிருந்து ஏவக்கூடிய ரகம், நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை வெற்றிகரமாக சோதித்துப் பார்க்கப்பட்டது.

600 கி.மீ. தொலைவிலுள்ள இலக்குகளைத் தாக்கி அழிக்கவல்ல அந்த ஏவுகணைகளில், வழக்கமான வெடிபொருகள் மட்டுமன்றி அணு ஆயுதங்களையும் பொருத்த முடியும்.

தரையிலும் கடலிலும் எதிரிகளால் எழக்கூடிய சவால்களை எதிர்கொள்வதற்கான பாகிஸ்தானின் திறனை, 'ரொட்-2' ஏவுகணைகள் மேம்படுத்துகின்றன என தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-2)

## உலகை அச்சுறுத்த
## உயிரிழப்பு 200

(பீஜிங்)

**சீனாவில் வேகமாகப் பரவிவரும் கொவிட் 19 எனப்படும் 'கொரோனா' வைரஸ் பாதிப்பால் உயிரிழந்தோரின் எண்ணிக்கை 2004 ஆக அதிகரித்துள்ளது. அத்தோடு இந்த வைரஸ் தாக்கம் காரணமாக 74,185 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.**

சீனாவின் ஹுபே மாகாணம் வுஹான் நகரில், கடந்தாண்டு டிசெம்பர் மாதம் 'கொரோனா' பாதிப்பு இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது.

இதன் தாக்கம் தொடர்ந்து நாட்டின் 34 மாகாணங்களில், 31 மாகாணங்களுக்கு வேகமாகப் பரவியது. இதைத்தவிர, ஜப்பான், ஹொங் கொங் என 25 இற்கும் மேற்பட்ட நாடுகளுக்கும் இந்த வைரஸ் பாதிப்பு ஏற்பட்டது.

## நிவாரண கூட்ட நெ
## 22 பேர் உயிரிழப்பு

(நியாமி)

நைஜரில் அகதிகள் நிவாரணக் கூட்டத்தில்ஏற்பட்ட கடும் நெரிசலில் சிக்கி பெண்கள், குழந்தைகள் உட்பட 22 பேர் சம்பவ இடத்திலேயே பரிதாபமாக உயிரிழந்தனர்.

மேற்கு ஆபிரிக்க நாடான நைஜீரியாவில் போகோஹராம் பயங்கரவாதிகள் ஆதிக்கம் செலுத்தி வருகின்றனர். இவர்கள் கடந்த 10 ஆண்டுகளுக்கும் மேலாக நாட்டில் பயங்கரவாதத்தை பரப்பி வருகின்றனர்.

பயங்கரவாதத் தாக்குதல்களில் ஆயிரக்கணக்கான மக்கள் கொன்று குவிக்கப்பட்ட நிலையில், சுமார் ஒரு இலட்சத்து 20 ஆயிரம் பேர் அயல் நாடான நைஜரில் அகதிகளாக தஞ்சம் புகுந்தனர். இவர்கள் நைஜரின் தென் கிழக்கு பகுதியில் நைஜீரியா மற்றும் சாத் எல்லையோரத்தில் அமைந்துள்ள டிபா

## இந்தியா-பாகிஸ்தானிடையே போ
## 12 1/2 கோடி மக்கள் உயிரிழ

### ஜேர்மன் ஆய்வறிக்கையில் அதிர்ச்சித் தகவல்

(டில்லி)

இந்தியா-பாகிஸ்தான் இடையே அணு ஆயுதப்போர் மூண்டால் 12 1/2 கோடி பேர் உயிரிழக்கும் ஆபத்துள்ளதாக ஜேர்மன் நாட்டின் ஆய்வு அறிக்கையில் அதிர்ச்சித் தகவல் வெளியாகியுள்ளது.

காஷ்மீரிலுள்ள புல்வாமாவில் விடுமுறை முடிந்து கடந்த ஆண்டு பெப்ரவரி 14 ஆம் திகதி பணிக்கு திரும்பிக்கொண்டிருந்த துணை இராணுவத்தினரின் வாகனங்களை குறி வைத்து பயங்கரவாதிகள் காட்டுமிராண்டித்தனமான தாக்குதல் நடத்தினர்.

ஜம்மு-ஸ்ரீநகர் நெடுஞ்சாலையில் மனித வெடிகுண்டைக் கொண்டு நடத்திய தாக்குதலில், 40 இற்கும் மேற்பட்ட வீரர்கள் உயிரிழந்தனர்.


பாகிஸ்தானை தலைமையிடமாகக் கொண்டு செயற்பட்டு வருகிற ஜெய்ஷ் இ முகமது பயங்கரவாத இயக்கம் நடத்திய இந்த தாக்குதல், நாடு முழுவதும் மிகுந்த கொந்தளிப்பை ஏற்படுத்தியது.

இந்தத் தாக்குதல் நடந்து 12 நாட்கள் கடந்த நிலையில் இந்திய விமானப் படை விமானங்கள் பாகிஸ்தானுக்குள் அதிரடியாக பறந்து சென்று பாலகோட்டிலுள்ள ஜெய்ஷ் இ முகமது பயங்கரவாத இயக்கத்தின் பயிற்சி முகாமை குண்டுகள் போட்டு அழித்தன. அதைத் தொடர்ந்து இரு தரப்பிலும் போர்ப்பதற்றம் நீடிக்கிறது.

புல்வாமா தாக்குதல் நடந்து ஓராண்டு நினைவுதினம் அனுஷ்டிக்கப்பட்டு சில நாட்களேயான நிலையில், ஜேர்

# வெளிநாடு

## த்தும் கொரோனா
## 004 ஆக உயர்வு



நேற்று முன்தினம் ஒரு நாளில் மட்டும் 136 பேர் உயிரிழந்தனர். இதுவரை 74,185 பேருக்கு இந்த வைரஸ் பாதிப்பு இருப்பது உறுதி செய்யப்பட்டது. ஒரே நாளில் 1,749 பேர் புதிதாக கொரோனா வைரஸ் பாதிப்புக்கு உள்ளாகியுள்ளனர். (ஜ-2)

## நெரிசலில் சிக்கிய
## ப்பு; பலர் படுகாயம்

நகரில் இருக்கும் அகதிகள் முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

இந்த நிலையில் நைஜீரியாவின் போர்னோ மாகாண ஆளுநர் நைஜரில் உள்ள அகதிகள் முகாமுக்குச் சென்று, அங்குள்ள தங்கள் நாட்டு மக்களை சந்தித்துப் பேசினார்.

அதனை தொடர்ந்து, அவரது சார்பில் அகதிகளுக்கு உணவு உள்ளிட்ட நிவாரணப் பொருட்களும் பணமும் வழங்கப்பட்டது.

இதை பெறுவதற்கு மக்கள் ஒருவரையொருவர் முண்டியடித்துக்கொண்டு சென்றதால் அங்கு கடும் நெரிசல் ஏற்பட்டது. இதில் சிக்கி பெண்கள், குழந்தைகள் உட்பட 22 பேர் சம்பவ இடத்திலேயே பரிதாபமாக உயிரிழந்தனர். மேலும் பலர் படுகாயம் அடைந்தனர். (ஜ-2)

## யே போர் மூண்டால்
## ிரிழக்கும் ஆபத்து
### வல்

மனியில் 'தி முனிச் பாதுகாப்பு அறிக்கை-2020' என்ற ஆய்வு அறிக்கை வெளியாகியுள்ளது.

அந்த அறிக்கையிலேயே இந்தியா - பாகிஸ்தான் இடையே அணு ஆயுதப் போர் மூண்டால் 12 1/2 கோடி பேர் உயிரிழக்கும் ஆபத்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, "புல்வாமா தாக்குதலை தொடர்ந்து இந்தியா, பாகிஸ்தான் இடையேயான போர்ப்பதற்றம் அதிகரித்துள்ளது. இருதரப்பு இராணுவங்களும் அவ்வப்போது மோதிக்கொண்டுள்ளன.

இந்தச் சூழலில், காஷ்மீரில் நடத்தப்படுகின்ற ஒரு பயங்கரவாத தாக்குதல் கூட இரு நாடுகள் இடையேயான பதற்றத்தை அதிகரிக்கும் ஆபத்துள்ளது.

இதனால் அணு ஆயுத நாடுகளான இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையே இராணுவ மோதல்கள் ஏற்படலாம். இரு நாடுகளிலும் 100 முதல் 150 அணு ஆயுதங்கள் இருக்கக் கூடும்.

இரு நாடுகள் இடையே 2025 இல் போர் நடந்தால், இந்தப் போரில் 15 ஆயிரம் தொன் முதல் ஒரு இலட்சம் தொன் வரையில் அணு ஆயுதங்கள் பயன்படுத்தப்படலாம்.

இதனால் ஒரு கோடியே 60 இலட்சம் தொன் முதல் 3 கோடியே 60 இலட்சம் தொன் வரையில் கறுப்பு கார்பன் புகை வெளியாகும். சூரிய ஒளியின் அளவு 20 முதல் 35 சதவீதம் குறையும்.

நிலத்தில் பயிர்கள் உற்பத்தித் திறன் 15 முதல் 30 சதவீதம் பாதிக்கும். கடல் உற்பத்தி 5 முதல் 15 சதவீதம் குறையும்.

எல்லாவற்றுக்கும் மேலாக மனிதர்களின் உயிரிழப்பை பொறுத்தமட்டில் 5 கோடி முதல் 12 1/2 கோடி பேர் உடனடியாக உயிரிழக்கும் ஆபத்து இருக்கிறது" என அதில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ஜ-2)

## தீ மூட்டப்பட்ட கார்
## உடல் கருகி நால்வர் பலி

(கன்பெரா)

அவுஸ்திரேலியாவின் பிரிஸ்பேர்னில் கார் தீ மூட்டப்பட்டதில் மூன்று குழந்தைகள் உட்பட நால்வர் உயிருடன் எரிந்து கருகிய அதிர்ச்சிகர சம்பவம் இடம்பெற்றது.




பிரிஸ்பேர்னின் காம்ப்ஹில் பகுதியில் இடம்பெற்ற இந்த சம்பவத்தில் பத்து வயதிற்கு உட்பட்ட மூன்று குழந்தைகளும் ஆண் ஒருவரும் உயிரிழந்தனர். பெண்ணொருவர் பலத்த எரிகாயங்களுடன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

இது தொடர்பான விசாரணைகள் ஆரம்பமாகியுள்ளன எனத் தெரிவித்துள்ள பொலிஸார் நாங்கள் அந்தப் பகுதிக்குச் சென்றவேளை வாகனம் முற்றாகத் தீப்பிடித்து எரிந்துகொண்டிருந்தது எனத் தெரிவித்தனர்.

குறிப்பிட்ட ஐவரும் அருகில் உள்ள பகுதியொன்றிலேயே வசிக்கின்றனர் என பொலிஸார் தெரிவித்தனர். (ஜ-2)

## 5 மாதங்களின் பின் தேர்தல் முடிவு;
## அஷ்ரப் கானி மீண்டும் வெற்றி



(காபூல்)

ஆப்கானிஸ்தான் ஜனாதிபதித் தேர்தல் நடைபெற்று 5 மாதங்களுக்குப் பின்னர் நேற்று முன்தினம் வெளியான முடிவுகளின்படி தற்போதைய ஜனாதிபதி அஷ்ரப் கானி மீண்டும் வெற்றி பெற்றார்.

அப்கானிஸ்தான் ஜனாதிபதித் தேர்தல் முடிவுகளை அந்நாட்டு தேர்தல் ஆணைக்குழு நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை அதிகாரபூர்வமாக அறிவித்தது.

அதன்படி தற்போதைய ஜனாதிபதி அஷ்ரப் கானி 50.64 சதவீத வாக்குகள் பெற்று மீண்டும் ஜனாதிபதியாக தேர்வு செய்யப்பட்டு இருப்பதாக அறிவித்துள்ளது.

அவரை எதிர்த்துப் போட்டியிட்ட அப்துல்லா 39.52 சதவீத வாக்குகளைப்பெற்றதாக தேர்தல் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

18 ஆண்டுகளாக ஆப்கானிஸ்தான் அரசுக்கும் தலிபான்களுக்கு இடையேயான போர் நடந்து வருகிறது.

இதனை பேச்சுவார்த்தையின் மூலம் தீர்ப்பதற்கான முயற்சியில் பாகிஸ்தானும் தலிபான் பிரதிநிதிகளும் இறங்கி உள்ளனர்.

இந்த நிலையில், ஆப்கானில் கடந்த ஆண்டு செப்டெம்பர் மாதம் 28 ஆம் திகதி பொதுத் தேர்தல் நடந்து முடிந்தது.


இதில் தலிபான்களின் அச்சுறுத்தலை மீறியும் 90 இலட்சத்துக்கு அதிகமான மக்கள் தங்கள் வாக்குகளைப் பதிவு செய்தார்கள். (ஜ-2)

## தீவிரவாதிகளுக்கு நிதியுதவி;
## சட்டத்தை கடுமையாக்கவும்

### சர்வதேச நிதிக் கண்காணிப்பு அமைப்பு பாகிஸ்தானுக்கு வலியுறுத்து

(இஸ்லாமாபாத்)

தீவிரவாதிகளுக்கு நிதியுதவி கிடைப்பதைத் தடுக்க சட்டத்தைக் கடுமையாக்கும்படி பாகிஸ்தான் அரசுக்கு சர்வதேச நிதிக் கண்காணிப்பு அமைப்பான FATF வலியுறுத்தியது.




பிரான்சின் பாரிசில் நடைபெற்றுவரும் கூட்டத்தில் பாகிஸ்தான் தீவிரவாத இயக்கங்கள் மீது எடுத்துள்ள நடவடிக்கைகள் குறித்த அறிக்கை தாக்கல் செய்யப்பட்டது.

இந்நிலையில், FATF அளித்திருந்த 27 பரிந்துரைகளில் 14 அம்சங்கள் நிறைவேற்றப்பட்டதாகவும் தீவிரவாதக் குழுக்களுக்கு நிதியுதவி கிடைப்பதைத் தடுக்க பாகிஸ்தான் சட்டத்தைக் கடுமையாக்க வேண்டும் எனவும் அந்த அமைப்பு வலியுறுத்தியுள்ளது.

நாளை வெள்ளிக்கிழமை பாகிஸ்தான் குறித்து FATF முடிவெடுக்கவுள்ள நிலையில் அந்நாட்டிற்கு விதிக்கப்பட்ட கறுப்புப் பட்டியல் நீடிக்கும் என தற்போதைய சூழ்நிலையில் தகவல் வெளியாகியுள்ளது. (ஜ-2)

# புதுச்சேரியிலிருந்து யாழிற்கு விரைவில் கப்பல் சேவை!


(மதுரை)

**புதுச்சேரியிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு விரைவில் கப்பல் போக்குவரத்துச் சேவை ஆரம்பிக்கப்படும் என்று இந்திய மத்திய கப்பல் போக்குவரத்துத்துறை இணை அமைச்சர் மன்சுக் மாண்டவியா தெரிவித்தார்.**

மதுரைக்குப் பயணம் மேற்கொண்ட அவர், நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த போதே இவ்வாறு கூறினார்.

"இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையே கப்பல் போக்குவரத்தை ஆரம்பிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

முதற்கட்டமாக புதுச்சேரியிலிருந்து, யாழ்ப்பாணத்துக்கு கப்பல் போக்குவரத்து விரைவில் ஆரம்பிக்கப்படும்.



அதற்கான நடவடிக்கைகளை மத்திய அரசு மேற்கொண்டு வருகிறது" என இணை அமைச்சர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## 17.8 மில்லியன் நிதி நயினாதீவின் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களுக்காக ஒதுக்கீடு

(யாழ்ப்பாணம்)

பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன், தீவகத்தின் ஊர் எழுச்சி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் நயினாதீவு பிரதேசத்தில் 6 வீதிகளின் புனரமைப்புக்கென 115 இலட்சம் (11.5 மில்லியன்) ரூபாவும் ஒரு ஆலயப் புனரமைப்புக்கென 5 இலட்சம் (0.5 மில்லியன்) ரூபாவும் 3 பாடசாலைகளின் மைதான புனரமைப்புக்கென 15 இலட்சம் (1.5 மில்லியன்) ரூபாவும் 2 குளங்கள் புனரமைப்பிற்காக 43 இலட்சம் (4.3 மில்லியன்) ரூபாவுமாக மொத்தமாக 12 அபிவிருத்தித் திட்டங்களுக்காக 178 இலட்சம் (17.8 மில்லியன்) ரூபா நிதி ஒதுக்கீடு செய்துள்ளார்.



**நிதி ஒதுக்கப்பட்ட வீதிகள்**

1)நயினாதீவு தெற்கு விநாயகர் வீதிப் புனரமைப்பு-20 இலட்சம்.

2)நயினாதீவு வடக்கு குடலைப்பேய் வீதிப் புனரமைப்பு-20 இலட்சம்.

3)நயினாதீவு மத்தி இலந்தைக்குழி வீதிப் புனரமைப்பு-20 இலட்சம்.

4)நயினாதீவு வடக்கு விளாத்திக்குழி வீதிப் புனரமைப்பு-20 இலட்சம்.

5)நயினாதீவு தெற்கு பிராமண வழிப்பாதைப் புனரமைப்பு-15 இலட்சம்.

6) நயினாதீவு எருமைப்பட்டி வீதிப் புனரமைப்பு-20 இலட்சம்.

**நிதி ஒதுக்கப்பட்ட குளங்கள்**

1)நயினாதீவு தெற்கு மீனாட்சி அம்மன் கோயில் குளப் புனரமைப்பு-35 இலட்சம்.

2)நயினாதீவு கிராய் குளம் புனரமைப்பு-8 இலட்சம்.

**நிதி ஒதுக்கப்பட்ட பாடசாலைகள்**

1)யா/நயினாதீவு கணேசா வித்தியாலய மைதானப் புனரமைப்பு-5 இலட்சம்.

2)யா/நயினாதீவு மகாவித்தியாலய மைதானப் புனரமைப்பு-5 இலட்சம்.

3)யா/நயினாதீவு நாகபூஷணி வித்தியாசாலை மைதானப் புனரமைப்பு-5 இலட்சம்.

**நிதி ஒதுக்கப்பட்ட ஆலயம்**

1)நயினாதீவு வடக்கு ஆலடி அம்மன் ஆலயப் புனரமைப்பு-5 இலட்சம்.

இவ்வாறு 12 அபிவிருத்தித் திட்டங்களுக்காக 178 இலட்சம் (17.8 மில்லியன்) ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது.

இதில் பல வேலைத்திட்டங்கள் நிறைவடைந்துள்ளன. சில வேலைத்திட்டங்கள் நடைபெற்று வருகின்றன. (இ-7)

## பகிடிவதைக்கு எதிராக கண்டனத் தீர்மானம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் இடம்பெற்ற பகிடிவதைகள் கண்டனத்துக்குரியவை.

தமிழ் மக்களை தலைகுனிய வைக்கும் இச்சம்பவத்தை வன்மையாகக் கண்டிப்பதுடன் எதிர்காலத்தில் இதுபோன்ற சம்பவங்கள் இடம்பெறாமல் பல்கலைக்கழக நிர்வாகம் பார்த்துக்கொள்ள வேண்டும் என வடமராட்சி தெற்கு-மேற்கு பிரதேச சபை மாதாந்தக் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

உறுப்பினர் க.பரஞ்சோதி இந்தக் கண்டனத் தீர்மானத்தைக் கொண்டு வந்தார்.

இத்தீர்மானத்தைத் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, தமிழர் விடுதலைக் கூட்டணி உள்ளிட்ட உறுப்பினர்கள் ஏகமனதாக ஏற்றதையடுத்து நிறைவேற்றப்பட்டது. (இ-60)

## மெய்வல்லுநர் போட்டி

(குப்பிழான்)

வயாவிளான்ஸ்ரீ வேலுப்பிள்ளை வித்தியாசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று வியாழக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் வயாவிளான் மத்திய கல்லூரி மைதானத்தில் அதிபர் ஜே.யூட்மரியரட்ணம் தலைமையில் இடம்பெறும்.

இதில் பிரதம விருந்தினராகக் கோப்பாய் கல்வியியற் கல்லூரி பீடாதிபதி சு.பரமானந்தன், சிறப்பு விருந்தினர்களாக வலிகாமம் வலய உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் ப.பார்த்தீபன் மற்றும் வலிகாமம் கல்வி வலய நிதி உதவியாளர் திருமதி சுபாசினி சிவமோகன் ஆகியோர் கலந்து கொள்வர். (இ-18)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## அளவு கடந்த அன்பு!

''உங்கள் மேலே எனக்கு அளவு கடந்த அன்பு" அப்படியென்று யாராவது சொன்னால் அதை அலட்சியமாக நினைக்கக்கூடாது. அது கொஞ்சம் சீரியஸ் ஆன விடயம்.

அளவுக்கு மிஞ்சினால் எதுவுமே இடைஞ்சல் தானே. அன்பும் அப்படித்தான். அன்பு அதிகமாக இருந்தால் அது எப்படி கெடுதல் செய்யும் என்கிற சந்தேகம் உங்களுக்கு வரலாம். தசரதன் கதை என்ன ஆனது? கைகேயி மேலே வைத்த அளவு கடந்த அன்பு... இராமன் காட்டிற்குப் போவதைப் போல ஆகிட்டுது அல்லவா! தசரதன் எப்பேர்ப்பட்ட அரசன்.

விஸ்வாமித்திரர் சொல்கிறார்.(கம்பராமாயணம்) என்னை மாதிரி முனிவர்களுக்கும் தேவர்களுக்கும் ஏதாவது கஷ்டம் வந்தால் முதலிலே முருகனிடம் போவோம். அப்புறம் பரமசிவனைப் பார்ப்போம். அதற்குப் பின் திருமாலிடம் போவோம். பின் பிரம்மன்... இந்திரன் இவர்களைக் போய்ப் பார்ப்போம். இவர்களாலேயெல்லாம் முடியவில்லை என்றால் அயோத்திக்கு வருவோம் என்றார்.

'உன்னை விட்டால் வேற கதி உண்டா" என்று தசரதனைப் பார்த்து விஸ்வாமித்திரரே சொல்கிறார். அப்பேர்ப்பட்ட அரசன் தசரதன் கைகேயி காலிலே வந்து விழுகிறான். "உன் பாதங்களைத் தொட்டுக் கெஞ்சிக் கேட்கின்றேன்... இராமனைக் காட்டிற்கு அனுப்பாதே!" என்றார்.

தசரதனுடைய இந்த நிலைமைக்கு என்ன காரணம்? அவன் கைகேயி மேலே வைத்த அளவு கடந்த அன்பு தான் காரணம். இப்போது சொல்லுங்கள்... அன்பா இருந்தாலும் அது அளவுக்கு மீறிப்போனா கெடுதல் செய்யுமா... செய்யாதா? அதுமட்டுமில்லை... அளவு கடந்த அன்பு நீதிக்கும் நியாத்துக்கும் புறம்பான காரியங்களையும் செய்ய வைத்திடும்.

தசரதன் மிகச் சிறந்த நீதிமான். தர்மத்திற்கு விரோதமாக ஒரு காரியமும் செய்யாதவன். அப்பேர்ப்பட்டவன் தன் மனைவியைப் பார்த்து என்ன சொல்கிறான் தெரியுமா? "உனக்காக நான் என்ன செய்ய வேண்டும் சொல்... செய்கிறேன். ஒரு குற்றமும் செய்யாத ஒருத்தனைக் கொல்லணுமா? கொல்கிறேன்! மரண தண்டனை விதிக்கப்பட்ட ஒருத்தனை விடுதலை செய்யச் சொல்கிறாயா... செய்கிறேன்! எந்த யாசகனையாவது கோடீஸ்வரன் ஆக்கச் சொல்கிறாயா... ஆக்குகிறேன்! அல்லது கோடீஸ்வரனை யாசகனாக ஆக்கணுமா ஆக்குகிறேன்" அப்படி என்றார் சேர்.

நீதிக்கு விரோதமான இந்தப் பாவங்களைச் செய்வதற்கு அப்பேர்ப்பட்ட அரசன் எப்படித் துணிந்தான்! மனைவியில் வைத்த அளவு கடந்த அன்புதான் காரணம்! திரிசூலம் , வஜ்ராயுதம், வாள் இவைகளாலே தாக்கப்பட்டால் கூட அதையெல்லாம் கொஞ்சம் கூட லட்சியம் செய்யாத ஒருத்தன் காமதேவனுடைய மலர் அம்புகள் தாக்கினால் அதை அவனாலே தாக்குப்பிடிக்க முடியவில்லை... விழுந்து விடுகிறான்.

காமதேவனுக்கு உள்ள மகிமையே அதுதான் என்கிறார் துளசிதாஸர். அதனாலே தான் பெரியவர்களெல்லாம் என்ன சொல்கிறார்கள் என்றால்... எதையும் அளவுக்கு மீறி செய்யாதீர்கள். அப்பா- அம்மா-மனைவி- மக்கள் எல்லோரிடமும் அன்பு அவசியம் தான். ஆனால் அந்த அன்பு அறிவுக்குப் புறம்பா இருக்கக்கூடாது. அளவிற்கு மீறியும் இருக்கக்கூடாது. அப்போது தான் வாழ்க்கை சுகமா இருக்கும். இல்லையென்றால் அவஸ்தைதான்!

அளவுக்கு மீறிய அன்பென்பது புரியுது.அது சரி... அறிவிற்கு புறம்பான அன்பென்பது எப்படி? ஒரு தாய்க்கு ஜலதோஷம்... அல்லது ஏதோ ஒரு தொற்று நோய்...என்று வைத்துக் கொள்ளுங்களேன். அந்த அம்மாவுக்கு தன் குழந்தைமேலே அளவு கடந்த அன்பு. தனக்கு நோய் இருக்கு... அது அடுத்தவர்களுக்குத் தொற்றக் கூடாது என்று தெரிஞ்சிருந்தும்... அன்பைக் காட்டுவதற்காக அந்தக் குழந்தைக்கு முத்தம் கொடுக்கிறேன் என்று தூக்கி வைத்துக்கொண்டு கொஞ்ச ஆரம்பித்தால் அது நல்லா இருக்குமா? இதுதான் அறிவிற்குப் புறம்பான அன்பு.

அது மாதிரி விலங்குகள் இடம் அன்பாக இருக்க வேண்டும் என்று சொல்கிறோம். அதுக்காக புலிக்கு முத்தம் கொடுக்க முடியுமா? அப்படி கொடுத்தால் அது அறிவிற்குப் புறம்பான அன்பு. அதனாலே அன்பு கூட அறிவு பூர்வமாக இருக்க வேண்டும். அப்படி என்பதை இன்றைக்கு தகவல் மூலமா நாம் புரிந்து கொள்ளனும்.

இந்தக் காலத்துக் காதலன் தன்னுடைய காதலிகிட்டே சொன்னான். "இதோ பாரு... உன்மேலே எனக்கு அளவு கடந்த அன்பு... உனக்காக என்ன செய்ய வேண்டும் சொல்... செய்கிறேன். நெருப்பிலே நடக்கணுமா நடக்கிறேன். நீரிலே குதிக்கணுமா... குதிக்கிறேன்... உயிரையே கொடுக்கணுமா... கொடுக்கிறேன்!" என்றான். "சரி... வருகின்ற ஞாயிற்றுக்கிழமை மாலை ஆறு மணிக்கு இதே இடத்திற்கு வாங்க...!" அப்படி என்றாள் அந்தப் பெண். இவன் கொஞ்சம் யோசித்துப் பார்த்துவிட்டு அன்றைக்கு மழை பெய்யாமல் இருந்தால் வருகிறேன்! அப்படி என்றானாம்!

# மாணவர்கள் போதைப்பொருள் பாவனைக்கு அடிமையாவதைத் தடுக்க விசேட திட்டம்!

## பாடசாலை தோறும் ஒரு பொலிஸ் உத்தியோகத்தர் கடமையில்



(கொழும்பு)

**பாடசாலை மாணவர்கள் போதைப்பொருள் பாவனைக்கு அடிமையாவதை தடுக்கும் வகையில் பாடசாலை தோறும் ஒரு பொலிஸ் உத்தியோகத்தரை கடமையில் ஈடுபடுத்த அரசாங்கம் தீர்மானித்துள்ளது. பாடசாலை வளாகத்துக்குள் அல்லது அதனை அண்மித்த பகுதிகளில் போதைப்பொருள் தொடர்பில் இடம்பெறக் கூடிய சம்பவங்களை உடனுக்குடன் அறியத்தரும் வகையில் 077 712 8128 எனும் அவசர தொலைபேசி இலக்கமும் அறிமுகம் செய்து வைக்கப்பட்டது.**

பாடசாலை மாணவர்களிடையே அதிகரித்து வரும்போதைப் பொருள் பாவனையை முற்றாக ஒழிப்பதற்காக பொலிஸ் திணைக்களமும் அபாயகரமான ஔடதங்களை கட்டுப்படுத்தும் தேசிய அதிகாரசபையும் கல்வியமைச்சும் இணைந்தே மேற்படி வேலைத் திட்டத்தை நேற்று முன்தினம் முதல் அமுலுக்கு வரும் வகையில் ஆரம்பித்துள்ளன.

இலங்கையை பொறுத்தவரை பாடசாலை மாணவர்களிடையிலேயே போதைப்பொருள்பாவனை அதிகரித்து வருவது கண்டறியப் பட்டுள்ளது. மேல் மாகாணத்தின் 49 பாடசாலைகளை இலக்கு வைத்து, "பாதுகாப்பான நாளை" எனும் தொனிப்பொருளில் விசேட வேலைத்திட்டமொன்று நேற்று முன்தினம் கல்வியமைச்சில் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது.

இந்நிகழ்வில் கல்வியமைச்சின் செயலாளர் என்.எம்.எம். சித்ரானந்த, கல்வியமைச்சின் மேலதிகச் செயலாளர் எச்.யூ. பிரேமதிலக்க, பாடசாலைகளுக்கான சுகாதார மற்றும்போஷணைப் பணிப்பாளர் ரேனுக்கா பீரிஸ், மேல் மாகாணத்துக்குப் பொறுப்பான பிரதி பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னகோன் உள்ளிட்ட பல அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

இதன்போது உரையாற்றிய பிரதி பொலிஸ்மா அதிபர் மேல் மாகாணத்திலும் குறிப்பாக கொழும்பு மாவட்டத்திலேயே அதிக எண்ணிக்கையான மாணவர்கள் போதைப்பொருள் பாவனைக்கு அடிமையாகியிருப்பதாக கூறினார். இதுவரை மேற்கொள்ளப்பட்டுள்ள கணக்கெடுப்புகளின்படி ஹெரோயின், கஞ்சா,போதை மாத்திரைகள், சாராயம் என்பவற்றுக்கு 2 இலட்சத்து 30 ஆயிரத்து 982 மாணவர்கள் அடிமையாகியிருப்பதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

இந்த எண்ணிக்கை நாடு முழுவதுமுள்ள ஏனைய மாவட்டங்களிலும் பார்க்க அதிகம் என்பதால் இம்மாணவர்களை மீட்கவும் ஏனைய மாணவர்களை பாதுகாக்கும் நோக்கிலேயே இவ்வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டிருப்பதாகவும் அவர் கூறினார். அவர் இது தொடர்பில் மேலும் விளக்கமளித்ததாவது,

கடந்த 2018 ஆம் ஆண்டில் போதைப்பொருள் பாவனை காரணமாக பொலிஸார் 60 ஆயிரத்து 506 பேரை கைது செய்தனர். விற்பனையாளர்களதும் அதனை பாவிப்பவர்களதும் போலி வார்த்தைகளை நம்பியே அநேகமான மாணவர்கள் இப்பழக்கத்துக்கு அடிமையாகின்றனர்.

போதைப் பொருட்களை பாவிப்பதனால் நீண்ட நேரம் கண் விழிக்கலாம், சமிபாட்டு சக்தி அதிகரிக்கும், சமூகத்தில் நன்மதிப்பு கிடைக்கும் எனத் தெரிவிக்கப்படுவதில் எவ்வித உண்மையும் இல்லை என்பதனை மாணவர்களுக்கு அறியத்தர வேண்டும். இது பற்றி அவர்களுக்கு விழிப்புணர்வூட்ட வேண்டும். இதற்கான பொறுப்பை பாடசாலை அதிபர்களிடம் ஒப்படைத்துள்ளோம் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# தேயிலை மலையில் இரு பெண் சிசுக்கள் சடலமாக மீட்பு!

## பொலிஸார் தீவிர விசாரணை

(ஹற்றன்)

நுவரெலியா பொலிஸ் பிரிவிற்குட்பட்ட நுவரெலியா நேஸ்பி தோட்டப் பகுதியிலுள்ள தேயிலை மலையில் இருந்து உயிரிழந்த நிலையில், இரு பெண் சிசுக்களின் சடலங்களை நுவரெலியா பொலிஸார் மீட்டனர். இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்றதாக நுவரெலியா பொலிஸார் தெரிவித்தனர்.

தோட்டத் தேயிலை மலையில் வீசப்பட்ட குறித்த சிசுக்கள் தொடர்பாக பொதுமக்களால் பொலிஸாருக்கு வழங்கப்பட்ட தகவலுக்கு அமைய சம்பவ இடத்திற்குச் சென்று சிசுக்களின் சடலங்களை பொலிஸார் மீட்டனர். இதேவேளை, கண்டெடுக்கப்பட்ட சிசுக்கள் தொடர்பாக தீவிர விசாரணைகளை நுவரெலியா பொலிஸார் மேற்கொண்டு வருவதாகவும் சிசுக்களின் தாய் தேடப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

மேலும் குறித்த சிசுக்கள் கொலை செய்யப்பட்ட பின்னர் வீசப்பட்டிருக்கலாமென பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணைகளில் இருந்து தெரியவந்தது. சிசுக்களின் சடலங்கள் நுவரெலியா மாவட்ட வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளதோடு, சிசுக்களின் தாயைத் தேடும் நடவடிக்கையை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# தாயின் கவனயீனத்தால் 15 வயதுச் சிறுமி பலி!

## 2 வயதுக் குழந்தை படுகாயம்

(கொழும்பு)

நிக்கவரெட்டிய பொலிஸ் பிரிவிற்குட்பட்ட தலாகொலஹேன கந்தேகெதர வீதியின் கந்தேகெதர பகுதியிலிருந்து தலாகொலஹேன நோக்கி பயணித்த மோட்டார் சைக்கிள் விபத்துக்குள்ளானதில் சிறுமி ஒருவர் உயிரிழந்தார்.

நேற்று முன்தினம் பிற்பகல் 3.50 மணியளவில் இந்த விபத்து இடம்பெற்றது.

மோட்டார் சைக்கிளின் வேகத்தைக் கட்டுப்படுத்த முடியாததன் காரணமாக இந்த விபத்து இடம்பெற்றதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்தில் மோட்டார் சைக்கிள் சாரதியான பெண் மற்றும் பின்னால் அமர்ந்து சென்ற அவரது இரண்டு பிள்ளைகள் காயமடைந்தனர்.

காயமடைந்தவர்களில் 15 வயது சிறுமி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்தார்.

மற்றைய இருவரும் நிக்கவரெட்டிய வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

காயமடைந்தவர்களில் 2 வயது குழந்தை ஒன்றும் அடங்குவதாக தெரிவிக்கப்படுகிறது.

விபத்து தொடர்பில் நிக்கவரெட்டிய பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ-7)





தேவை நாடும் மகளிர் அமைப்பின் ஏற்பாட்டில் தொழில் பயிற்சி பெறும் "இளைஞர்களுக்கு இணையத்தள வன்முறைகளும் சட்ட ஏற்பாடுகளும்" எனும் தலைப்பிலான விழிப்புணர்வுக் கருத்தரங்கு அண்மையில் கொழும்பு குற்றப் புலனாய்வுப் பிரிவின் பெண்கள், சிறுவர் அலகு பொலிஸ் அதிகாரி எஸ்.காண்டீபன் தலைமையில் நடைபெற்றது.

# மாசி மாத இராசி பலன்கள்

## 13.02.2020-13.03.2020



## தன்னம்பிக்கை துளிர்விடும் நேரம்

விகாரி வருடம் மாசி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசிநாதன் சனி பகவான் இலாபாதிபதி குருவோடு இணைந்திருக்கிறார். அந்த இலாப ஸ்தானத்தில் செவ்வாயும், கேதுவும் கூட சேர்ந்து சஞ்சரிக்கின்றன. எனவே தொழில் வளர்ச்சி, அதிக இலாபம், புதிய திட்டங்களைத் தீட்டி வெற்று காணுதல், நண்பர்களின் ஒத்துழைப்பு, தன்னம்பிக்கை, தைரியம் அதிகரித்தல் போன்ற பலவகையான காரியங்கள் நடைபெறப் போகிறது.

குறிப்பாக பற்றாக்குறை பட்ஜெட் இனி மாறும். பாடுபட்டதற்கேற்ற பலன் கிடைக்கும். உற்றார், உறவினர்கள் உங்கள் முன்னேற்றத்திற்கு உறுதுணையாக இருப்பார்கள். உயரதிகாரிகளின் சொல்லுக்கேற்ப உடனுக்குடன் வேலைகளை முடித்துக் கொடுப்பீர்கள். உங்கள் கடமையில் இருந்து வந்த தொய்வு அகலும். பணப்புழக்கம் அதிகரிக்கும். குலதெய்வ பிரார்த்தனைகள் நிறைவேற்றுவீர்கள்.

உங்கள் இராசியிலேயே சூரியன் புதனோடு இணைந்து சஞ்சரிக்கிறார். சப்தமாதிபதி சூரியனோடு, பஞ்சம அஷ்டமாதிபதி புதன் இணைந்து செயல்படுவதாலும், சுக்கிர பலம் 2இல் உச்சம் பெற்றிருப்பதாலும் நல்ல வாய்ப்புகள் வந்து கொண்டே இருக்கும். இருப்பினும் சனியின் மூன்றாம் பார்வை உங்கள் இராசியில் பதிவதால் சில வாய்ப்புகள் கைநழுவிச் செல்லலாம். சில வாய்ப்புகள் கைக்கு கிடைத்தும், அவற்றை உபயோகப்படுத்திக் கொள்ள இயலாமல் போகலாம்.

சூரியனைச் சனி பார்ப்பது அவ்வளவு நல்லதல்ல. அதற்குரிய சிறப்பு பரிகாரங்களை செய்து கொள்வதன் மூலம் சிந்தனைகள் வெற்றி பெறும். செல்வவளம் பெருகும். சூரியனுக்கு, சனி புதல்வராக இருந்தாலும் ஒன்றுக்கொன்று பகை கிரகம் என்பதால், அதன் பார்வைபடும் நேரங்களில் கொஞ்சம் கவனத்துடன் இருப்பது நல்லது. பஞ்சம ஸ்தானத்தில் இராகு பலம் பெற்றிருக்கிறார். எனவே பிள்ளைகளால் விரயங்கள் ஏற்படும். அவர்களை உங்கள் மேற்பார்வையில் வைத்துக் கொள்ளுங்கள். வெளிநாடுகளில் வேலை பார்க்கும் பிள்ளைகளை அவ்வப்போது தொடர்பு கொண்டு அவர்களின் நிலையை அறிந்து கொள்வதும் அவசியம். இம்மாதம் மகா சிவராத்திரி வருகிறது. அன்றைய தினம் ஆறு கால பூஜையிலும் கலந்து கொண்டு சிவபெருமானை உள்ளன்போடு வழிபட்டு இல்லத்தில் மகிழ்ச்சி கூடும்.

வக்கிர புதன் சஞ்சாரம்

இம்மாதம் 21ஆம் திகதி மகர இராசிக்கு புதன் செல்கிறார். உங்கள் இராசிக்கு அஷ்டமாதிபதியாகவும், விளங்குபவர் புதன். அவர் 12ஆம் இடத்தில் வக்கிரம் பெறும் பொழுது "கெட்டவன் கெட்டிடில் கிட்டிடும் ராஜயோகம்" என்பதற்கேற்ப நல்ல பலன்கள் உங்களை நாடிவரும். பயணங்களால் பலன் கிடைக்கும். உத்தியோகம் சம்பந்தமாக ஏதேனும் ஒரு முயற்சி செய்திருந்தால் அதில் வெற்றி கிடைக்கும். வெளிநாடு சென்று பணிபுரிய வேண்டுமென்று ஆசைப் பட்டவர்களுக்கு, அங்கிருந்து வரும் தகவல் மகிழ்ச்சியளிப்பதாக இருக்கும். பழைய வாகனங்களை கொடுத்து விட்டுப் புதிய வாகனங்கள் வாங்க நினைப்பவர்களுக்கு அது கைகூடும். தெய்வ கைங்கரியங்கள் செய்வதில் ஆர்வம் காட்டுவீர்கள்.

பூர்வீகச் சொத்துக்களால் ஏற்பட்ட பிரச்சினை நல்ல முடிவிற்கு வரும். இழுபறி நிலையிருந்த பஞ்சாயத்துக்கள், இப்பொழுது உங்களுக்கு சாதகமாக அமையும். பிறருக்கு பணப்பொறுப்புகள் சொல்லி வாங்கிக் கொடுத்த தொகை தானாக வந்து சேரும். வீட்டிற்குத் தேவையான விலை உயர்ந்த பொருட்கள் வாங்குவதில் ஆர்வம் காட்டு




வீர்கள்.

மேஷ சுக்கிரன் சஞ்சாரம்

உங்கள் இராசிக்கு 4, 9 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் சுக்கிரன். சுகஸ்தானம் மற்றும் பிதுர்ரார்ஜித ஸ்தானத்திற்கு அதிபதியான சுக்கிரன், மார்ச் 2ஆம் திகதி சகாய ஸ்தானத்திற்கு வருகிறார். இதன் விளைவாக தாய்வழி ஆதரவு கிடைக்கும். தந்தை வழியில் ஏற்பட்ட தகராறுகள் தானாக விலகும். மங்கல நிகழ்ச்சிகள் மனையில் நடைபெறுவதற்கான அறிகுறி தென்படும். தங்கம், வெள்ளி போன்றவற்றை வாங்கி மகிழும் யோகம் உண்டு.

கும்ப புதன் சஞ்சாரம்

மார்ச் 12ஆம் திகதி கும்ப இராசியான உங்கள் இராசிக்கே புதன் வருகிறார். இதன் விளைவாக நல்ல மாற்றங்கள் உங்களுக்கு வந்து சேரப்போகிறது. குறிப்பாக பாக்யாதிபதி, இராசியில் உலாவரும் நேரத்தில் தேங்கிய காரியங்கள் சுறுசுறுப்பாக நடைபெறும். தெய்வ சிந்தனை கூடும். முன்னேற்றப் பாதையில் இருந்த முட்டுக்கட்டைகள் விலகும். நண்பர்கள் நல்ல தகவலைக் கொண்டு வந்து சேர்ப்பர். என்றைக்கோ குறைந்த விலையில் வாங்கிப் போட்ட சொத்து இப்பொழுது பலமடங்கு விலை உயர்ந்து, அதன் விற்பனை மூலம் பொருளாதார வளர்ச்சி கூடும். மாமன், மைத்துனர் வழி ஒத்துழைப்பு சிறப்பாக இருக்கும். இம்மாதம் சனிக்கிழமை தோறும் அனுமனை வழிபடுவதோடு, சிவராத்திரி அன்று சிவாலய வழிபாட்டையும் மேற்கொள்ளுங்கள்.

பெண்களுக்கான சிறப்புப் பலன்கள்

இம்மாதம் உங்களுடைய எதிர்பார்ப்புகள் நிறைவேறும் மாதம் என்றே சொல்லலாம். இல்லத்தில் மகிழ்ச்சி கூடும். பணவரவு திருப்தி தரும். கரைந்த சேமிப்புகளை ஈடுகட்டுவீர்கள். கணவன் மனைவிக்குள் ஒற்றுமை பலப்படும். ஆன்மீக நாட்டம் அதிகாரிக்கும். அக்கம் பக்கத்தினருடன் ஏற்பட்ட சண்டை, சச்சரவுகள் தீரும். ஆபரணங்கள் வாங்கி மகிழும் யோகம் உண்டு. தாய் மற்றும் சகோதர வர்க்கத்தினர் உங்களுக்கு உதவிகரமாக இருப்பர். பிள்ளைகளை உங்கள் மேற்பார்வையில் வைத்துக்கொள்ளுங்கள். பணிபுரியும் பெண்களுக்கு நல்ல முன்னேற்றங்கள் ஏற்படும். சென்ற மாதத்தில் எதிர்பார்த்த சலுகைகள் இப்பொழுது கிடைப்பதற்கான அறிகுறி தென்படும். வளர்ச்சிப் பாதையில் அடியெடுத்து வைக்க வாய்ப்புகள் கைகூடி வரும். சிவராத்திரி அன்று சிவதரிசனம் செய்வதோடு, அனுமனுக்கு உகந்த மூல நட்சத்திரம் வரும் நாளில் அனுமன் வழிபாட்டையும் மேற்கொள்ளுங்கள்.

ஜோதிடக் கலாமணி
சிவல்புரி சிங்காரம்



## இடமாற்றம், ஊர் மாற்றம் நேரும்

விகாரி வருடம் மாசி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசிநாதன் குரு, 10ஆம் இடத்தில் சனி, செவ்வாய் மற்றும் கேதுவோடு இணைந்து சஞ்சரிக்கிறார். இலாபாதிபதி சனி 10இல் இருப்பது யோகம்தான். தொழிலில் இலாபம் உருவாகும் என்றாலும், 10இல் குரு வந்தால் பதவி மாற்றம், இடமாற்றம் வரும் என்பது ஜோதிட வாக்கு.

அந்த அடிப்படையில் பார்க்கும் பொழுது, உத்தியோகத்தில் உள்ளவர்கள் மிகவும் கவனமாக செயல்பட வேண்டிய நேரம் இது. மேலதிகாரிகளின் வெறுப்புக்கு ஆளாவதாலும் பணியில் மாற்றம் வரலாம். இன்னும் சிலருக்கு சகப் பணியாளர்களின் தொல்லை காரணமாக திடீர் மாற்றங்கள் உருவாகலாம். எப்படி இருந்தாலும், அடுத்து வரும் குருப்பெயர்ச்சி வரை நிதானமும், பொறுமையும், பொறுப்புணர்வும் உங்களுக்குத் தேவை.

இம்மாதம் உங்கள் இராசியிலேயே சுக்கிரன் சஞ்சரிக்கிறார். 3, 8இற்கு அதிபதியான சுக்கிரன், உங்கள் இராசியிலேயே சஞ்சரிப்பதால் சகோதர வர்க்கத்தினரால் செலவுகள் ஏற்படும். அவர்களின் இல்லத் திருமண விழாக்களை முன்னின்று நடத்தும் வாய்ப்பு உங்களுக்கு வந்து சேரும். வழக்குகள் இழுபறி நிலையில் இருக்கும். ஒரு சிலருக்கு நம்பிக் கொடுத்த தொகை திரும்பப்பெற முடியாமல் போகலாம். சுக்கிரன் மேஷத்தில் சஞ்சரிக்கும் வரை பண விடயத்தில் எச்சரிக்கையாக இருங்கள். கொடுக்கல் வாங்கல்களில் கூடுதல் கவனம் தேவை.

மற்றவர்களை நம்பி ஒப்படைத்த பொறுப்புகள் மீண்டும் உங்களிடமே திரும்பி வரலாம். பழைய ஆபரணங்களைக் கொடுத்துவிட்டுப் புதிய ஆபரணங்கள் வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள். வாகனப் பழுதால் செலவுகள் அதிகரிக்கும். பெண்வழி பிரச்சினைகளிலும், உடன்பிறப்புகளின், குணத்திலும் நல்ல மாற்றங்கள் ஏற்படும். இல்லத்திற்குரிய அத்தியாவசியப் பொருட்கள் மற்றும் ஆடம்பரப் பொருட்களை வாங்குவதில் கவனம் செலுத்துவீர்கள்.

வீடுகட்டிக் குடியேற வேண்டுமென்று நினைப்பவர்கள், சுய ஜாதகத்தில் செவ்வாய் பலம் பார்த்து முடிவெடுப்பது நல்லது. செவ்வாய் நீச்சமாகி இருப்பவர்கள் பெயரில் வீடு வாங்கினாலோ, கட்டினாலோ, அதில் தடைகளும், பிரச்சினைகளும் வந்து சேரும். தொழில் செய்பவர்கள் பங்குதாரர்களை புதிதாக சேர்த்துக் கொள்ள நினைப்பார்கள். இம்மாதம் மகா சிவராத்திரி வருவதால், அன்றைய தினம் விரதமிருந்து சிவதரிசனம் செய்வதன் மூலம் தடைகளும், தாமதங்களும் அகலும்.

வக்கிர புதன் சஞ்சாரம்

உங்கள் ராசிக்கு 4, 7இற்கு அதிபதியானவர் புதன். அவர் சுக ஸ்தானம் மற்றும் களத்திர ஸ்தான ஆதிக்கம் பெற்றவராக விளங்குகிறார். இம்மாதம் 21ஆம் திகதி உங்கள் இராசிக்கு 11ஆம் இடமான இலாப ஸ்தானத்திற்கு வக்கிர இயக்கத்தில் வருகிறார். இதன் விளைவாக தாய்வழி ஆதரவு கிடைக்கும். சொத்துக்கள் பதிவதில் இருந்த தடைகள் அகலும். பயணங்களால் பலன் கிடைக்கும். குடும்பத்தினர்களின் குறைகளைத் தீர்ப்பீர்கள். திருமணத் தடை அகலும். விட்டுப்போன வரன்கள் கூட வந்து திடீரென முடிவாகலாம். குடும்ப முன்னேற்றம் கருதி குலதெய்வ பிரார்த்தனைகளை நிறைவேற்றுவீர்கள். மங்கல ஓசை மனையில் கேட்க வழிபிறக்கும். தங்கு தடைகள் தானாக விலகும். வாழ்க்கைத் துணையின் வேலைக்காக ஏற்பாடு செய்தவர்களுக்கு, அது கை கூடி உதிரி வருமானங்களை உருவாக்கும்.

மேஷ சுக்கிரன் சஞ்சாரம்

உங்கள் இராசிக்கு 3, 8 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் சுக்கிரன். அவர் தன ஸ்தானத்தில் மார்ச் 2ஆம் திகதி சஞ்சரிக்கப் போகிறார். எனவே உடன்பிறப்புகள் உங்கள்




தொழிலுக்கு உறுதுணையாக இருப்பர். அவர்கள் வழியிலும் தொழிலை விரிவு செய்யும் முயற்சியில் தேவையான மூலதனம் கிடைக்கும். வாங்கிய இடத்தை விற்பதன் மூலமும், வீடு மாற்றம் மற்றும் வணிக வளாகங்கள் கட்டி வாடகைக்கு விடுவதன் மூலமும் நல்ல வருமானம் வரலாம். ஆடை, ஆபரணங்கள் வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள். பெண்களால் பெருமை சேரும் நேரம் இது.

கும்ப புதன் சஞ்சாரம் உங்கள் இராசிக்கு 4.7 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் புதன். அவர் மார்ச் 12ஆம் திகதி கும்பத்திற்கு செல்கிறார். கேந்திராதி பத்ய தோஷம் பெற்ற கிரகம் 12ஆம் இடத்திற்கு வருவது யோகம் தான். சுப விரயம் அதிகரிக்கும். துணிவும், தன்னம்பிக்கையும் கூடும். மாமன், மைத்துனர் வழியில் ஒத்துழைப்பு கிடைக்கும். கரைந்த சேமிப்புகளை ஈடுகட்டுவீர்கள். அரசியல் மற்றும் பொதுநலத்தில் இருப்பவர்களுக்கு பொறுப்புகள் திடீர் என மாற்றப்படலாம். உத்தியோகத்தில் மேலதி காரிகளின் ஆதரவோடு இலாகா மாற்றங்கள் ஏற்படும். கட்டிய வீட்டைப் பழுது பார்க்கும் முயற்சி கைகூடும். இம்மாதம் வியாழக்கிழமை தோறும் குருவை வழிபடுவதோடு, சிவராத்திரியன்று சிவனையும், அம்பிகையையும் வழிபட்டு வந்தால் சிறப்பான வாழ்க்கை அமையும்.

பெண்களுக்கான சிறப்புப் பலன்கள்

இம்மாதம் ஆரோக்கியம் சீராகி ஆனந்தப் படுத்தும். உற்சாகத்தோடு செயல்படுவீர்கள். பணப்புழக்கம் அதிகரிக்கும். பயன் கருதாமல் என்றைக்கோ நீங்கள் செய்த உதவிக்கு, நன்றி காட்டும் வகையில் உதவிபெற்றவர்கள் ஒரு நல்ல தகவலைத் தரப்போகிறார்கள். மனக்குழப்பம் அகலும். கணவன்- மனைவிக்குள் அன்னியோன்னியம் அதிகரிக்கும். கடன் சுமை குறைய, பிள்ளை களாலும், குடும்ப உறுப்பினர்களாலும் வழிபிறக்கும். தாய்வழி ஆதரவு உண்டு. சகோதர வழியிலும் நன்மைகள் கிடைக்கும். வெளிநாட்டில் இருந்து வரும் அழைப்புகளை ஏற்றுக் கொள்ள முடியாமல் போகலாம். பணிபுரியும் பெண்களுக்கு இடமாற்றம், எதிர்பார்த்தபடி உத்தியோக உயர்வு உண்டு. மேலதிகாரிகள் உங்களுக்கு வழங்க வேண்டிய சலுகைகளைத் திருப்தியாக வழங்குவர். குலதெய்வ வழிபாடும், சிவராத்திரி அன்று சிவாலய வழிபாடும் முறையாகச் செய்தால் முன்னேற்றத்தின் முதல்படிக்குச் செல்ல இயலும்.

(முற்றும்)

# சவேந்திரவுக்கு எதிரான தடை ஆத்திரமூட்டும் செயல்

## நாடாளுமன்ற உறுப்பினர் நாமல்

**(கொழும்பு) இராணுவத் தளபதி சவேந்திர சில்வாவின் மீது பயணத்தடை விதித்ததன் மூலம் அமெரிக்கா ஆத்திரம் மூட்டியுள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ குற்றம்சாட்டினார்.**

அமெரிக்காவின் இந்தச் செயல் இருதரப்பு உறவைப் பாதிக்கும் என்றும் நாமல் தெரிவித்தார்.

சவேந்திர சில்வா மீது அமெரிக்கா சுமத்தியுள்ள குற்றச்சாட்டு மோசமான மற்றும் அடிப்படையற்றது என்றும் நாமல் ராஜபக்ஷ தனது டுவிட்டர் பக்கத்தில் தெரிவித்தார்.

இந்த விடயத்தில் இலங்கையின் நட்பு நாடுகள் இலங்கைக்கு ஒத்துழைப்பு வழங்கும் என்று நாமல் ராஜபக்ஷ நம்பிக்கை வெளியிட்டார்.

இதேவேளை சவேந்திர சில்வாவுக்கு எதிராக அமெரிக்கா பயணத்தடை விதித்தமையை அடுத்து ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவையின் இணை அனுசரணையில் இருந்து விலகிக்கொள்ளப் போவதாக அரசாங்கம் முடிவெடுத்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)









யா/வெற்றிலைக்கேணி பரமேஸ்வரா வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி நேற்று முன்தினம் பாடசாலையின் மைதானத்தில் பாடசாலை அதிபர் த.செல்லகுமார் தலைமையில் இடம்பெற்றது. இதில் பிரதம விருந்தினராக வடமராட்சி வலய (கல்வி நிர்வாக) பிரதிக்கல்விப் பணிப்பாளர் சு.நந்தகுமார், சிறப்பு விருந்தினர்களாக பருத்தித்துறை பிரதேசசபை தவிசாளர் அ.சி.அரியகுமார் மற்றும் மருதங்கேணி கோட்டக்கல்விப் பணிப்பாளர் செ.ஸ்ரீஇராமச்சந்திரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

(படங்கள்-பொற்பதி செய்தியாளர்)

## அரசியல் பழிவாங்கல் வேண்டாம்

# தமிழ்ப் பாடசாலைகளின் அபிவிருத்திகள் உரிய வகையில் முன்னெடுக்கப்பட வேண்டும்

## வேலுகுமார் வலியுறுத்து

(கண்டி)

பெருந்தோட்டப் பகுதிகளிலுள்ள பாடசாலைகளை அபிவிருத்தி செய்வதற்கான இந்தியாவின் உதவித் திட்டத்தின்கீழ் கண்டி மாவட்டத்திலுள்ள மூன்று தமிழ்ப் பாடசாலைகளுக்கும் நிதி ஒதுக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

எனவே, அத்திட்டம் எவ்வித தங்குதடையுமின்றி உரிய வகையில் முன்னெடுக்கப்பட வேண்டும் என தமிழ் முற்போக்குக் கூட்டணியின் கண்டி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வேலுகுமார் வலியுறுத்தினார்.

இது தொடர்பாக அவர் நேற்றுப் புதன்கிழமை வெளியிட்ட அறிக்கையில், "மத்திய, ஊவா, சப்ரகமுவ மாகாணங்கள் உட்பட பெருந்தோட்டப் பகுதிகளிலுள்ள குறைந்த வசதிகளைக் கொண்ட பாடசாலைகளை அபிவிருத்தி செய்வதற்காக ஆயிரம் மில்லியன் ரூபாவை முதலீடு செய்வதற்கு இந்திய அரசாங்கம் இணக்கம் வெளியிட்டிருந்தது. மூன்று கட்டங்களாக இந்நிதியைப் பகிர்ந்தளிப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இதன் முதற்கட்டமாக 300 மில்லியன் ரூபாவை வழங்குவதற்கு இணக்கப்பாடு எட்டப்பட்டிருந்தது. இதற்கான புரிந்துணர்வு உடன்படிக்கையில் கைச்சாத்திடுவதற்கும் ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சியின்போது அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியிருந்தது.

இந்நிலையில் மேற்படி ஒப்பந்தம் கைச்சாத்திடப்படுவதை துரிதப்படுத்துவதற்கு கல்வி இராஜாங்க அமைச்சராக இருந்த வே.இராதாகிருஷ்ணன் தீவிர முயற்சிகளை முன்னெடுத்திருந்தார். அவர் தலைமையில் அபிவிருத்திக்கான உத்தேசப் பட்டியலும் தயாரிக்கப்பட்டது.



குறிப்பாக எனது வேண்டுகோளின் பிரகாரம் இராதாகிருஷ்ணனின் பரிந்துரைக்கமைய கண்டி மாவட்டத்தில் மூன்று தமிழ்ப் பாடசாலைகளின் அபிவிருத்திக்கு நிதி ஒதுக்குவதற்கு ஏற்பாடாகியிருந்தது.

இதன்படி கண்டி விவேகானந்த தமிழ் வித்தியாலயம், குண்டசாலை விவேகானந்தா தமிழ் வித்தியாலயம், நாவலப்பிட்டிய டெம்பெஸ்டோர் தமிழ் வித்தியாலயம் ஆகியவற்றில் சுமார் 100 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் அபிவிருத்திகள் முன்னெடுக்கப்படவிருந்தன.

இதற்கிடையிலேயே, ஜனாதிபதித் தேர்தலின் பின்னர் ஆட்சி மாற்றமும் ஏற்பட்டுவிட்டது.

ஆட்சி மாற்றம் ஏற்படுவது ஜனநாயகப் பண்பு. ஆனால், முன்னெடுக்கப்பட்ட மக்கள் நலத் திட்டங்கள் ஒருபோதும் கைவிடப்படக்கூடாது. எனினும், அரசியல் பழிவாங்கலுக்காக புதிய அரசாங்கம் பல திட்டங்களைக் கைவிட்டுள்ளது. ஏற்கனவே நிதி ஒதுக்கீடு செய்யப்பட்ட திட்டங்களைக்கூட மீள்பரிசீலனை செய்கின்றது.

சிலவேளை பாடசாலை அபிவிருத்தி விடயத்திலும் இந்த அரசாங்கம் அரசியலை திணிக்கக்கூடும். பெருந்தோட்டப் பகுதிகளில் முன்னெடுக்கப்பட்ட வீட்டுத் திட்டங்கள் நிறுத்தப்பட்டதுபோல் பாடசாலைகளுக்கான ஒதுக்கீடுகளிலும் கைவைக்கக் கூடும்.

எனவே, இந்தியாவின் நிதியுதவியின்கீழ் கண்டி மாவட்டத்திலுள்ள பாடசாலைகளை அபிவிருத்தி செய்வதற்காக ஒதுக்கப்பட்ட நிதி அவ்வாறே கிடைக்கப்பெற்று.

அபிவிருத்திகளும் உரிய வகையில் இடம்பெற வேண்டும்.

இது விடயத்தில் எவரும் அரசியலைத் திணிக்க முற்படக் கூடாது" என்று அவர் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

# மனவளக் கலையின் மருத்துவ விளக்கம்

(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் 22 ஆம் திகதி சனிக்கிழமை மாலை 4.30 மணியளவில் யாழ்ப்பாணம் மனவளக் கலை மன்ற அறக்கட்டளை யாழ்ப்பாணம் அறிவுத் திருக்கோவிலில் மனவளக் கலையின் மருத்துவ விளக்கம் எனும் தலைப்பில் வேதாத்திரியத்தின் சூட்சுமத்தை விளக்க தமிழக பேராசிரியர் இதய நல மருத்துவர் வி.சொக்கலிங்கம் வருகை தரவுள்ளார். புதிரான நோய்களுக்கு புதிதான விளக்கங்களுக்கும் மனவளக்கலை உடற் பயிற்சியால் உடலுக்குள்ளே நடைபெறும் மாற்றங்களுக்கும் தியானத்தில் மேன்மை பெற்றிடவும் அனைத்து ஐயப்பாடுகளும் நீங்கவும் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. (இ-7)

# ஜப்பான்-இலங்கை நட்புறவைப் பலப்படுத்த ஒஹ்டானி தேரரின் பங்களிப்பு மகத்தானது-மகிந்த



(கொழும்பு)

பல தசாப்தங்கள் பழைமையான ஜப்பான் - இலங்கை நட்புறவை பலப்படுத்த ஒஹ்டானி சோசன் தேரர் உள்ளிட்ட ஹோங்கான்சி மன்றத்தால் வழங்கப்பட்ட பங்களிப்பு மகத்தானது என பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

பாராளுமன்ற வளாகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஜப்பான் ஹோங்கான்சி மன்றம் மற்றும் கியோட்டோவிலுள்ள ஹோங்கான்சி விகாரையின் வணக்கத்துக்குரிய ஒஹ்டானி சோசன் தேரருக்கு 'சாசன ரத்ன' கௌரவ பட்டம் மற்றும் 'சன்னஸ்' சான்றிதழ் வழங்கும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே மகிந்த மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நீண்டகால வரலாறு கொண்ட ஜப்பான் ஹோங்கான்சி கலாசார மேம்பாடு மன்றம் உலகளாவிய பௌத்த சமூகத்தினரின் சமூக, பொருளாதார மற்றும் கலாசார தொடர்புகளை மேம்படுத்த அதிக பங்களிப்புகளை மேற்கொண்டுள்ளது.

ஜப்பானும் இலங்கையும் பழங்காலத்திலிருந்தே கடினமான சந்தர்ப்பங்களில் ஒருவருக்கொருவர் முன்னின்றுள்ளது. ஹோங்கான்சி மன்றத்தால் இலங்கையில் சர்வதேச பௌத்த நூதனசாலைக்கு ஜப்பானியஅறையொன்றை வழங்கியமைக்கு நன்றி தெரிவிக்கின்றேன்.

ஜப்பான் முன்னாள் பேரரசரின் சகோதரர் ஒஹ்டானி சோசன் தேரர் டோக்கியோ பல்கலைக்கழகத்தில் மற்றும் பிரான்ஸ் சோபோன் பல்கலைக்கழகத்தில் கல்வி கற்று நகோயா பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளராக செயற்படுவதோடு விசேடமாக 'மஹாயான தர்ம' மற்றும் 'தேரவாத' பௌத்தத்துக்கு இடையில் பரஸ்பர தொடர்புகளை விருத்தி செய்ய பாடுபட்டுள்ளார் என மகிந்த மேலும் தெரிவித்தார். (இ-7)

# இலங்கை அகதிகளுக்கு இரட்டைக் குடியுரிமை

## சட்டசபையில் கருத்து முரண்பாடு-தி.மு.க. வெளிநடப்பு

(சென்னை)

**இலங்கை அகதிகளுக்கு இரட்டைக் குடியுரிமை வழ ங்குவது தொடர்பாக தமிழக சட்டசபையில் ஏற்பட்ட கருத்து முரண்பாடுகளையடுத்து தி.மு.க. மற்றும் காங்கிரஸ் உறுப்பினர்கள் அவை நடவடிக்கையைப் புறக்கணித்து வெளிநடப்பு செய்தனர்.**



தமிழக சட்டசபையில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை அமைச்சர் மாபா பாண்டியராஜன் மீது தி.மு.கவைச் சேர்ந்த முன்னாள் அமைச்சர் தங்கம் தென்னரசு உரிமை மீறல் பிரச்சினையைக் கொண்டு வந்தார்.

'தமிழகத்தில் உள்ள இலங்கைத் தமிழர்களுக்கு இரட்டைக் குடியுரிமை வழங்க முடியும். அது சாத்தியம் என அமைச்சர் பாண்டியராஜன் கூறினார். இதன்மூலம் பேரவையில் தவறான தகவலை அவர் தெரிவித்துள்ளார். அவர் மீது உரிமை மீறல் நடவடிக்கை எடுக்க வேண்டும்' என தங்கம் தென்னரசு வலியுறுத்தினார்.

இதனையடுத்து விளக்கமளித்த அமைச்சர் பாண்டியராஜன், இந்தியாவில் உள்ள இலங்கை அகதிகளுக்கு இரட்டைக் குடியுரிமை வழங்க வேண்டும் என்பது அ.தி.மு.கவின் நிலைப்பாடு என்றும் முன்னாள் முதல்வர் ஜெயலலிதா பல ஆண்டுகளாக இரட்டை குடியுரிமை பற்றி வலியுறுத்தியதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

இலங்கை அகதிகளுக்கு இதற்கு முன்பு இந்தியக் குடியுரிமையே வழங்கப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

அதன் பின்னர் விளக்கமளித்த சபாநாயகர் தனபால், இலங்கை அகதிகளுக்கு இரட்டைக் குடியுரிமை வழங்குவது சாத்தியம் என அமைச்சர் பாண்டியராஜன் பேசியதில் அவை உரிமை மீறல் இல்லை எனத் தெரிவித்தார்.

இந்நிலையில், அமைச்சரின் பதில் மற்றும் சபாநாயகரின் முடிவு திருப்தியில்லை எனக் கூறி தி.மு.க. மற்றும் காங்கிரஸ் உறுப்பினர்கள் அவை நடவடிக்கையைப் புறக்கணித்து வெளிநடப்புச் செய்தனர். (இ-7)

# மட்டக்களப்பு பல்கலைக்கழகத்திற்காக சட்டவிரோதமாக அரச காணி அபகரிப்பு

(கொழும்பு)

முன்னாள் கிழக்கு மாகாண ஆளுநர் எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லாவிற்கு சொந்தமான மட்டக்களப்பு பல்கலைக்கழகத்திற்காக அரச காணி சட்டவிரோதமாக கையகப்படுத்தப்பட்டது குற்றவியல் விசாரணைப் பிரிவின் (சிஐடி) விசாரணையில் அம்பலமானது.

பல்கலைக்கழகத்தை நிர்மாணிப்பதற்காக அரசாங்கம் வழங்கிய காணியை விட, ஹிஸ்புல்லா 15 ஏக்கர் காணியை சட்டவிரோதமாக கையகப்படுத்தினார் என சிஐடி வட்டாரங்கள் தெரிவித்தன.

பல்கலை.வளாகத்தை கட்டுவதற்காக 2013 ஆம் ஆண்டில் மகாவலி அதிகார சபைக்குச் சொந்தமான காணி, ஹிரா அறக்கட்டளை என்ற அமைப்புக்கு விடுவிக்கப்பட்டதாக சிஐடி வட்டாரங்கள் தெரிவித்தன.

கிழக்கு மாகாணத்தில் இளைஞர்களுக்கு இலவச தொழிற்கல்வியை வழங்குவதற்காக ஒரு கல்வி நிறுவனத்தை உருவாக்க நிலம் கோரப்பட்டதையடுத்து இந்த நிலம் விடுவிக்கப்பட்டது.

இதனையடுத்து ஒரு ஏக்கருக்கு 14 ஆயிரத்து 340 ரூபாய் குத்தகை வீதம் 35 ஏக்கர் காணி குறித்த அறக்கட்டளைக்கு விடுவிக்கப்பட்டது.

ஹீரா அறக்கட்டளைக்கு வழங்கப்பட்ட காணியில் 2018 ஆம் ஆண்டில் அரபு பல்கலைக்கழகம் கட்டியெழுப்பப்பட்டதாக சிஐடி வட்டாரங்கள் தெரிவித்தன. இந்தச் செயற்பாட்டின் போது கூடுதலாக 15 ஏக்கர் அரச காணி கையகப்படுத்தப்பட்டதாக மேலும் தெரிய வருகிறது. (இ-7)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1982

### ரம்மியா

செய்த தவறுகளை ஒப்புக் கொள்வதற்கான மன தைரியமும் தவறுகளைத் திருத்திக் கொள்வதற்கான மனப்பக்குவமும் இருந்தால் வாழ்க்கையில் வெற்றிதான்!



### கார்த்திக்

வளைந்து நெளிந்து சென்றால்தான் செல்ல வேண்டிய இடத்திற்குச் செல்ல முடியும்... பாதையிலும் சரி, வாழ்க்கையிலும் சரி



### ராஜன்

அமைதியான மகிழ்ச்சியான வாழ்க்கைக்கு நடந்ததை மறந்துவிடு! நடப்பதை ஏற்றுக் கொள்! நடக்க இருப்பதில் நம்பிக்கை வை!



### வெங்கட்

முயல்பவனுக்குத் தட்டிக்கொடு!
இயலாத வனுக்கு விட்டுக்கொடு!
கேட்பவனுக்கு சொல்லிக்கொடு!
வாழ்வில் விழுந்தவனை தூக்கிவிடு



### கபிலன்

அத்தனையும் அழகாய் தெரிவதும் களையிழந்து தோன்றுவதும் நாம் பார்க்கும் பார்வையால்தான்... எண்ணங்களை அழகாக்குங்கள்... பார்வையும் அழகாகும்



### தனேஷ்


சின்னச் சின்ன விடயமாக இருந்தாலும் இறைவனை முழுமையாக நம்புங்கள்... ஏனென்றால் நமது பெரிய கஷ்டங்களை எல்லாம் நீக்குபவன் அவன் மட்டுமே!



நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.




# பூனைகளைச் சிறைப்படுத்திய எலிகள்



பூனைகள் இல்லா உலகில் யாருக்குக் கொண்டாட்டம்? சொல்லவும் வேண்டுமா? நிச்சயம் எலிகளுக்குத்தான். பூனைகள் இல்லாத ஊர் இந்த உலகில் இருக்குமா? இருக்கிறதே. நளினப்பட்டி என்ற ஊரில் பூனைகளே இல்லை.

இந்தத் தகவலைப் பல நாடுகளில் உள்ள எலிகளுக்கும் கடிதம் மூலம் தெரிவித்தன நளினப்பட்டியில் உள்ள தலைமை எலிகள். "அப்படியா?" என ஆச்சரியப்பட்டு அந்த ஊரைக் காண ஆபிரிக்காவில் இருந்து குலி, மாலி என்ற இரண்டு எலிகள் விமானம் மூலம் நளினப்பட்டிக்கு வந்தன. விருந்தாளி எலிகளுக்குத் தடபுடலாக வரவேற்பு அளிக்கப்பட்டது. அனைவருக்கும் சிறப்பு விருந்து பரிமாறப்பட்டது.

ஒரு பாழடைந்த கோட்டைதான் எலிகளின் கோட்டை. விருந்தாளி எலிகளும் அங்கு தங்க வைக்கப்பட்டன.

"இந்த ஊரில் பூனைகள் இல்லை என்பதை நாங்கள் எப்படி நம்புவது?" என குலி எலி கேட்டது.

"சந்தேகம் இருந்தால், நீங்கள் ஊரைச் சுற்றிப் பார்த்துத் தெரிந்து கொள்ளலாம்" என்று நளினப்பட்டி எலி தலைவர் பதில் கூறியது.

"அப்படியென்றால் இன்று இரவே நாங்கள் சோதனைக்குத் தயார்" என இரு எலிகளும் உற்சாகமாயின.

இரவில் இரு ஆபிரிக்க எலிகளும் சோதனைக்குப் புறப்பட்டன. தெருத் தெருவாகச் சுற்றின. சந்து பொந்துகளில் எல்லாம் எலிகள் ஏறி இறங்கிப் பார்த்தன. அட! எங்குமே பூனைகள் தென்படவில்லை. அவைகளுக்கு வெகு ஆச்சரியம்.

"இந்த ஊரில் பூனைகள் இல்லைத்தான்" என்று இரு எலிகளும் பேசிக் கொண்டன.

ஊர்க்கோடியில் ஒரு பாழடைந்த மலைக்கோயில் ஒன்று உள்ளது. அங்கு மட்டும் ஆபிரிக்க எலிகள் போவதற்கு, நளினப்பட்டி எலிகள் தடை விதித்திருந்தன. அப்போதுதான் குலி எலிக்கு ஞாபகம் வந்தது.

"அந்த மலைக்கோயிலுக்குச் செல்லக் கூடாது என ஏன் உள்ளூர் எலிகள் தடை விதித்தன?" எனக் குலி எலி, மாலி எலியைப் பார்த்துக் கேட்டது.

"ஆமாம், ஏன் அப்படிக் கூறின? நாம் அங்கு பரிசோதிக்காமல் ஒரு முடிவுக்கு வர முடியாதே?" என மாலி எலியும் கேள்வி எழுப்பியது.

அப்போதே இரு ஆபிரிக்க எலிகளும் மலைக் கோயிலுக்குச் செல்வது என முடிவு செய்தன. பொழுது விடிந்தது. நகர் வேட்டைக்குச் சென்றுவந்த எல்லா எலிகளும் பகலில் ஓய்வெடுக்கச் சென்றன. அனைத்து எலிகளும் நன்றாகக் குறட்டை விட்டுத் தூங்கிக்கொண்டிருந்தன.

"இதுதான் சரியான சமயம். நாம் மலைக்கோயிலுக்குச் சென்று வந்துவிடலாம்" எனக் கூறியபடி ஆபிரிக்க எலிகள் கிளம்பின. மலைக்கோயிலுக்குள் நுழைந்ததும் கோயிலின் வாசலைத் தேடின எலிகள். கொஞ்சத் தூரத்தில் வாசல் தென்பட்டது. ஆனால், அது உள்ளே பூட்டப்பட்டிருந்தது. வெளியே கதவைத் திறக்க முடியாதபடி கற்கள் கொட்டப்பட்டிருந்தன.

உள்ளே இருந்து 'மியாவ்... மியாவ்....' எனச் சத்தம் கேட்டது. ஆபிரிக்க எலிகளுக்குத் திடுக் என்றது. கற்குவியலின் மீது ஏறிச் சிறிய ஓட்டைக்குள் இருந்து இரு எலிகளும் எட்டிப் பார்த்தன. அங்கே ஒரே பூனைக் கூட்டம்.

அங்கு பூனைகளின் தலைவர், எலிகளை எப்படிப் பிடிப்பது எனக் குட்டிப் பூனைகளுக்குச் சொல்லிக் கொடுத்துக் கொண்டிருந்தது. ஆபிரிக்க எலிகளுக்கு ஒன்றுமே புரியவில்லை. அவை சத்தம் போடாமல் வந்து மற்ற எலிகளுடன் படுத்துக் கொண்டன.

"இதை யாரிடம் கேட்பது?" என இரு எலிகளும் யோசித்தன. அருகில் தூங்காமல் விளையாடிக் கொண்டிருந்த குட்டி எலியிடம் விசாரணையைத் தொடங்கின.

"தனக்கு எதுவுமே தெரியாது" எனக் குட்டி எலி சத்தியம் செய்தது. மீண்டும் மீண்டும் கேட்கவே, உண்மையைக் கூறியது குட்டி எலி.

"நாங்கள் அனைவரும் ஒரு நாள் விளையாடிக்கொண்டிருந்தோம். அப்போது பூனைகள் குறுக்கும் நெடுக்குமாக ஓடி வந்து எங்களைப் பயமுறுத்தின. அவைகளைத் திசை திருப்புவதற்காகப் பூனைகளுடன் நண்பராகப் பழகி, நாடகம் ஒன்றை நடத்தினோம் அதனை உண்மை என்று பூனைகள் நம்பிவிட்டன" என்றது.


"நாடகமா? அது என்ன?" என்று கேட்டன ஆபிரிக்க எலிகள்.

"பூனைகள் எலிகளைப் பிடிப்பதற்குத் துரத்த வேண்டி இருக்கிறது. அதோ தெரிகிற அந்த மலைக்கோயிலில் ஒரு மாத காலம் ஒரே இடத்தில் அமர்ந்து சாப்பிடாமல் விரதம் இருக்க வேண்டும். அப்படிச் செய்தால் அவைகளால் பறவைகளைப் போலப் பறக்க முடியும். வானில் பறக்கும் பறவைகளைக் கூட எளிதாகப் பிடித்து உண்ணலாம் என்றோம். அதை உண்மை என்று பூனைகள் நம்பிவிட்டன. அதனால் ஊரில் உள்ள எல்லாப் பூனைகளும் இப்போது விரதத்தில் இருக்கின்றன. யாருடைய தொல்லையும் இருக்கக் கூடாது என்பதற்காகப் பூனைகள் கதவை உள் பக்கம் பூட்டிக் கொண்டன. இதுதான் சமயம் என நாங்கள் பூனைகள் வெளியே வராதபடி கற்களை அடுக்கிவிட்டோம்" என்றது குட்டி எலி.

"இது தப்பு இல்லையா? பூனைகளிடம் இருந்து தப்பிக்க நேர்மையான வழிய்ய நாம் பின்பற்ற வேண்டும். நம்மைப் போன்ற ஒரு ஜீவனை ஏமாற்றக் கூடாது. ஆகையால், நாங்கள் கதவைத் திறக்கப் போகிறோம்" எனக்கூறி மலைக்கோயிலை நோக்கி ஆபிரிக்க எலிகள் சென்றன. கற்களை அப்புறப்படுத்தின.

ஒரு மாத காலம் அமைதி காத்த பூனைகள், எலிகளின் வாசனை தெரிந்தவுடன் அவற்றின் மீது பாய்ந்தன. தப்பித்தோம் பிழைத்தோம் என ஆபிரிக்க எலிகள் ஓடி மறைந்தன. பூனைகள் ஊருக்குள் புகுந்து எலிகளைப் பிடித்துச் சாப்பிட்டுப் பசியைத் தீர்த்துக் கொண்டன.

## புதிரை கண்டுபிடியுங்கள்




## விடுகதைகளும் விடைகளும்

- ஆகாயத்திலிருக்கும் அற்புத மனிதன் ஆற்றிலும் விழுவான் குளத்திலும் விழுவான் ஆனாலும். நனையமாட்டான்.

  **சூரியன்**

- வெட்ட வெட்டத் தழைக்கும் பட்டணத்து வேம்பு - அது என்ன?

  **தலைமுடி**

- சூரியன் காணாத கங்கை சுண்ணம் தோற்கும் வெள்ளை மண்ணில் பண்ணாத பாண்டம்.

  **தேங்காய்**

- பறிக்கப் பறிக்க பெரிதாகும் அது என்ன?

  **குழி**

- வட்ட வட்டச் சிமிழில் இட்டதெல்லாம் குட்டிப் பாம்பு.

  **இடியாப்பம்**

- தேய்க்கத் தேய்க்க துரைக்கும் அடிக்க அடிக்க வெளுக்கும்.

  **சோப்பு**

- எட்டாத கொம்பில் மிட்டாய்ப் பொட்டலம்.

  **தேன் கூடு**

- மொட்டை மாடு உட்கார்ந்திருக்குது மூக்கணாங்கயிறு மேய்ந்து வருகுது.

  **பூசணிக்காயும் அதன் கொடியும்**


- வராதிருந்து வந்தேன் வந்துவிட்டுப் போனேன் போன பிறகு வந்தேன் இனிப் போனால் வரமாட்டேன். நான் யார்?

  **பல்**

- பிளந்த நாக்குடையவனாம் பாம்புமல்ல பேசாமல் பேசுபவன் ஞானியல்ல.

  **பேனா**

## வழிகாட்டுங்கள்



# உயிர்த்த ஞாயிறு தின தாக்குதல்களின் ஒரு வருட பூர்த்தி!

## கத்தோலிக்க தேவாலயங்களில் விசேட பிரார்த்தனைகள்

(கொழும்பு)

உயிர்த்த ஞாயிறுதின பயங்கரவாதத் தாக்குதல்கள் இடம்பெற்று ஒரு வருடம் பூர்த்தியாகவுள்ள நிலையில் இதனை நினைவுகூரும் வகையில் கத்தோலிக்க தேவாலயங்களில் விசேட பிரார்த்தனைகள் நடைபெறவுள்ளதாக கொழும்பு மறைமாவட்ட பேராயர் மல்கம் ரஞ்சித் தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களுக்கு நேற்று முன்தினம் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

பயங்கரவாத தாக்குதல்களால் பாதிக்கப்பட்டவர்களுக்காக விசேட பிரார்த்தனைகள் எதிர்வரும் ஏப்ரல் 16, 17 மற்றும் 18 ஆம் திகதிகளில் கொழும்பு மறைமாவட்டத்திலுள்ள அனைத்துக் கத்தோலிக்க தேவாலயங்களிலும் நடைபெறவுள்ளன.

இது தொடர்பிலான ஏனைய சிறப்பு நிகழ்ச்சிகளும் ஏப்ரல் 19 மற்றும் 20 ஆகிய திகதிகளில் முன்னெடுக்கப்படவுள்ளன.

ஏப்ரல் 21 ஆம் திகதி, நாடு முழுவதும் காலை 8.45 மணியளவில் பயங்கரவாத தாக்குதல்களில் உயிரிழந்தவர்களுக்காக இரண்டு நிமிட நேர மௌன அஞ்சலி செலுத்த நாட்டு மக்கள் அனைவருக்கும் அழைப்பு விடுக்கின்றேன்.

அதேசமயம் நாட்டிலுள்ள அனைத்து கத்தோலிக்க தேவாலயங்களிலும் காலை 8.47 மணிக்கு மணிகள் ஒலிக்கச் செய்யப்படும்.

தாக்குதலுக்கு இலக்காகிய கொச்சிக்கடை புனித அந்தோனியார் தேவாலயம் மற்றும் கட்டுவாப்பிட்டிய புனித செபஸ்ரியார் தேவாலயங்களில் அன்றைய தினம் காலை 9 மணிக்கு சிறப்பு திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (இ-7)

## வில்பத்து விவகாரம்; தீர்ப்பு வரும் போது உண்மை வெளிச்சத்துக்கு வரும்

### றிசாத் நம்பிக்கை



**(கொழும்பு) [redacted]**

**வில்பத்து சரணாலய வழக்கின் தீர்ப்பு வெளிவரும்போது, அதன் உண்மை நிலை வெளிப்படும் என்றும் இதனுடன் தன்னைத் தொடர்புபடுத்தி கூறப்பட்டவை பொய்கள் என்பதும் வெளிச்சத்துக்கு வரும் என நாடாளுமன்ற உறுப்பினர் றிசாத் பதியுதீன் தெரிவித்தார்.**

'வில்பத்து' வனவள பிரதேசத்தில் ஆயிரக்கணக்கான ஏக்கர் காணி துப்புரவு செய்யப்பட்டு, மீள்குடியேற்றம் மற்றும் சட்ட விரோத நிர்மாணப்பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக குற்றம் சாட்டப்பட்டது.

இந்த விவகாரம் தொடர்பாக, முன்னாள் அமைச்சர் றிசாத் பதியுதீன் உட்பட இவற்றுடன் தொடர்புடையவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்குமாறு அதிகாரிகளுக்கு உத்தரவிடுமாறு கோரி, சூழல் நீதிக்கான மையம் தாக்கல் செய்த வழக்கின் மேலதிக விசாரணை நேற்றுக் காலை இடம்பெற்றது.

இந்த வழக்கின் பிரதிவாதிகளில் ஒருவரான முன்னாள் அமைச்சர் றிசாத் பதியுதீன், நீதிமன்ற வளாகத்தில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், "1990 ஆம் ஆண்டு முசலிப் பிரதேசத்திலிருந்து வெளியேற்றப்பட்ட மக்கள், யுத்த முடிவின் பின்னர் தாம் வாழ்ந்த பிரதேசங்களில் மீளக்குடியேற்றப்பட்ட போது இந்தக் குற்றச்சாட்டுக்கள் எழுந்தன.

குறிப்பாக, முசலிப் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பாலைக்குளி, மறிச்சுக்கட்டி, கரடிக்குளி ஆகிய கிராமங்களில் மீளக்குடியேறிய மக்கள் மீது இந்தக் குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்ட போது, வில்பத்துவை காடழித்துத்தான் வீடுகள் கட்டிக் கொடுத்ததாக, இனவாதிகள் என்மீது மிக மோசமான குற்றச்சாட்டுக்களைச் சுமத்தினர்.

இனவாத சூழலியலாளர்களும் இனவாத தேரர்களும் இந்த மக்கள் குடியேறிய பிரதேசங்களுக்கு வந்து, பிழையான தரவுகளையும் ஒளிப்படங்களையும் எடுத்து தென்னிலங்கையில் தீவிர பிரசாரத்தை மேற்கொண்டனர்.

அப்பட்டமான பொய்களை திரும்பத் திரும்ப ஊடகங்கள் வாயிலாகவும் தென்னிலங்கை அரசியல் மேடைகளிலும் கூறி, என்மீது வீண்பழி சுமத்தினர். அப்பாவித் தென்னிலங்கை மக்களை நம்பச்செய்து என்னை காடழிக்கும் ஒருவராகக் காட்டுவதற்கு பிரயத்தனங்களை மேற்கொண்டனர். இப்போதும் அதே பிரசாரத்தையே மேற்கொண்டு வருகின்றனர்" என றிசாத் மேலும் தெரிவித்தார். (இ-7)

## சட்டவிரோத 200 துப்பாக்கிகள் பொலிஸாரிடம் ஒப்படைப்பு

(கொழும்பு)

நாடளாவிய ரீதியில் உள்ள பொலிஸ் நிலையங்களில் சட்ட விரோத 200 துப்பாக்கிகள் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜாக்ஷவின் அறிவுறுத்தலுக்கு அமைய கடந்த 5 ஆம் திகதி முதல் 12 ஆம் திகதி வரையில் நாடளாவிய ரீதியில் உள்ள சட்ட விரோத துப்பாக்கிகளை ஒப்படைக்கும் வேலைத்திட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.


அதனடிப்படையில் போரா 12 துப்பாக்கிகள் 137, போரா 16 துப்பாக்கிகள் 15 மற்றும் வேறு வகையான துப்பாக்கிகள் அரசாங்கத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

அதிகளவான துப்பாக்கிகள் மேல் மாகாணத்தில் இருந்தே ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இந்தக் காலப்பகுதியில் சட்ட விரோத துப்பாக்கிகளை ஒப்படைக்காதவர்களை கைது செய்து சட்ட நடவடிக்கை எடுப்பதாக பொலிஸார் தெரிவித்தனர். (ஜ)

## முழுவதும் இளைஞர்களின் எலும்புகளால் கட்டப்பட்ட சுவர்





(புருஸ்ஸெல்ஸ்)

இளைஞர்களின் தொடை மற்றும் தாடை எலும்புகளால் கட்டமைக்கப்பட்ட சுவர் ஒன்று பெல்ஜியத்தில் உள்ள பேராலயத்தில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

பெல்ஜியத்தின் கெண்ட் நகரில் அமைந்துள்ள 500 ஆண்டுகளுக்கு முந்தைய புனித பாவோ பேராலயத்திலேயே இந்த சுவர் அமைந்துள்ளதாக ஆராய்ச்சியாளர்கள் தகவல் வெளியிட்டனர்.

இச்சுவரானது இளைஞர்களின் தொடை மற்றும் தாடை எலும்புகளால் கட்டப்பட்டுள்ளதுடன், கட்டமைப்பின் இடைவெளிகளில் மண்டை ஓடுகள் பதிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் கருத்து வெளியிட்டுள்ள நிபுணர்கள், புதிய கல்லறைகளுக்கு இடமளிப்பதற்காக பேராலயத்திற்கு வெளியே உள்ள கல்லறையிலிருந்து எலும்புகள் சேகரிக்கப்பட்டதாகவும் எலும்புக்கூடுகளை எறிய முடியாது என்பதால் அதனால் சுவர் போன்று எழுப்பியிருக்கலாம் என்று தெரிவித்தார்.

இப் பேராலயமானது 17 ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்டது. ஆனால் எலும்புகள் கட்டுமானப் பொருட்களாகப் பயன்படுத்தப்படும்போது ஏற்கனவே 200 ஆண்டுகள் பழமையானவை என்று தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் சுட்டிக்காட்டினர். (ஜ)

## நீதிமன்றத்தை அவமதித்த அஜித் பிரசன்னவுக்குப் பிணை

(கொழும்பு)

ஊடகவியலாளர் சந்திப்பில் நீதிமன்றத்தை அவமதித்த குற்றச்சாட்டில் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த நாட்டுக்கான படை வீரர்கள் அமைப்பின் ஏற்பாட்டாளரும் ஓய்வுபெற்ற மேஜரும் சட்டத்தரணியுமான அஜித் பிரசன்ன கடுமையான நிபந்தனைகளின் அடிப்படையில் பிணையில் விடுவிக்கப்பட்டார்.

கொழும்பு நீதிமன்றத்தால் அவர் நேற்றுப் பிணையில் விடுவிக்கப்பட்டார்.

இதற்கமைய ஒரு இலட்சம் ரூபா ரொக்கப் பிணை மற்றும் 5 இலட்சம் ரூபாய் பெறுமதியான இரண்டு சரீரப் பிணைகளில் விடுவிக்க மேல் நீதிமன்ற நீதிபதி தம்மிக கணேபொல உத்தரவிட்டார்.

மேலும் நீதிமன்றில் நிலுவையிலுள்ள வழக்குத் தொடர்பில் ஊடகவியலாளர் சந்திப்பை மேற்கொள்ள முற்றுமுழுதாகத் தடைவிதித்த நீதிபதி இது தொடர்பில் அனைத்து ஊடக பிரதானிகளுக்கும் அறிவிக்க நடவடிக்கை எடுக்குமாறு நீதிமன்றப் பதிவாளருக்கு உத்தரவிட்டார்.

கடந்த ஜனவரி 12 ஆம் திகதி ஊடகவியலாளர்கள் சந்திப்பொன்றில் கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி கிஹான் குலதுங்க முன்னிலையில் எடுத்துக் கொள்ளப்பட்டு வரும் வழக்குத் தொடர்பில் வெளியிட்ட கருத்துக்கள் மூலம் நீதிமன்றத்திற்கு அவமதிப்பு ஏற்பட்டுள்ளதாக தெரிவித்த அஜித் பிரசன்ன மீது குற்றம் சாட்டப்பட்டது.

நீதிமன்றில் ஆஜராகுமாறு விடுக்கப்பட்ட அழைப்பாணைக்கு அமைய, கடந்த ஜனவரி 24 ஆம் திகதி கொழும்பு மேல் நீதிமன்றத்தில் முன்னிலையான அவருக்கு விளக்கமறியல் விதிக்கப்பட்டதோடு, சிறைச்சாலை மூலம் அவரை, கொழும்பு நீதிமன்ற வைத்திய அதிகாரியிடம் முன்னிலைப்படுத்தி அவரது மனநலம் தொடர்பில் வைத்திய அறிக்கையை பெற நடவடிக்கை எடுக்குமாறும் நீதிபதி கணேபொல உத்தரவிட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

கண்கள் உறங்கலாம்
கனவுகள் உறங்கக் கூடாது
-அப்துல் கலாம்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk


## மன்னாரில் தமிழரிடையே ஏற்பட்ட பிரிவினைக்கு யார் காரணம்

இராமருக்கு முடி சூட்டுவதற்காக அயோத்தி மாநகர் விழாக்கோலம் பூண்டுள்ளது.

எங்கும் மகிழ்ச்சிப் பிரவாகம். இராமபிரானின் பட்டாபிஷேகத்தைக் காண மக்கள் ஆர்வமாக இருக்கின்றனர்.

எனினும் தசரதர் அரண்மனை மட்டும் துன்பத்தில் மூழ்கிக் கிடக்கிறது.

இராமரின் பட்டாபிஷேகத்துக்குத் தடை விதிக்கப்பட்டதால், மாமன்னர் தசரதர் துன்பத்தில் துடிக்கின்றார்.

மந்தரை சூழ்ச்சி செய்ய, அதனை கைகேயி நடைமுறைப்படுத்த, இராமபிரானின் பட்டாபிஷேகம் நின்று போகிறது.

இச்செய்தி கேட்ட இலக்குவன் இளைஞர்களுக்கே உரித்தான கோபாவேசத்துடன் எல்லா எதிர்ப்பையும் அழித்தேனும் என் அண்ணன் இராமனுக்கு முடி சூட்டுவேன் என்கிறான்.

இவ்விடத்தில் இராமர் மிக நிதானத்துடன் இலக்குவனைப் பார்த்து;

இலக்குவனா! நீ வெகுண்டெழ வேண்டாம். இது விதியின் பிழை. வேறு யாருடைய பிழையுமன்று எனக் கூறுகின்றார்.

இங்குதான் விதியின் வலிமை, இராமபிரானால் எடுத்துரைக்கப்படுகிறது.

இஃது இலக்குவனுக்கு மட்டும் கூறியதாக எவரும் நினைத்து விடாதீர்கள். மாறாக இந்த உலகில் பிறந்த அனைத்து மானிடர்களுக்கும் இது ஏற்புடையது.

ஆம், எம் தமிழினத்தை நினைக்கும்போதெல்லாம் "... விதியின் பிழை..." என்று இராமர் கூறியதே ஞாபகத்துக்கு வரும்.

எவ்வளவுதான் சந்தர்ப்பங்கள் கிடைத்தும் எங்கள் இனத்துக்கு விடிவு கிட்டவில்லை எனும்போது இது விதியின் பிழை என்று கூறுவதைவிட வேறு எதைத்தான் சொல்ல முடியும்.

இப்போதுகூட, மன்னார் மாவட்டத்தில் இந்துக் குருமார் பேரவை கூடி எதிர்வரும் பொதுத் தேர்தலில் தாம் சுயேட்சையாகப் போட்டியிடப் போவதாக அறிவித்துள்ளது.

இலங்கையின் வரலாற்றில் இந்துக் குருமார்கள் தேர்தலில் போட்டியிடுவது என அறிவித்திருப்பது இதுவே முதற்தடவையாகும்.

மன்னாரில் சைவ சமயத்துக்கு இழைக்கப்படும் அநீதிகளே இத்தகையதொரு முடிவுக்கு மன்னார் இந்துக் குருமார் பேரவை வரவேண்டியதாயிற்று.

தமிழினம் என்ற உணர்வோடு மதம் என்பதற்கு இம்மியும் இடம்கொடாமல், கத்தோலிக்க சமயம் சார்ந்தவர்களுக்கு சைவ மக்கள் வாக்களித்து அவர்களைப் பாராளுமன்றம் அனுப்பி வைக்க, அவர்களின் பலத்துடன் மன்னாரில் திருக்கேதீச்சர நுழைவாயில் வளைவு அடித்து வீழ்த்தப்பட்டது.

இத்தகைய நிலையில் மாற்றுவழியின்றி, மன்னார் இந்துக் குருமார் ஒன்றியம் சமயத்தின் பெயரால் தேர்தல் களம் புகுகிறது.

இவ்வாறான நிலைமைக்கு மன்னார் மாவட்டத்தைக் கொண்டு வந்த முழுப் பொறுப்பும் மன்னார் ஆயர் இல்லத்தையே சாரும்.

# 2020 ஆம் ஆண்டின் முதல் 15 நாட்களில் மட்டும் 238 துஷ்பிரயோக சம்பவங்கள் பதிவாகியுள்ளன

### பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவிப்பு

(கொழும்பு)

2020ஆம் ஆண்டின் முதல் 15 நாட்களில் மட்டும், 238 துஷ்பிரயோக சம்பவங்கள் பதிவாகியுள்ளதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

அத்தோடு, இதனைக் கட்டுப்படுத்த அரசாங்கம் உரிய நடவடிக்கையினை முன்னெடுக்க வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

பாராளுமன்றில் நேற்று (புதன்கிழமை) இடம்பெற்ற சபை ஒத்திவைப்பு வேளை விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில், "கடந்த 7 ஆம் திகதி அரசாங்கத்தால் பாராளுமன்றுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ள அறிக்கைக்கு இணங்க, 2020 ஆம் ஆண்டு ஆரம்பித்து முதல் 15 நாட்களில் மட்டும், 142 பெண் துஷ்பிரயோகங்கள், 42 பாலியல் குற்றச் சாட்டுக்கள், 54 சிறுவர் துஷ்பிரயோகங்கள் பதிவாகியுள்ளன.

இது தொடர்பாக இலங்கை பொலிஸாருக்கு முறைப்பாடுகளும் அளிக்கப்பட்டுள்ளன. இவற்றில், பெண்களை துஷ்பிரயோகம் செய்த 78 முறைப்பாடுகள், பாலியல் குற்றச் சாட்டுக்கள் மற்றும் சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பான 34 முறைப்பாடுகள் மட்டுமே இதுவரை விசாரணை செய்யப்பட்டுள்ளன.

2015 ஆம் ஆண்டைப் பார்க்கும்போது, 2019ஆம் ஆண்டில் துஷ்பிரயோக சம்பவங்கள் 10 வீதத்திற்கும் சிறுவர் துஷ்பிரயோகங்கள் 27.6 வீதத்திற்கும் வீழ்ச்சியடைந்துள்ள போதிலும், தற்போது 2020இல் விசாரணை நிறைவு செய்யப்பட்ட சம்பவங்களைப் பார்க்கும்போது அது அதிகரித்த நிலைமையே காணப்படுகிறது.

இது மிகவும் ஆபத்தான விடயமாகும். பாராளுமன்றுக்கு வழங்கப்பட்ட அறிக்கைக்கு இணங்கவே நான் இந்தத் தகவலை வெளிப்படுத்தியுள்ளேன்.

அத்தோடு, 2020-02.07ஆம் திகதியில் மட்டும் துஷ்பிரயோகங்கள் மற்றும் சிறுவர் துஸ்பிரயோக சம்பவங்கள் 6 பதிவாகியுள்ளன. ஊடகங்களும் இதனை வெளிப்படுத்தியுள்ளன.

கடந்த 24 மணி நேரத்தில் மட்டும், இவ்வாறான சம்பவங்கள் 7 பதிவாகியுள்ளன. இந்த நிலைமையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர வேண்டியது அரசாங்கத்தின் பிரதான பொறுப்பாகும் என நாம் இவ்வேளையில் வலியுறுத்த விரும்புகிறோம்.

இவ்வாறான சம்பவங்கள் தொடர்ந்து கொண்டிருந்தால், பொலிஸ் உள்ளிட்ட பாதுகாப்புத் தரப்பினர் மீதான மக்களின் நம்பிக்கையும் முற்றாக இல்லாது போய்விடும் என்பதையும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

தேசிய வேலைத்திட்டமொன்றின் ஊடாக, இவ்வாறான சம்பவங்களைக் கட்டுப்படுத்த வேண்டும். இந்த சம்பவங்கள் தற்போது அதிகரித்துக்கொண்டு வருவது அரசாங்கத்தின் இயலாமையின் வெளிப்பாடாகவே நாம் காண்கிறோம்.

ஏன், இவ்வாறான சம்பவங்கள் இடம் பெறுகின்றன- இதனை கட்டுப்படுத்த எவ்வாறான செய்ற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும் என்பதை அரசாங்கம் பாராளுமன்றுக்கு தெரியப்படுத்த வேண்டும்" என அவர் மேலும் தெரிவித்தார். (ம-3)

## தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் புதிய வெளிநோயாளர் பிரிவு திறந்து வைப்பு

தியாகி அறக்கொடை நிறுவுநரும், சமூக சேவகருமான வி. தியாகேந்திரனின் 90 இலட்சம் ரூபாய் நிதிப்பங்களிப்பில் "வி. தியாகேந்திரன் கிளினிக் சென்ரர்" எனும் பெயரில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட வெளிநோயாளர் பிரிவு தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் நேற்றுப் புதன்கிழமை பிற்பகல் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலை வைத்திய அத்தியட்சகர் ஆர்.டி .ஜி. விமலசேன தலைமையில் நடைபெற்ற குறித்த நிகழ்வில் தியாகி அறக்கொடை நிறுவுநர் வி. தியாகேந்திரன் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு குறித்த வெளிநோயாளர் பிரிவை உத்தியோகபூர்வமாகத் திறந்து வைத்தார்.

இதன்போது தியாகி அறக்கொடை நிறுவுனர் வி.தியாகேந்திரன் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலைச் சமூகம் சார்பாக பாராட்டிக் கௌரவிக்கப்பட்டார். புதிதாக நிர்மாணிக்கப்பட்ட வெளி நோயாளர் பிரிவுக்கான திறப்பினை தியாகி அறக்கொடை நிறுவுனர் வி.தியாகேந்திரன் வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியகலாநிதி ஆர்.கேதீஸ்வரன் மற்றும் யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ஏ.தேவநேசன் ஊடாகத் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் ஆர்.டி.ஜி. விமல சேனவிடம் உத்தியோகபூர்வமாக கையளித்தார். (ம-18)

### போக்குவரத்துச் சபையின் வடமாகாண பிரதம பிராந்தியமுகாமையாளர் நேற்று பதவியேற்பு

(யாழ்ப்பாணம்)

இலங்கை போக்குவரத்துச் சபையின் வடமாகாண பிரதம பிராந்திய முகாமையாளராக எஸ். அமீன் நேற்று தனது கடமைகளை உத்தியோக பூர்வமாக பொறுப்பேற்றுக் கொண்டார்

இலங்கை போக்குவரத்துச் சபையின் கோண்டாவிலில் உள்ள தலைமை காரியாலயத்தில் இவர் தனது கடமைகளை பொறுப்பேற்றுக் கொண்டார்.

(ம-10)

## மாகாணசபை மற்றும் உள்ளூராட்சி மன்றங்கள் மேலதிக அறவீடு மற்றும் அதிகரித்த வரியை நிறுத்துக

### ஜனாதிபதி கோட்டா பணிப்பு

(கொழும்பு)

மேலதிக அறவீடுகள் மற்றும் தற்போதைய வரி விகிதங்களை அதிகரிப்பதனை நிறுத்துமாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி மன்றங்களுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

அனைத்து உள்ளூராட்சி மன்ற வரி விகிதங்கள் மற்றும் கட்டண பொறிமுறைகளை ஆராய்ந்து நேற்றிலிருந்து 30 நாட்களுக்குள் அவற்றை இலகுபடுத்துமாறு ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார்.

ஜனாதிபதியின் பணிப்புரையை ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி பி.பீ.ஜயசுந்தர அனைத்து ஆளுநர்களுக்கும் பிரதான செயலாளர்களுக்கும் அறிவித்துள்ளார்.

நாட்டின் அனைத்து வரி மற்றும் வரி அல்லாத கட்டண முறைகளை இலகுபடுத்துவதற்கு அரசாங்கம் முயற்சிக்கின்றது. மக்கள் வாழ்க்கையை இலகுபடுத்தல், கொடுக்கல், வாங்கல் செலவீனத்தை குறைத்தல், ஊழல், மோசடிகளை தடுத்தல் மற்றும் சிறிய நிறுவனங்கள் முதல் பாரியளவிலான தொழில் முயற்சிகள் வரை வர்த்தக நடவடிக்கைகளுக்கு பொருத்தமான சூழலை உருவாக்குதல் உள்ளிட்ட இலக்குகளை அடைந்துகொள்வது இதன்மூலம் எதிர்பார்க்கப்படுகின்றது.

அரசாங்கத்தின் அனைத்து அபிவிருத்தி செயற்பாடுகள் மற்றும் அதற்கு அடிப்படையான வழிமுறைகளை கட்டுப்படுத்தும், மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி மன்றங்களின் பல்வேறு வரிகள் மற்றும் கட்டண அறவீடுகள் விரிவுபடுத்தப்படுகின்றமை அவதானிக்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதியின் செயலாளர் அவ் அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி மன்றங்களினால் விதிக்கப்பட்டுள்ள வரிகள் மற்றும் கட்டண அறவீடுகளுக்கு மாற்றீடாக மக்கள் வாழ்க்கையை இலகுபடுத்தக்கூடிய எளிமையான, வெளிப்படையான மற்றும் கட்டுப்படியாகக் கூடிய கட்டண அறவீடுகளை அறிமுகப்படுத்துமாறு ஜனாதிபதியின் செயலாளர் ஆளுநர்களுக்கு அறிவித்துள்ளார்.

பன்முகப்படுத்தப்பட்ட நிர்வாக அலகுகளின் வருமான தேவைகளை அரசாங்கம் ஏற்றுக் கொள்வதோடு, நிதி பரவலாக்கம் மற்றும் வருமானங்களை பகிரும் முறைமை தேசிய கொள்கை கட்டமைப்புடன் ஒத்துப்போக வேண்டுமெனவும் கலாநிதி ஜயசுந்தர சுட்டிக்காட்டினார். (ம-3)

## வாழ்வைப் பொன்னாக்கும் வைர வரிகள்

ஆற்றலை வெளிப்படுத்தும் வாய்ப்பு இல்லாவிட்டால் அந்த ஆற்றல் மதிப்பற்றதாகிவிடும்.
-நெப்போலியன்

## வவுனியாவில் சைவ மாநாடு

(வவுனியா)

உலகின் பல பாகங்களில் இருந்து வருகை தந்த இந்து சமயத்தை சார்ந்தவர்கள் பங்கேற்கும் மாநாடு இன்றைய தினம் காலை 9.00 மணியளவில் வவுனியாவில் உள்ள தனியார் விருந்தினர் விடுதியில் இடம்பெறவுள்ளது

மன்னார், வவுனியா முல்லைத்தீவு ,கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களில் உள்ள இந்து சமய அமைப்புக்கள் இந்து சமயத்தை சார்ந்தவர்கள் குறித்த மாநாட்டில் இந்து சமயம் தொடர்பான தமது கருத்துக்களை முன்வைக்கலாம் என்று இலங்கை சிவசேனா அமைப்பின் தலைவர் மறவன்புலவு க.சச்சிதானந்தம் தெரிவித்துள்ளார். (ம-10)




வவுனியா விபுலானந்தா கல்லூரியின் கால்பந்தாட்ட வீரர்களுக்கான சீருடைகளை வெளிச்சம் அறக்கட்டளை மற்றும் பழைய மாணவ அபிவிருத்திக் குழுவினர் இணைந்து நேற்று முன்தினம் பாடசாலையில் வைத்து வழங்கினர். இதற்கான நிதியுதவியை 2006 ஆம் ஆண்டு உயர்தர வர்த்தகப்பிரிவு மாணவி ரெட்ணகலாவின் குடும்பத்தினர் அன்பளிப்புச் செய்திருந்தனர்.

# ஆசிய மல்யுத்த இறுதிப்போட்டிக்கு இந்திய வீரர் தெரிவு

ஆசிய மல்யுத்த போட்டியில் இந்திய வீரர் சுனில் குமார், கசகஸ்தான் வீரர் அஜாமத் குஸ்துபயேவை வீழ்த்தி இறுதிப்போட்டிக்கு முன்னேறினார்.

கடந்த ஆண்டு நடைபெற்ற ஆசிய மல்யுத்த சம்பியன்ஷிப் போட்டியில் வெள்ளிப்பதக்கம் வென்றிருந்த சுனில்குமார் தொடர்ச்சியாக 2 ஆவது முறையாக இறுதிப்போட்டிக்கு தகுதி பெற்றுள்ளார்.

ஆசிய மல்யுத்த போட்டியில் பங்கேற்றுள்ள ஜப்பான், தென் கொரியா மற்றும் சீனவைச் சேர்ந்த வீரர்கள் மற்றும் அதிகாரிகள் முகக்கவசம் அணிந்தபடி தங்கள் பந்தயங்களில் கலந்து கொண்டனர்.

கொரோனா வைரஸ் தாக்குதல் அச்சுறுத்தல் மற்றும் டில்லியில் நிலவும் காற்று மாசு ஆகியவற்றுக்கு பயந்து வீரர்கள் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக முகக்கவசம் அணிந்து போட்டியில் கலந்து கொண்டதாக தெரிவிக்கப்பட்டது. (ஜ-2)

# டுபாய் ஓபன் டென்னிஸ் சானியா ஜோடி வெற்றி



டுபாயில் நடந்து வரும் டென்னிஸ் போட்டியில் சானியா மிர்ஸா - கார்சியா ஜோடி ரஷ்யா ஜோடியை வீழ்த்தி காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளது.

டுபாய் சர்வதேச டென்னிஸ் போட்டி நடந்து வருகிறது. இதில் பெண்கள் இரட்டையர் பிரிவு ஆட்டம் நேற்று முன்தினம் நடைபெற்றது. இதில் இந்தியாவின் சானியா மிர்ஸா, பிரான்சின் கரோலின் கார்சியா ஜோடி, ரஷ்யா ஜோடியை சந்தித்தது. இந்தப் போட்டியில் 6-4, 6-4, 10-8 என்ற கணக்கில் சானியா ஜோடி வெற்றி பெற்றது. இந்த வெற்றியின் மூலம் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு சானியா ஜோடி முன்னேறியது. (ஜ-2)

# வீதி பாதுகாப்பு விழிப்புணர்வு கிரிக்கெட் தொடர் இலங்கை ஜாம்பவான்கள் அணி அறிவிப்பு




இந்தியாவில் நடைபெறவுள்ள வீதி பாதுகாப்பு விழிப்புணர்வு கிரிக்கெட் தொடரில் விளையாடும் இலங்கை ஜாம்பவான்கள் கிரிக்கெட் அணி விபரம் அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த கிரிக்கெட் தொடரில் இலங்கை, இந்தியா, மேற்கிந்திய தீவுகள், தென்னாபிரிக்கா மற்றும் அவுஸ்திரேலியா ஆகிய நாடுகளின் முன்னாள் வீரர்கள் அடங்கிய கிரிக்கெட் அணிகள் பங்கேற்கின்றன.

இந்த இருபது-20 கிரிக்கெட் தொடர் எதிர்வரும் மார்ச் மாதம் 7 ஆம் திகதி தொடக்கம் 22 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது. இலங்கை ஜாம்பவான்கள் அணியின் தலைவராக, இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் அதிரடி துடுப்பாட்ட வீரர் திலகரட்ன டில்ஷான் நியமிக்கப்பட்டுள்ளார்.

இதுதவிர முன்னாள் அதிசிறந்த வீரர்களான் சமிந்த வாஸ், முத்தையா முரளிதரன் மற்றும் ரொமேஷ் கலுவிதாரன ஆகிய வீரர்கள் உள்ளடங்குகின்றனர்.

இவர்களோடு, இலங்கை கிரிக்கெட் அணியில் இருந்து அண்மையில் ஓய்வுபெற்ற சச்சித்திர சேனநாயக்க, ரங்கன ஹேரத் மற்றும் சாமர கப்புகெதர ஆகியோரும் அணியில் இடம்பெற்றுள்ளனர்.

திலகரட்ன டில்ஷான் தலைமையிலான அணியில், சமிந்த வாஸ், முத்தையா முரளிதரன், மார்வன் அத்தபத்து, துலன்ஜன விஜேசிங்க, சாமர கப்புகெதர, பர்வீஸ் மஹ்ரூப், ரங்கன ஹேரத், ரொமேஷ் கலுவிதாரன, உபுல் சந்தன, சச்சித்திர சேனநாயக்க, மலிந்த வர்ணபுர, திலான் துஷார ஆகியோர் இடம்பெற்றுள்ளனர்.

இலங்கை ஜாம்பவான்கள் அணி தனது முதல் போட்டியில், மார்ச் 8 ஆம் திகதி அவுஸ்திரேலிய ஜாம்பவான்கள் அணியை எதிர்கொள்ளவுள்ளது. இப்போட்டி மும்பையில் நடைபெறவுள்ளது.

இத் தொடரின் முதல் போட்டியில் இந்திய ஜாம்பவான்கள் அணி, மார்ச் 7 ஆம் திகதி மேற்கிந்திய தீவுகள் ஜாம்பவான்கள் அணியை எதிர் கொள்ளவுள்ளது. (ஜ-2)

# பொதுக்கூட்டம்

யாழ். கிரிக்கெட் மத்தியஸ்தர்கள் சங்கத்தின் வருடாந்த பொதுக்கூட்டம் எதிர்வரும் 23 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் யா/கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயத்தில் நடைபெறும்.

சங்க உறுப்பினர்களுக்கிடையேயான சிநேகபூர்வ மென்பந்தாட்டப் போட்டியும் இடம்பெறும். (ஜ-2)

# விக்ரம்-ராஜன்-கங்கு வெற்றிக்கிண்ணம்

## ஓல்ட்கோல்ஸ் அணி அரை இறுதிக்குத் தெரிவு






விக்ரம்-ராஜன் கங்கு வெற்றிக்கிண்ணத் தொடருக்கான 6 ஆவது தகுதிகாண போட்டி கடந்த சனிக்கிழமை கொக்குவில் இந்துக் கல்லூரியில் காலை 8.30 மணியளவில் நடைபெற்றது. இதில் ஜொலிஸ்ரன் அணியை வீழ்த்தி 7 விக்கெட்டுக்களால் அரையிறுதிக்கு தகுதி பெற்றது ஓட்ஸ்கோல்ஸ் அணி. முதலில் துடுப்பெடுத்தாடிய ஜொலிஸ்ரார் அணி 30 ஓவர்களில் சகல இலக்குகளையும் இழந்து 280 ஓட்டங்களைப் பெற்றது. சந்தோஸ்-36, மணிவண்ணன்-39, வாமணன்-57, தனுஸ்ரன்-33, கிரிஷாந்-29, பிரசன்னா ஆட்டமிழக்காது-12, ஜனார்த்தனன்-13, கிரிசோபன்-15 ஓட்டங்களைப் பெற்றனர். 281 ஓட்டங்களை வெற்றி இலக்காக கொண்டு களமிறங்கிய ஓல்ட்கோல்ஸ் அணி 3 இலக்குகளை இழந்து 281 ஓட்டங்களைப் பெற்றது.

முதலாவது இலக்கு 38 ஓட்டங்களிலும் 2 ஆவது இலக்கு 57 ஓட்டங்களிலும் இழந்த நேரத்தில் மதுஸன், நிரோஸன் இணைந்து இணைப்பாட்டமாக 206 ஓட்டங்களை பகிர்ந்து மதுஸன்-136, நிரோஸன்-72 ஓட்டங்களைப் பெற்று புதியதோர் சாதனையை நிலை நாட்டியமை குறிப்பிடத்தக்கது.

திலீபன்-14, பிரியலக்ஸன் ஆட்டமிழக்காது-16 ஓட்டங்களைப் பெற்றனர். களத்தடுப்பில் ஜொலிஸ்ரார் அணி சார்பாக யுமேஸ்-02, வாமணன்-01 இலக்கினை கைப்பற்றினர். இப்போட்டியின் மூலம் யாழ்.சென்றல் விளையாட்டுக்கழகம் 11 ஆண்டாக நடத்தி வரும் யாழ். நகரில் சிறந்த கழக அணித் தெரிவு நிகழ்விற்கு (RATING)



ஓல்ட்கோல்ஸ் அணி 7.11 புள்ளிகளையும் ஜொலிஸ்ரார் அணி 3.10 புள்ளிகளையும் பெற்றுக் கொண்டனர். (ஜ-2)

# இல்ல மெய்வல்லுநர் போட்டி

கிளி/கரியாலை நாகபடுவான் அ.த.க.பாடசாலை வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று வியாழக்கிழமை பிற்பகல் 1.30 மணியளவில் பாடசாலை மைதானத்தில் பாடசாலை அதிபர் தலைமையில் இடம்பெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறைச் செயலாளர் ஐ.இளங்கோவன் கலந்து கொள்வார். (ஜ-2)

வலம்புரி SPORTS விளையாட்டுச் செய்திகள்

## மதிலுடன் மோதி...

பலனின்றி நேற்று முன்தினம் உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் அளவெட்டி மேற்கு பகுதியில் இடம்பெற்றுள்ளது.

இதில் அதே இடத்தைச் சேர்ந்த கந்தையா ஐயாத்துரை (வயது - 75) என்ற முதியவரே உயிரிழந்தவராவார்.

இது தொடர்பான மரண விசாரணையை யாழ்.போதனா வைத்தியசாலையின் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார். (ம)

## வவுனியாவில்...

பாக மேலும் தெரிய வருகையில்,

யாழில் இராணுவ முகாமில் பணியாற்றி வரும் 38 வயதுடையவரே நேற்று முன்தினம் அவரது சொந்த ஊரான அநுராதபுர மாவட்டத்திற்கு யாழிலிருந்து அநுராதபுரம் நோக்கி இ.போ.ச பேருந்தில் சென்றுள்ளார்.

இதன்போது கனகராயன்குளம் புதூரில் அமைக்கப்பட்டுள்ள இராணுவ சோதனை சாவடியில் வைத்து 500 மில்லிகிராம் நிறையுடைய கேரள கஞ்சாவை மறைத்து வைத்திருந்த குறித்த இராணுவ வீரரை கைது செய்துள்ளனர்.

மேலதிக விசாரணைகளின் பின்னர் வவுனியா மர்வட்ட நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தவுள்ளதாக கனகராயன்குளம் பொலிஸார் தெரிவித்தனர். (ம-3,299)

## 19ஆவது திருத்...

கருத்து தெரிவித்த அவர், மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகள் அனைத்தும் பலமான அரசாங்கத்தின் ஊடாக செயற்படுத்தப்படும் என உறுதியளித்தார்.

தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்றுவதற்கு பலமானதொரு அரசாங்கம் தேவை என்றும் குறிப்பாக, 19 ஆவது அரசியலமைப்பு திருத்தத்தினால் கடந்த 5 வருடங்களில் அரச இயந்திரத்தின் பலம் மற்றும் அதிகாரங்கள் என அனைத்தும் சீர்குலைக்கப்பட்டுள்ளது என்றும் அவர் குற்றம் சாட்டினார்.

எனவே 19ஆவது திருத்தத்தை மாற்றியமைத்து மீண்டும் பலமிக்கதொரு அரசாங்கம் மற்றும் நிறைவேற்றதிகார ஜனாதிபதி முறையின் மூலம் மக்களுக்கு சேவையாற்றக் கூடிய ஒரு அரசாங்கத்தை உருவாக்குவோம் என ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார்.

மேலும் தற்போது இந்தியா, சீனா மற்றும் ஆசிய நாடுகள் உள்ளிட்ட சர்வதேச நாடுகளுக்கு இலங்கை அரசாங்கம் மீதான நம்பிக்கை அதிகரித்துள்ளமையினால் வெளிநாட்டு முதலீடுகள் அதிகரித்துள்ளன என்றும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ கூறினார்.

இதேவேளை மீண்டும் தீவிரவாதத்தை அல்லது மத ரீதியான அடிப்படைவாதத்தை தலைதூக்க ஒரு போதும் விட மாட்டேன் என்றும் ஜனாதிபதி இதன்போது தெரிவித்துள்ளார்.

போதைப்பொருள் வியாபாரத்தில் ஈடுபடும் வலையமைப்பை இனங்கண்டுள்ளதாகவும் இளைஞர்களை பாதுகாப்பதற்கான நடவடிக்கை எடுப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (ம-3)

## பேருந்து மோதி...

நேற்றுக்காலை 9.30 மணிக்கு வங்கிக்கு சென்று விட்டு வர்த்தக நிலையத்திற்கு துவிச்சக்கரவண்டியில் திரும்பிக் கொண்டிருந்த வேளை, பரந்தனில் இருந்து முறிகண்டி நோக்கிப் பயணித்துக் கொண்டிருந்த பயணிகள் பேருந்து மோதியதில் படுகாயமடைந்த வர்த்தகர் சிகிச்சைக்காக கிளிநொச்சி பொது மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

விபத்து தொடர்பான விசாரணைகளை கிளிநொச்சிப் பொலிஸார் முன்னெடுத்து வருவதுடன் பேருந்தின் சாரதியினை கைது செய்துள்ளனர். (ம-315)

## ஐ.நா சபையின்...

எட்டியுள்ளதாக பிரதமர் மகிந்த ராஜபக்ஷ நேற்று புதன்கிழமை உத்தியோகபூர்வமாக அறிவித்தார்.

இலங்கை இராணுவ தளபதி லெப்டினன்ட் ஜெனரல் சவேந்திர சில்வா மற்றும் அவரது குடும்பத்தாருக்கு அமெரிக்கா செல்ல பயணத்தடை விதிக்கப்பட்ட சம்பவத்தை கருத்தில் கொண்டே அரசாங்கம் இந்த தீர்மானத்தை எட்டியுள்ளதாக பிரதமர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையில் இடம்பெற்ற இறுதிக் கட்ட யுத்தத்தின்போது சவேந்திர சில்வா மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டுள்ளமை தொடர்பில் உறுதியான தகவல்கள் கிடைத்துள்ளதாக தெரிவித்து அமெரிக்கா கடந்த சில தினங்களுக்கு முன்னர் இராணுவ தளபதி சவேந்திர சில்வா மற்றும் அவரது குடும்பத்தினருக்கு அமெரிக்காவிற்குள் பிரவேசிக்க பயணத்தடை விதித்திருந்தது.

இந்தநிலையிலேயே அரசாங்கம் நேற்று இந்த அறிவிப்பை விடுத்துள்ளது.

2015ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையில் இலங்கைக்கு எதிராக நிறைவேற்றப்பட்ட 30/1 பிரேரணைக்கு அப்போதைய இலங்கை அரசாங்கம் இணை அனுசரணை வழங்கியமை மிகப்பெரிய காட்டிக் கொடுப்பு என பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இலங்கைப் படையினர் மனித உரிமைகளை மீறியதாகக் குற்றம் சுமத்தி, ஐக்கிய நாடுகளின் மனித உரிமை பேரவையினால் 2015ஆம் ஆண்டு தயாரிக்கப்பட்ட அறிக்கைக்கு இலங்கை அரசாங்கம் ஆதரவை வழங்கியதாக அவர் நினைவூட்டியுள்ளார்.

ஐக்கிய நாடுகள் சபையின் விதிமுறைகளுக்கு அப்பாற் சென்று 2011ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகளின் பொதுச் செயலாளரினால் நியமிக்கப்பட்ட மூவர் அடங்கிய குழுவின் அறிக்கையை அடிப்படையாகக் கொண்டே 2015ஆம் ஆண்டு பிரேரணை தயாரிக்கப்பட்டிருந்ததாகவும் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ குறிப்பிட்டுள்ளார்.

யுத்தம் நிறைவடைந்த காலம் முதல் இலங்கை பாதுகாப்பு தரப்பினருக்கு எதிராக பல்வேறு தரப்பினரால் முன்வைக்கப்பட்ட அடிப்படையற்ற குற்றச்சாட்டுக்களை ஐக்கிய தேசியக் கட்சி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மற்றும் மக்கள் விடுதலை முன்னணி ஆகியன உள்ளடங்கிய நல்லாட்சி அரசாங்கம் ஏற்றுக் கொண்டிருந்ததாகவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

இந்த விடயங்களை கருத்திற் கொண்டே ஐக்கிய நாடுகளின் மனித உரிமை பேரவையினால் நிறைவேற்றப்பட்ட 30/1 தீர்மானத்திலிருந்து விலக தீர்மானித்துள்ளதாக பிரதமர் மகிந்த ராஜபக்ஷ குறிப்பிட்டுள்ளார். (ம)

## மனித உரிமை...

இணையத்தளத்தில் வெளியாக்கப்பட்டுள்ளது.

2015ஆம் ஆண்டு முதல் அரசாங்கம் நல்லிணக்கம், பொறுப்புக்கூறுதல், மனித உரிமை சம்பந்தமாக இந்த பிரேரணையில் வலியுறுத்தப்பட்டுள்ள விடயங்களில் சில முன்னேற்றங்கள் உள்ளன.

எனினும், தண்டனைகளில் இருந்து தப்புதல், நிறுவகங்கள் மறுசீரமைப்பு போன்ற விடயங்களை அரசாங்கம் உரிய வகையில் கையாளாத காரணத்தினால் மீண்டும் மனித உரிமை மீறல் சம்பவங்கள் பதிவாக ஏதுவாக அமைந்தன.

அதேநேரம் 30/1 மற்றும் 40/1 பிரேரணகளுக்கு இலங்கை அரசாங்கம் வழங்கிய இணை அனுசரணைகளில் இருந்து விலகுவதற்கான சமிக்ஞைகள் நல்லிணக்கம், பொறுப்புக்கூறல் மற்றும் மனித உரிமை ஆகிய விடயங்கள் குறித்த கரிசனையை ஏற்படுத்தியிருப்பதாக மனித உரிமைகள் ஆணையாளர் குறிப்பிட்டுள்ளார்.

30/1 பிரேரணையில் முழுமையான இலக்கு பாதுகாக்கப்பட வேண்டும் என்பதுடன் பாதிக்கப்பட்டவர்களுக்கான நீதி வழங்குதல் கடந்த கால மனித உரிமைகள் மீறல்கள் மீள் இடம்பெறாமையை உறுதி செய்தல் மற்றும் சமாதானம், நிலையான அபிவிருத்தியை ஊக்குவித்தல் என்பன கட்டியெழுப்பப்பட வேண்டும்.

இதன்படி இந்த பிரேரணையின் பரிந்துரைகளை இலங்கை அரசாங்கம் முழுமையாக அமுலாக்குவதற்கு ஊக்குவிப்பதாகவும் ஐக்கிய நாடுகளின் மன்ித உரிமைகள் பேரவை மற்றும் மனித உரிமை பொறிமுறைகளுடன் சாதகமாக ஒத்துழைத்து செயற்படுமாறும் ஆணையாளர் மிச்செல் பெச்லெட் தெரிவித்துள்ளார். (ம)

## ஜெனி...

ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளரினால் நேற்று வெளியிடப்பட்ட அறிக்கையிலேயே மேற்படி விடயம் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

இலங்கையில் உள்ள அனைத்து சமூகங்களைச் சேர்ந்தவர்களும் விரும்பும் அமைதியான சமுதாயத்தையும், நிலையான வளர்ச்சியையும் அடைவதற்கு தீர்மானம் 30/1 ஐ முழுமையாக அமுல்படுத்த வேண்டும் என ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் மிச்சேல் பெச்லெட் அழைப்பு விடுத்துள்ளார்.

30/1 தீர்மானத்தில் உள்ள கடமைகள் பல தசாப்தங்களாக ஆயுத மோதல்கள், பயங்கரவாதம் மற்றும் சர்வாதிகாரத்தின் மரபுகளை வெல்ல முற்படும் அனைத்து சமூகங்களின் அபிலாஷைகளையும் பிரதிபலிக்கின்றன என்றும் மிச்சேல் பெச்லெட் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் இலங்கையில் 19ஆவது அரசியலமைப்பு திருத்தத்தின் கீழ் பல நிறுவனங்கள் சுயாதீனமாக்கப்பட்டு பலப்படுத்தப்பட்டுள்ளன என்றும் அவர் சுட்டிக் காட்டினார்.

எனவே சித்திரவ்தை மற்றும் பிற மனித உரிமை மீறல்கள் தொடர்பான அனைத்து குற்றச்சாட்டுகளையும் உடனடியாக விசாரித்து வழக்குத் தொடரவும், நீண்டகாலமாக இடம்பெற்றுவரும் பொறுப்புக்கூறலை உறுதி செய்வதற்கு அதிக முன்னுரிமை அளிக்கவும் அவர் அரசாங்கத்தை வலியுறுத்தியுள்ளார். (ம)

## 19 இலட்சம்...

ஸ்ரேலிங் பவுண்ஸ் என்பவற்றை திருடிச் சென்றுள்ளதாக நெல்லியடி பொலிஸில் முறையிடப்பட்டுள்ளது.

நேற்று புதன்கிழமை முற்பகல் கரவெட்டி அரசடிப் பகுதியில் இடம் பெற்ற இச்சம்பவம் தொடர்பாக தெரியவருவதாவது.

வெளிநாட்டிலிருந்து கோவிற்கடவை பிள்ளையார் கோவில் ஆலயத்தில் நேர்த்திக் கடனை முடிப்பதற்காக கடந்த 11ஆம் திகதி செவ்வாய்க்கிழமை வந்திருந்தவர்களின் வீட்டிலேயே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

முற்பகல் 11.30 மணிக்கு ஆலயத்துக்கு சென்றவர்கள் பிற்பகல் 1.30 மணிக்கு மீண்டும் வீட்டுக்கு வந்தபோது வீட்டுக் கதவு உடைக்கப்பட்டு அங்கிருந்த அறையில் வைக்கப்பட்டிருந்த அலுமாரி உடைக்கப்பட்டு தங்க நகைகளும் மற்றும் வெளிநாட்டு பணமும் திருடப்பட்டுள்ளது.

இதுதொடர்பில் நெல்லியடி பொலிஸில் செய்யப்பட்ட முறைப்பாட்டை அடுத்து பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-60)


கொவிசெத உத்தியோகபூர்வ முடிவுகள் NLB
சீட்டிழுப்பு திகதி 19-02-2020
சீட்டிழுப்பு இலக்கம் 2397
I 23 50 56 72

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு திகதி 19-02-2020 சீட்டிழுப்பு இலக்கம் 1019
X 3 9 4 3 6 8

தன நிதானய
திகதி - 2020.02.19
சீட்டிழுப்பு இலக்கம் - 267
V 01 03 37 49

மெகா பவர்
திகதி 2020/02/19
சீட்டிழுப்பு இலக்கம் 500
H 06 08 27 55 64

அத கோடிபதி
சீட்டிழுப்பு இல: 888
வர்ணம் : இளஞ்சிவப்பு
சீட்டிழுப்பு திகதி: 2020.02.19
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 54,293,855/-
வெற்றி இலக்கங்கள் 11 30 37 40 D

சனிக்கிழமை அதிர்ஷ்டம்
சீட்டிழுப்பு இல.: 3303 திகதி: 2020.02.19
பச்சை புதன்கிழமை
வெற்றி இலக்கங்கள் 01 20 26 36 H
அடுத்த திங்கட்கிழமை ஜக்பொட் 34,080,870/-

ராசி அதிர்ஷ்டம்
திகதி 19.02.2020 வெற்றி வாரம் 2774 வர்ணம் பச்சை
வெற்றி இலக்கங்கள் சிம்மம் 11 14 59 62
வியாழக் கிழமை வெற்றிப் பொதி ரூ. 2,951,566
ரூ.500 பரிசுக்குரிய 6 1 5 2
ரூ.100 பரிசுக்குரிய 1 2 0
டபல் சான்ஸ் விசேட இல.
2020.02.20 ம் திகதி வியாழக் கிழமை கபிலம் நிற டிக்கட்டுக்களாகும்
வெற்றி பெற்ற சீட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்

සංවර්ධන වාසනාව
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 324
சீட்டிழுப்பு திகதி 19.02.2020 நீலம்
ஆங்கில எழுத்து M
வெற்றி இலக்கங்கள் 24 33 50
விதி எண் 3
அடுத்த சுப்பர் பரிசுப்பொதி ரூ.52,054,076
2020/02/21 ம் திகதி வெள்ளிக் கிழமை சிவப்பு நிற டிக்கட்டுகள் சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.
அபிவிருத்தி லொத்தர் சபை
356, டொக்டர் கொல்வின் ஆர் டி சில்வா மாவத்தை, யூனியன் பிளேஸ், கொழும்பு 02. www.dlb.lk

# யாழ் - சென்னை இடையே தினமும் விமான சேவை

## யாழ்.வந்த அதிகாரிகள் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையத்திலிருந்து சென்னை விமான நிலையத்துக்கான பயணிகள் விமான சேவை வரும் மார்ச் தொடக்கம் வாரத்தில் 7 நாட்களும் இடம் பெறும் என்று இந்திய விமான நிறுவனம் அறிவித்துள்ளது.

மேலும் யாழ்ப்பாணம் - சென்னை இடையேயான விமானக் கட்டணம் அதிகரிப்புக்கு இரண்டு மடங்குவரி அறவிடப்படுவதாக தெரிவிக்கப்படும் குற்றச்சாட்டை நிராகரித்துள்ள யாழ்ப்பாணம் விமான நிலைய அதிகாரிகள், நாட்டின் அனைத்து விமான நிலையங்களிலும் ஒரே அளவிலான விமான நிலைய வரி அறிவிடப்படுவதாகத் தெரிவித்தனர்.

யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்துள்ள இந்தியன் எயார் நிறுவனத்தின் துணை நிறுவனமான அலையன்ஸ் எயர் நிறுவனத்தின் அதிகாரிகள் யாழ்ப்பாணம் வணிகர் கழகத்தின் பிரதிநிதிகளை வணிகர் கழகத்தில் சந்தித்தனர்.

இதன்போது யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையத்துக்கும் சென்னைக்கும் இடையிலான விமான சேவை கடந்த 3 மாதங்கள் இடம்பெற்று வரும் நிலையில் அதனால் வடக்கு மக்களுக்கு ஏற்பட்டுள்ள சாதக பாதக நிலைகள் தொடர்பில் அலைன்ஸ் எயார் அதிகாரிகள் கேட்டறிந்தனர்.

"யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையம் ஊடாக சென்னைக்கு பயணிப்போரின் எண்ணிக்கை அதிகரித்து வருவதனால் தற்போது வாரத்தில் 3 நாள்கள் இடம்பெறும் சேவை இந்த மாத இறுதியில் அல்லது மார்ச் மாத முதல் வாரத்திலிருந்து வாரத்தில் 7 நாட்களும் விமான சேவை ஆரம்பிக்கப்படவுள்ளது.

யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையத்திலிருந்து சென்னைக்கான விமான சேவைக் கட்டணம் அதிகரித்துக் காணப்படுவதற்கு இரட்டை வரி காரணம் என ஊடகங்களில் செய்தி வெளியிடப்படுகிறது. ஆனால் அது உண்மைக்குப் புறம்பானது. நாட்டில் அனைத்து சர்வதேச விமான நிலையங்களிலும் (கட்டுநாயக்க, மத்தள) பயணி ஒருவரிடம் 60 டொலர் அறிவிடப்படுகிறது.

எனினும் கட்டுநாயக்க மற்றும் அம்பாந்தோட்டை மத்தள விமான நிலையங்களிலிருந்து சென்னைக்கு புறப்படும் விமானங்கள் 150 பயணிகளுக்கு மேல் பயணிக்க முடியும்.

எனினும் யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையத்தின் விமான ஓடு பாதை உள்ளிட்ட உட்கட்டமைப்பு வசதிகள் காரணமாக 70 பயணிகள் பயணிக்கும் விமானமே சேவையில் ஈடுபட முடியும். அதில் சுமார் 50 பயணி களை ஏற்றிச் செல்ல முடியும்.

இதனால் எரிபொருள் உள்ளிட்ட செலவுகள் காரணமாக சேவைக் கட்டணம் அதிகரித்துக் காணப்படுகிறது. அத்துடன், யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையம் ஊடாக சென்னைக்கு பயணிக்கவுள்ளோர் 3 வாரங்களுக்கு முன்னர் முற்பதிவு செய்து கொண்டால் கட்டணம் குறைந்த பயணச் சீட்டைப் பெற்றுக் கொள்ளமுடியும்.

குறுகிய காலத்துக்குள் பயணச்சீட்டை பதிவு செய்தால் அதிகளவு கட்டணம் அறவிடப்படும் என்று அதிகாரிகள் தெரிவித்தனர். (ம)


**சிறுநீரகம் தேவை**

O,B இரத்த வகையைச் சேர்ந்த சிறுநீரகம் தேவை. (1930)

**076 239 9874**

**நெல்லியடியில்...**

வெளிநாடுகளுக்கான துரித தபால் பொதிகள் சேவை

லண்டன் - 540/=
ஜேர்மனி - 640/=
இத்தாலி - 690/=
கனடா - 950/=
நெதர்லாந்து - 690/=

சலுகை அட்டை (Discount Card) பெற வேண்டும் எனும் நிபந்தனை இல்லை.

**076 443 1576**

**அருள்**

பெற்றோல் செற் எதிரில் பிரதான வீதி, நெல்லியடி. (C-9193)



**விற்பனைக்கு**

1. 60 அடி x 20அடி அளவுள்ள கொட்டகை (SHED)
2. விளம்பர பலகை 16 அடி x 8 அடி Stand Pipe என்பவற்றுடன்.
3. ரியூட்டறி தளபாடங்கள்

தொடர்புகளுக்கு : 407, பருத்தித்துறை வீதி, இருபாலை சந்திக்கு அருகில். (2319)

**விரைவு பொதிகள் சேவை**

விசேட விலை குறைப்பு

UK-550*/=Kg

DELIVERY IN 3-5 DAYS

எமது நேரடிக்கிளைகள்

● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● சாவகச்சேரி ● நெல்லியடி ● கொடிகாமம் ● திருகோணமலை ● புதுக்குடியிருப்பு ● சுன்னாகம் ● மானிப்பாய் ● மருதனார்மடம் ● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை

0768226240 V2 TRAVELS (C-8785)

வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத் தருகின்றோம்

**றாஜ் நகை மாடம்**

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், திருகோணமலை ஆகிய பகுதிகளில் வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தை தந்து வாங்கப்படும்.

தொடர்பு: றாஜ் - 077 679 6623 (2330)

**பாதுகாப்பு உத்தியோகத்தர் தேவை**

யாழ்ப்பாணத்தில் இயங்கும் நிறுவனம் ஒன்றுக்கு பாதுகாப்பு உத்தியோகத்தர் (ஆண் - பகல், இரவு கடமை) தேவை.

தொடர்பு : 076 097 3127

**வலம்புரி** விளம்பரத் தொடர்புகளுக்கு 021 221 7603 021 567 1532


# மரண அறிவித்தல்

பிறப்பு 02 ❋ 04 ❋ 1942



இறப்பு 19 ❋ 02 ❋ 2020

## செல்வரட்ணம் பரமேஸ்வரன்

*மானிப்பாயை பிறப்பிடமாகவும் உரும்பிராய் தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட செல்வரட்ணம் பரமேஸ்வரன் அவர்கள் நேற்று 19.02.2020 புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.*

*அன்னார் காலஞ்சென்ற செல்வரட்ணம் - மகேஸ்வரி தம்பதிகளின் மூத்த மகனும், காலஞ்சென்ற சோமசுந்தரம் - பாக்கியம் தம்பதிகளின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற தவமணி அவர்களின் பாசமிகு கணவரும் கோபிகிருஷ்ணாவின் அன்புத் தந்தையும் பாலகணேசன், பாலசுந்தரம், பாலகுமாரி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு சகோதரனும் கமலினிதேவி, புவனேஸ்வரி, சுகுமார் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.*

*அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (20.02.2020) வியாழக்கிழமை காலை 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் இடம் பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வேம்பன் இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும் இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.*

சிவகுலவீதி,
உரும்பிராய் மேற்கு, உரும்பிராய். (C-9283)

தகவல் : குடும்பத்தினர்.
077 124 7870

# கண்ணீர் அஞ்சலி

பிறப்பு 02 • 04 • 1942



இறப்பு 19 • 02 • 2020

எமது வலம்புரி நிறுவனத்தில் பணிபுரிந்த
பரமேஸ்வரன் கோபிகிருஷ்ணா அவர்களின் தந்தையார்

## செல்வரட்ணம் பரமேஸ்வரன்

*(உரும்பிராய்)*

அவர்கள் காலமான செய்தியறிந்து ஆழ்ந்த துயர் அடைவதுடன் அவரின் குடும்பத்தினருக்கு எமது அனுதாபத்தை தெரிவித்துக் கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

- வலம்புரிக் குடும்பம்

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 20.02.2020 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.